# குண்டு சேர்



எஸ். ஏ. உதயன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குண்டு சேர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியரின் பிற வெளியீடுகள்

**லோமியா – (நாவல்)**
பவள சுந்தரம்பாள் தமிழியல் விருது 2008
இலங்கைஇலக்கியப்பேரவை விருது 2008
வட மாகாண சிறந்த நூல் விருது 2008

**தெம்மாடுகள் – (நாவல்)**
பவள சுந்தரம்பாள் தமிழியல் விருது 2009
வட மாகாண சிறந்த நூல் விருது 2009

**வாசாப்பு – (நாவல்)**
வடமாகாண சிறந்த நூல் விருது2010
இலங்கை அரசின் சாகித்திய விருது 2010

**சொடுதா – (நாவல்)**
இலங்கை அரசின் சாகித்திய விருது 2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குண்டு சேர்

எஸ்.ஏ.உதயன்

எஸ். கொடகே சகோதரர்கள் பிரைவட் லிமிடட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குண்டு சேர்

©எஸ்.ஏ.உதயன்

முதற் பதிப்பு - 2012

ISBN 978-955-30-3790-9

அட்டை வடிவமைப்பு:
மேமன்கவி

வெளியிடுபவர்
எஸ். கொடகே சகோதரர்கள் பிரைவட் லிமிடட்
661, 665, 675, பி. டி எஸ். குலரத்ன மாவத்தை, கொழும்பு 10.

அச்சிட்டோர்
சத்துர அச்சகம்
69, குமாரதாஸ பிளேஸ், வெல்லம்பிட்டிய.

Gundu Sir

© S.A.Uthayan

First Edition 2012

ISBN 978-955-30-3790-9

*Cover Designed by:*
Memonkavi

*Page Setting by:*
S. Godage & Brothers (Pvt) Ltd.

*Published by:*
S. Godage & Brothers (Pvt) Ltd.
661, 665, 675, P. de S. Kularatne Mawatha, Colombo 10.

*Printed by:*
Chathura Printers
69, Kumaradasa Place, Wellampitiya.

14619/2804/350

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமர்ப்பணம்

என் அம்மா

ஆ.ரெஜினா பீரிஸுக்கு....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

**– எஸ்.ஏ.உதயன் –**

**வா**ழ்க்கை வெளியின் கணத்தெறிப்புக்களில் ஏற்படுகின்ற அனுபவங்களைச் சொல்லலாமா? வேண்டாமா? என்று என்னைத் தடுமாற வைத்த கருச்சுவீகரிப்புக்களாகவே இச் சிறுகதைகளைக் காணலாம். கதாப்பாத்திரங்களுக்காக அலைவது என்றில்லாமல் நம்மோடு இடைப்படுகின்ற சாமான்ய மனிதர்களே இக்கதைகளின் நாயகர்கள். விலக்கிவிட முடியாமல் உதறினாலும், சிதறாமல் வந்து என் பேனாவுக்குள் ஒட்டிக் கொள்ளும் மனிதர்களின் வாழ்க்கைதான் இவை.

யாராவது கேட்கலாம்.. இப்படி நடக்குமா? நடக்காது. ஒப்புக்கொள்ள முடியாது என்றெல்லாம் வாதிடுவோரும் உண்டு. நான் அவர்களுக்கு ஒன்று சொல்லுவேன். ஒன்று அவர்கள் பொய் சொல்லுகிறார்கள். அல்லது வாழ்க்கையில் அவர்களுக்கு தரிசனம் இல்லாத இன்னுமொரு பக்கம் இருப்பதை அறியாமலிருக்கிறார்கள். எது எப்படியெனினும் தமிழ் சினிமாப் படங்களிலும் தொலைக்காட்சித் தொடர்களிலும் யதார்த்தப் பிளவுகளைப் பார்த்துக் கண்ணீர் வடிப்பவர்களுக்கு சிறுகதைகளின் பிரதிபலிப்புக்களை ஒப்புக்கொள்ள முடிவதில்லை.

அதிக பாவனை, பாசாங்கு ரசங்கள் இல்லாமல் வாசகரின் மனதோடு உணர்வுப் பிரவாகத்தோடு பேச முடியுமா? எனக்குத் தெரிந்த என் நம்பிக்கையூட்டும் தமிழ் மொழியில் அதனைச் சோதனை செய்து பார்க்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனைகதை இலக்கியத்தில் ஆரம்ப எழுத்தாளனாகத் தடம் பதிக்க எனக்கு என் சிறு கதைகளே உதவின. அந்த வகையில் இலங்கையிலும், இந்தியாவிலும் பல சஞ்சிகைகளில் பிரசுரிக்கப்பட்ட எனது சிறுகதைகளில் சிலவற்றைத் தேர்ந்து ஒரு தொகுப்பாக வெளியிட வேண்டும் என எண்ணினேன். இத்தொகுப்பில் சேர்த்துக் கொள்வதற்காக என் சிறு கதைகளை எடுத்துப் படித்துப் பார்த்த போது அவைகளில் சில யதார்த்த முரணும், அதிக எத்தனிப்புமாக இருப்பதை அவதானித்து அவற்றை இத்தொகுப்பிலிருந்து விலக்கியிருக்கிறேன்.

நாம் சந்திக்கும், அல்லது நம்மைக் கடந்து போகும் சம்பவங் களுக்குள் ஆழ ஊடுருவும் போது அதில் புலப்படும் யதார்த்தம் எப்படியோ நெஞ்சில் தங்கி அலைக்கழிப்பதுண்டல்லவா. அது போல இக்கதை களும் வாசகரின் நெஞ்சில் தங்கும் என்று நம்புகிறேன்.

இத்தொகுப்புக்கு பின்னுரை வழங்கிய இலங்கையின் மூத்த கவிஞரும், கலை ஆர்வலருமாகிய திரு. மேமன்கவி அவர்களுக்கு, எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அத்தோடு எனது கையெழுத்தினை வழமை போலவே பிழையறக் கணணிப்படுத்திய தங்கை எஸ். ஸ்ரவனி சிராய்வாவுக்கும், இச்சிறுகதைத் தொகுப்பினை அச்சேற்றிய இலங்கையின் முதற்தர "கொடகே" பதிப்பகத்தாருக்கும் எனது நெஞ் சார்ந்த நன்றியினைச் சமர்ப்பிக்கிறேன்.

**எஸ். ஏ. உதயன்**
**பேசாலை – 08**
**T.P.0778960351**
**Mail:-Lomiya2009@gmail.com**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே................


குண்டு சேர் ................ 10

பாவம் சந்திரா....! ................ 18

இனி விடிந்து விடும் ................ 24

காணாமல் போனவன் ................ 30

ஊரைத் தெரிஞ்சுக்கிட்டு ................ 36

ஸ்கொலர் சிப் சோதினை ................ 41

ஓவியக் காதல் ................ 46

அபத்தம் ................ 52

பிள்ளை வரம் ................ 61

கடற்குளிப்பு ................ 68

காத்தி ப்பு ................ 75

கொதிப்பு ................ 81

யசோதா ................ 89

கிரீடம் ................ 95

ஆசை மரிப்பு ................ 100

மாற்ற மயக்கம் ................ 106



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளம் சிவப்பு... கடுமையாகி கருமையாகி இருட்டுப் போல...

அவன் இமைகளைத் தளர்த்தும் போது திரும்பவும் கறுப்பு... அது இளம் சிவப்பாகி கொஞ்சம் கொஞ்சமாக ஒரு விளையாட்டுப்.போல.. இன்னும் இமைகளை இறுக்கி மூடினான். அவன் கண்களுக்குள்ளேயே நடந்த அந்த நிறமாற்றம் மனதைத் தடவி விடுவது போலிருந்தது. அவன் வெதும்பும் போதெல்லாம் மல்லாக்கப் படுத்திருந்து உத்தரத்தில் தொங்க விட்டு எரிகிற சிம்னி விளக்கைப் பார்த்தபடி... கண்ணை இறுக்கி மூடுவதும், அந்த நிறமாற்றத்தை உணருவதுமாக நீண்ட நேரம் கிடப்பான்.

# குண்டு சேர்

"கோழி கூவக்கூடாது... இரவு விடியக்கூடாது..." விடிந்தால்...

"பள்ளிக்கூடம் போவணுமே... ச்சீ... குண்டு சேரிட கண்ணுலயும் முழிக்கக் கூடாது" அவன் மனம் பாடு பட்டுக்கொண்டிருந்தது.

வன்னிக்குள்ளிருந்து இடம்பெயர்ந்து அகதி முகாமில் இடைத்தங்கி... பின் விடுவிக்கப்பட்டு பேசாலையில் தொழிலுக்காக புதுசாகக் குடிவந்த போது... இந்த நாதியற்றுக்கிடந்த நூறு வீட்டுத்திட்ட வீடு கைகொடுத்தது. அத்திவாரத்திலிருந்து பாளமாக வெடித்து, மேலே கிளை பரப்பி ஓடும் சுவரும், அத்துவானமாய்ப் பயமுறுத்தும் தனிமையும்... வேறு வழியில்லையே என்று குடித்தனத்திற்குப் பழகிப்போயிருந்த குடும்பம்.

அப்பா கரைவலைக் கூலிக்குப் போறாரு... அம்மா இன்னும் யுத்தக் கிலி விடுபடாது படபடத்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருக்கும் ஓர் மன நோயாளி. சாப்பிடாமலே வயிறு பெருத்திருக்கும் சோகைத் தம்பியும், தங்கச்சியும். குடும்பத்தில் இவன்தான் படிக்க இலாயக்கு என்று பேசாலைப் பள்ளிக்கூடத்தில் சேர்த்து விடப்பட்ட நாளிலிருந்து ஒரே பிரச்சினையும், மனப்போராட்டமும்தான்.

"சே.... என்ன மனுசன் குண்டு சேர். இனி அந்தப் பள்ளிக்கூடம் வேணாம்."

அவன் அந்தத் தீர்மானத்தில் இன்னும் உறுதிப்பட்டுக்கொண்ட படி நித்திரை வராமல் புரண்டான். இன்று பள்ளிக்கூடம் விட்டு வீட்டுக்கு வந்த கையோடு ஒரு நடை நடந்து பக்கத்தில் உள்ள துள்ளுக் குடியிருப்புப் பள்ளிக்கூடத்தை ஒரு நோட்டம் பார்த்து விட்டு வந்து விட்டான்.

"இது நல்ல பள்ளிக்கூடம்..." அவன் நினைப்பையும் சாதகமாக்கி மனசோடு வாக்கு வாதப்படுகிறான்.

அகதி முகாமிலிருந்து பள்ளிக்கூடம் வாற பிள்ளைகளில் பாதிப் பேர் சப்பாத்தும் போடுறதில்ல. புத்தகப் பையும் இல்லாமல்தானே வருதுகள். அப்ப ஏன் குண்டு சேர் எனக்கு அடிக்கணும். அவனுக்கு குண்டு சேரின் மீதுள்ள வெறுப்பு வளர்ந்து கொண்டே இருந்தது.

திரும்பவும் கண்களை இறுக்கி மூடினான். இப்போது கறுப்பு உடைந்து சிதறுவது போலவும், வட்ட வட்டமாய் குமிழி போல ஒன்றன்பின் ஒன்றாகக் கிளம்பி வெடிப்பது போலவும் இருக்க மெது வாகக் கண்களைத் தளர்த்தினான். அந்தக் கறுப்பு கருஞ்சிவப்பாகி, பின் வெளிர்ந்து கலைந்து போகக் கண்களைத் திறந்தான்.

பள்ளிக்கூட நினைப்புத் திரும்பவும் வந்து ஒட்டிக்கொண்டது. அந்த நினைப்பில் குண்டு சேர் தவிர்க்க முடியாமல் வந்து கொண்டே யிருந்தார். அவரும் அவரிட நடையும்... தொழுக்கு தொழுக்கென்று ஒரு பக்கம் சாய்ஞ்சி சாய்ஞ்சி... சாந்தனைப் போல. மெனிக் பாமில் தன்னோடு எப்போதுமே சாப்பாட்டு வரிசையில் நின்ற சாந்தனின் நினைப்பு... அவனும் இப்படித்தான்... காலில் வெடிவிழுந்து அவதிப் பட்டான்.. சரியான வைத்தியமில்லாம காலக் கழட்டிப் பிளாஸ்ரிக் கால் போட்டிருக்கு. அவனை மாதிரி சாய்ஞ்சுதான் குண்டு சேரும் நடக்கிறார். "பாவம்... இவருக்கு ஏன் பாவம் பாக்கணும்.. யெங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காச்சட்டைய உரிஞ்சு குண்டியில எப்பிடி அடிக்கலாம்" சிலிர்த்துக் கொண்டவன் பின் பக்கத்தைத் தடவிப் பார்த்தான். வலி இன்னும் மிச்சமிருந்தது.

"பள்ளிக்கூடத்துக்கு எதுக்குடா வாறீக.. ஆளையும் கோலத்தை யும் பாரு. ந்தா... தலைக்கு எண்ணெய் வைக்காம காய்ஞ்சு பரட்டை யாக் கிடக்கு. நாளைக்கு மயிரு வெட்டி மனுசன் மாதி வரல் லாட்டி..." வெருட்டினவர் சும்மா விடயில்ல. சடக்கு சடக்கென்டு ரெண்டு இழுவ பின்னால இழுத்திட்டுத்தான் விட்டார். முன்பும் ஒரு நாள் இப்பிடித்தான் அவனது கொப்பியை வாங்கிப் பார்த்தவர் தூக்கி வீசிப்போட்டார்.

"ஆறாமாண்டு படிக்கிற புள்ளய்க்கு இன்னும் எழுத்துத் திருத்த மில்ல... ஒரு வரி ஒழுங்கா எழுதியிருக்கா பாரு..." அன்றைக்கும் அடி தான். ஆனால் இன்று அவனது காற்சட்டையைக் கழற்றி ரெண்டு போடு போட்டதை அவனால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அந்தக் குண்டு சேரையும் மன்னிக்க முடியவில்லை. அதை மறக்க நினைக்கிற போதெல்லம் பயலுக பார்த்துச் சிரித்தது காதில் கேட்டுக் கொண்டே இருந்தது.

அவன் கண்களைத் திறந்து வெளியில் பார்த்தான். இருட்டுக் கட்டைதான். அந்த இருட்டையே தொடர்ந்து பார்த்துக் கொண்டி ருந்தவனுக்கு விழிகள் களைத்துப் போகக் கண்களை மூடினான். நித்திரையாகி விட்டான்.

காலையில் எழுந்தவன் வீடுவீடென்று வெளிக்கிட்டு ஆளுக்கு முன்னுக்கு பள்ளிக்கூடத்தில் போய் நின்றான். குண்டு சேர் பள்ளிக் கூடத்திற்கு வாறதுக்கு முன்னமே அதிபரிடம் கதைத்து அலுவலை முடித்துவிட வேண்டும். பள்ளிக்கூடத்தை விட்டு வெளியேறி விட வேண்டுமென்பதில் அவனுக்குக் குறி மாறுவதாயில்லை.

"சேர்.. சேர்.. சேர்..." கையால் சைகை செய்து அவன் அவசர மாக அதிபரை அழைத்தபோது அவருக்கு முதலில் கோபம்தான் வந்தது. ஒரு பொடிப்பயல் அவரை அலுவலகத்திற்கு வெளியில் நின்று கொண்டு கையை ஒரு சாதியாக ஆட்டி ஆட்டி அழைப்பதென் றால் என்னவாக இருக்கும்..? அதிபர் அந்த வினோதத்தை முழுவது மாக அனுபவிக்க ஆசைப்பட்டார். எழுந்து அவனிடமே வந்தார்.

"என்னடா?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சேரு நீங்க எய்ன் அப்பாவக் கூட்டித்து வாங்க... நான் துள்ளுகுடியிருப்புக்கு போறன்... இனி அங்கதான் படிப்பன்."

"ஏன் உனக்கு இங்க என்ன பிரச்சினை?"

"சேர்... நீங்க கூட்டித்து வாங்களன் சொல்றன்" என்றவன் அதிபரின் கையைப் பிடித்துக்கொண்டான்.

"சேர்... ஏன்ட புறப்புக் கொப்பியத் தாங்க சேரு... நான் போவனும்." அவனது தவித்த வார்த்தைகளுக்குப் பின்னால் ஒரு துன்பம் இருக்கிறதாக அதிபருக்குப்பட்டது. இவ்வளவு வெள்ளெனவே பள்ளிக்கூடத்துக்கு வந்து அவன் பிரச்சினையை அவனே தனியனாக நின்று எதிர்கொள்வதைப் பற்றி அதிபர் யோசிக்கிறார்.

"சேரு.. ஐயோ குண்டு சேரு வரப்போறாரு சேரு.."

அவனது பிரச்சினை அவன் சொல்லும் குண்டு சேரில்தான் இருப்பதாக அதிபருக்குப் புரிந்தது. அவன் வார்த்தைக்கு வார்த்தை குண்டு சேரு என்று அருள்சீலன் மாஸ்ரரைத்தான் சொல்கிறான் என்னும் போது அதிபருக்குச் சிரிப்பு வந்தது.

அருள்சீலன் மாஸ்ரர் மன்னாரில் இருந்து வருகிறவர். மற்றவர்கள் தூர இடத்திலிருந்து மோட்டார் சைக்கிளில் வரும்போது இவர் மட்டும் பஸ்ஸில்தான் வருகிறார். அவருக்கு முள்ளந்தண்டில் ஏதோ பிரச்சினையென்று வைத்தியரின் எச்சரிப்பிற்கு பிறகு பஸ்ஸில்தான் வரப்போவதாக தீர்மானம் எடுத்திருந்தார்.

உயரமாக ஆனால் குண்டாக இருக்கும் அவருக்கு திருமணம் ஆகி எட்டு வருசமாகியும் குழந்தைப் பாக்கியம் இல்லாதது ஒரு குறையென்று பள்ளிக்கூடத்தில் ரீச்சர்மார் சொல்லி அதிபர் கேட்டிருக்கிறார்.

"ஏண்டா குண்டு சேரு உனக்கு என்ன செய்தாரு?"

"என்ன செய்தாருவா... காச்சட்டய உரிஞ்சு குண்டியில வடலிப் பிரம்பால... ஐயோ... அத நினைக்கவே பயமாயிருக்கு. ராவு நித்திரையில்ல சேரு... நா... பள்ளிக்கூடத்த விட்டுப் போறன்... புறப்புக் கொப்பியத் தாங்க சேரு.."

அதிபருக்கு இந்தப் பொடிப்பயலுக்குள்ள கிடந்து அல்லாடுகின்ற பிரச்சினையை என்னவென்று பார்க்க வேண்டும் போலிருக்கிறது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரம் செல்லச் செல்ல பிள்ளைகள் ஒன்று ஒன்றாயும்... கூட்டம் கூட்டமாயும் வந்து கொண்டிருந்தார்கள். அதுவேறு அவனுக்கு எரிச்சல் மூட்டியது. அவனுக்கு கண் முழுக்க வெளிவாசலில் நிலைத்திருந்தது.

டியூட்டி செய்கிற பிள்ளைகள்தான் முதல் வந்து கொண்டிருந் தார்கள். அவன் வாசலையும், அதிபரின் முகத்தையும் பார்த்துக் கொண்டிருப்பதில் இன்னும் நேரம் போய்க் கொண்டிருந்தது. இப்போது ரீச்சர்மாரும் வந்துகொண்டிருந்தார்கள். "ஐயோ.. குண்டு சேர் வந்திடுவாரே..." அவன் அங்கலாய்ப்பில் எண்ணெய் ஊற்றுவது மாதிரி, சுந்தரி ரீச்சர் அவசரமாக வந்து அதிபரிடம் என்னவோ சொல்ல...

"இதில நில்லு வாறன்" என்றுவிட்டு அதிபர் வேகமாக அறைக் குள்ளே போய் அலுமாரியைத் திறந்து எதையோ தேட ஆரம்பித்து விட்டார். அவனுக்கு சுந்தரி ரீச்சர் மீதும் கோபம் வருகிறது.

"ப்டாரு... குழப்பிட்டு போறத... அவுகளும்... அவுகட நிறமும்..." அவனுக்கு அந்த ரீச்சரைத் திட்டுவதற்கு அவவின் கறுப்பு நிறம் தான் கிடைத்தது.

இரவும் அவனை வெகுநேரம் கண்ணுக்குள்ளேயே நின்று அலைக் கழித்த கறுப்பு நிறத்தை நினைத்துக் கொண்டான். அனிச்சையாக இப்போது கண்களை மூடி... இமைகளை இறுக்கிப் பார்த்தான். திரும்பவும் சிவப்பு... கருஞ்சிவப்பு, அதன் பின்னால் ஒட்டிக் கொண்டே கறுப்பும் வர... அது வேண்டாமே என்று சட்டெனக் கண்களை விழித்துக்கொண்டான். இரவிலே ஒரு மாதிரி அந்த நிற மாற்றம் பயமுறுத்துவதும், பகலிலே அதுவே ஜாலியாக இருப்பது போல.... எல்லாம் வெளிச்சத்தைப் பொறுத்துத்தான் என்பது மட்டும் அவனுக்குப் புரிந்தது. பகலிலே சூரியனும், இரவிலே குப்பி விளக்கும் இமைகளுக்குள் ஓடுகின்ற இரத்தத்தை சிவப்பு, கறுப்பாக ஊடுருவிக் காட்டுகின்றனவோ? அவன் வயசுக்கு இந்த ஆராய்ச்சி தேவை யில்லை என்று பட்டது. ஏனோ தெரியவில்லை அவன் பிரச்சினைக்கும், இந்த நிறமாற்றத்திற்கும் முடிச்சுப் போட்டுப் பார்ப்பது வினோதம் தான்.

இப்போது கிட்டத்தட்ட எல்லோரும் வந்து விட்டார்கள் போல. அவனுக்கு இயல்பாகவே வெட்க உணர்வு தலை காட்டத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துவங்க எதற்கும் மறைவாக நின்றுகொள்ளுவோமேயென்று அங்கிருந்த தூணின் பின்னால் ஒடுங்கினான். வந்திருப்பவர்கள் எல்லோருமே அவனைப் பார்ப்பதாக உள்ளுணர்வு..

"ச்சே.. கெதியாப் போவணும்..." டக்கென்று தோன்றிய தைரியத் தோடு அதிபர் அவனைப் பார்க்கத் தக்கதாக போய் அவர் முன் நின்று கொண்டான்.

"சேரு... ஐயோ... குண்டு சேரு வந்துடுவாரு சேரு."

"அதுக்கு..."

"நாம் போவணும்."

"குழப்படி செய்தா சேர் அடிப்பாருதானே. அதுக்கு பள்ளிக் கூடத்த விட்டு ஓடுறதா?"

"ஓஞ்சேரு... ஐயோ எனக்கு நிம்மதியே இல்ல. நாம் போவணும்."

அதிபருக்கு ஆரம்பத்திலிருந்தே அவன் வீத்தியாசமாகத்தான் தெரிந்தான். அவன் நிற்கிற நிலையும், கதைக்கிற தோற்றமும், பெரிய மனுசத்தனமான வார்த்தைகளும். இது இவன் வீட்டுப் பழக்கமாக இருக்க வேண்டும். நல்ல வாயாடித் தாய்க்கும், தகப்பனுக்கும் பிறந்திருப்பான். அல்லது அகதியாய்ப் பிரதேசம் திரிந்தபோது அவன் பார்த்தவைகளின் வெளிப்பாடாய் இருக்கும். அதிபர் அவனைக் கூர்ந்து பார்த்தார்.

வெளிர் வெண்மை முற்றாகத் துறந்து, பழுப்பேறி கசங்கிப் போன சட்டை, கட்டையாய்ப் போய்விட்டதென்று அடிப்பக்கம் உருவி விட்ட நீலம் மறந்து போன காற்சட்டை, அதுவும் பின்பக்கம் தேய்ந்து வெளிறிய இடத்தில் கோடாக வெடித்திருந்தது. தலை முடி வளர்ந்து கன்னக் கதுப்பில் பரவி காதினையும் மறைத் திருந்தது. மணிக்கட்டுக்கையில் சிவப்பாய்க் கட்டின கோயில் நூல் அழுக்கேறி திரண்டு போயிருந்தது. டையுமில்லை, சப்பாத்து மில்லை, முழங்காலுக்கடியில் வட்டமாய் ரணம் காட்டியபடி புண் ணொன்று அது கவனிக்கப்படாமல் இருப்பது தெரிந்தது. அவனைப் பார்த்து ஆத்திரப்படுவதா..? இரக்கப்படுவதா..? இரட்டைக் குறிப்பில் அவனைப் பார்த்தபடியே அதிபர் சற்றுநேரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்றார்.

"டேய் இப்பிடிப் பள்ளிக்கூடத்துக்கு வந்தா சேர் அடிப்பார் தானே..?" என்று சொல்ல, அவன் தலையைக் குனிந்து தன்னையே ஒரு தடவை பார்த்தான். முகம் கோணலாய் வேதனையைக் காட்டியது.

"அப்பா என்ன செய்யுறார்?"

"கரவலைக்கு இழுப்புக்குப் போறாரு."

"அம்மா..."

தயங்கினவன் பின்பு சொன்னான்.

"அதுக்கு மூளக் கிறுக்கு. பங்கரில செல்லடிச்சு ஆக்கள் செத்த நேரம் பிரேதத்துக்கு மேலே கிடந்து... பயந்திட்டா."

அதிபர் அவனிடம் கேள்வி கேட்டதை நிறுத்தி விட்டார்.

இடப்பெயர்வுக்குப் பின்னால் புதிதாகப் பள்ளிக்கூடம் வந்து சேர்ந்த பிள்ளைகள் சொல்லுகின்ற அவலச் செய்திகளைக் கேட்டுப் பழக்கப்பட்டிருந்தாலும்... இப்போது அவரின் கண்கள் கலங்குவதை நிறுத்த முடியவில்லை. வாசலில் அருள்சீலன் மாஸ்ரரின் குரல் கேட்க, அவன் நிமிர்ந்து பார்த்துவிட்டுச் சட்டெனத் தலையைக் குனிந்து விட்டான்.

"குட் மோனிங் சேர்..."

"குட் மோனிங் உங்களப் பற்றித்தான் முறப்பாடு..."

"யாரு... ஓ! பெரிய மனுசன் என்னவாம்?" அவர் சொல்லிக் கொண்டு அவனுக்குப் பக்கத்தில் வர, அவனுக்கு அச்சுத் தெறித்தது. நத்தை கூட்டுக்குள் சுருங்குவதைப் போல சுருங்கினான்.

அதிபர்தான் பதில் சொன்னார்.

"அடிச்சீங்களாம். பள்ளிக்கூடத்த விட்டிட்டுப் போகணுமென்டு நிக்கிறான்..?"

அருள்சீலன் மாஸ்ரர் சற்றுநேரம் எதுவும் கதைக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனின் கையைப் பிடித்து அருகே இழுத்தார். அவன் வரமாட்டேன் என்பதுவாய் அடம்பிடித்து பின் வழமை போல அவரின் கைகளுக்குள் அடங்கினான். அருள்சீலன் மாஸ்ரர் அவனின் தலையைக் கோதிவிட்டுக்கொண்டு சொன்னார். “இந்தத் தலமுடிய வெட்டச் சொல்லி எத்தின நாள் சொன்னன். ஏன் வெட்டயில்ல தம்பீ...” அவன் குற்றம் குறுகுறுக்க அதிபரின் முகத்தைப் பார்த்தான்.

“எனக்குத் தெரியும் சேர். இவன் வெட்ட மாட்டான். அதுதான் இண்டைக்கு ஒரு முடிவோட வந்தன். இவனப் புது மனுசனாக் கிறது. புது சேட்டும், காற்சட்டையும் தைக்கக் குடுத்திட்டன். இப்ப சலூனுக்கு கூட்டிக்காண்டு போய் முடிவெட்டப் பண்றது. ரையும், சப்பாத்தும் இதில இருக்கு.” அவர் கொண்டு வந்த பையைக் காட்டினார்.

“வெளிக்கிடு தம்பீ...”

அதிபர் அருள்சீலன் மாஸ்ரரை மரியாதையாய்ப் பெருமையோடு பார்த்தார்.

“இவனப் போல எத்தின பிள்ளகள்... எங்களால செய்யக் கூடிய சின்ன உதவிகள செய்யிறதில இருக்கிற சந்தோசம் வேற ஒண்டிலுமில்ல சேர்...”

அருள்சீலன் மாஸ்ரர் வரவுப் பதிவில் கையெழுத்து வைத்துவிட்டு வெளிக்கிட, அவரின் கையைப் பிடித்துக்கொண்டு ஒருவிதத் துள்ளலோடு அவன் நடப்பதைப் பார்த்துக்கொண்டிருந்தார் அதிபர். அவருக்கு ஏனோ தெரியவில்லை குண்டுசேர் கோலியாத் மாதிரியும், அவன் தாவீது மாதிரியும் தெரிய சிரித்துக் கொண்டார்.

**– வெளிச்சம் 2010 மாசி –**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாதன் அந்த நூதனமான கமராவைக் கையில் வைத்துக்கொண்டு எல்லோரையும் அழைத்தார். அவசர மாய்க் குசினிக்குள் சமைத்துக்கொண்டிருந்த சந்திரா வின் கையைப் பிடித்து ஸ்வீட்டி இழுத்தாள்.

"டாடி.. போட்டோ எடுக்கிறார் அன்ரி... நீங்களும் வாங்க..."

ஸ்வீட்டி துரு துருவென்டு வடிவாயிருந்தாள். ஜீன்சும், ரீசேட்டுமாய் பிளாட்டினத்தில் கழுத்திலும், காதிலும், மெல்லியதாய் நகை. ஸ்வீட்டிக்கு ஊரில் உள்ள

# பாவம் சந்திரா....!

ஒவ்வொரு உறவுகளையும் பார்க்க ஆனந்தமாய் இருந்தது. "ஸ்வீட்டி, இது அப்பம்மா... இதுதான் அன்ரி..., இது சித்தப்பா" இப்படி எல்லோரையும் ஸ்வீட்டிக்கு அறிமுகப்படுத்திய போது அவள் அவர்களோடு கன்னங் களைச் சேர்த்து கட்டிப் பிடித்து தாராளமாய் ஒட்டிக் கொண்டபோது, ஆனந்தி என்னவோ கொஞ்சம் தள்ளியே நின்று கொண்டாள். ஸ்வீட்டிக்கு மட்டுமல்ல ஆனந்திக் கும்தான் இங்கு எல்லோரும் புதுசு. அவளுக்கு ஏனோ இங்கிருப்பவர்கள் அவ்வளவு மனசோடு ஒட்டுகிறார் களில்லை. ஏதோ ஓர் அந்நியத்தனம் அவளுக்கு இருந்து கொண்டிருந்தது.

ஆனந்தியை நாதன் கண்டுபிடித்ததும், கலியாணம் முடிச்சதும் கனடாவிலதான் 'லவ்'பண்ணி முடிச்சோம் எண்டுதான் நாதன் சொன்னதாக ஞாபகம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனந்திக்கும், கனடாவிலேயே பிறந்த ஸ்வீட்டிக்கும் ஊரில் இருக்கிற தன்னட ஆட்களத் தெரியாதென்டு காட்டிறதுக்கு பதினாறு வருசத்துக்கு பிறகு நாதன் கூட்டிக்கொண்டு வந்திருக்கிறார். பதினாறு வருசம்.

அண்ணன் வரப்போறார் என்றவுடன் வானத்துக்கும், பூமிக்கும் குதிக்க வேண்டும் போலிருந்தது சந்திராவுக்கு. சந்திராவுக்கு சகோதர பாசம் பொத்துக்கொண்டு வந்தது. கொழும்பில எயார் போர்ட்டில இருந்து அண்ணன் குடும்பத்தக் கூட்டிக்கொண்டு வரணும் என்று புருசனை விரட்டு விரட்டு என்று விரட்டி தவராசாவிட 'டொல்பி' னைப் பிடித்து விட்டிருந்தாள் சந்திரா.

அண்ணாவும், அண்ணியும், பிள்ளைகளும் இனி அவங்கள் கொண்டு வாற சாமான்கள் எக்கச்சக்கமாய் இருக்கும். ஆட்கள் கூடப் போனால் சரிவராது என்ற கணக்கில், வரப்போறம் என்று சொன்னவர்களை ஏத்தாமல் தானும், புருசனும் மட்டும் போய்ட்டு வாறம் என்று ஊரில் சொல்லிவிட்டுப் போயிருந்தாள் சந்திரா.

சந்திராவுக்குப் பதினாறு வருச எதிர்பார்ப்பு.

அண்ணா வெளிநாட்டில் இருந்து வரும்போது தனக்கும் தன்னட குடும்பத்துக்கும் கனக்கக் கொண்டு வந்து தருவார் என்கிற நினைப்பே அவளுக்குப் பூரிப்பாய் இருந்தது.

நாதன் தங்கச்சியை எயார்போட்டில் கண்டவுடனே கிட்டவந்து கட்டிப்பிடித்து முகத்தில அங்காலயும், இங்காலயும் உரசியபோது சந்திரா உச்சிகுளிர்ந்து போனாள்.

பின்னால் வந்த ஆனந்திக்கு சந்திராவையும், அவள் புருசனை யும் அறிமுகப்படுத்தியபோது ஸ்வீட்டியை சந்திரா ஓடிப்போய் கட்டிப் பிடித்துக் கொஞ்ச, ஆனந்தி முகம் சுளித்தது யாருக்கும் தெரியாது.

ஊருக்கு வந்த நாதன் உறவினர்களுக்கு எதையெடுத்துக் காட்டினாலும், கொடுத்தாலும் எல்லாத்துக்கும் காசுக்கணக்குத் தான்... சந்திராவுக்கு ஒரு கையில் கட்டுற மணிக்கூட்டைக் கொடுக்கும்போது "சந்திரா... இது அங்கேயே இருபது யூரோ... இங்க எப்பிடியும் மூவாயிரம்... நாலாயிரம் வரும்." சந்திராவுக்கு பெருமை யாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேன்கார தவராசா.. கூலி கேட்டபோது "அது நான் தாறன்..." என்று சந்திரா இடைமறித்தது நாதனுக்கு ஏக சந்தோசம். ஆனால் "அண்ணாவிட்ட வட்டியும் முதலுமாய் வாங்கிட்டு விடணும்" என்று சந்திரா மனசுக்குள் நினைப்பதை அறியாத நாதன் தங்கச்சியின் பாசத்தை நினைத்து உருகிப் போனார்.

சந்திராவின் வீட்டிற்கு அண்ணனையும், குடும்பத்தையும் பார்ப்பதற்காக ஊராக்கள் வரும்போதெல்லாம்... சந்திராவிற்கு 'திக் திக்' என்றுதான் இருந்தது.

என்றாலும் அண்ணனுக்கு தாராள மனசு. பெட்டியைத் திறந்து எதையாவது எடுத்துக் கொடுத்துக்கொண்டுதான் இருந்தார். சந்திராவிற்கு வயித்தெரிச்சல் தாங்க முடியாதிருந்தது.

அவர்கள் கொண்டு வந்த உடுப்புப் பெட்டிகள் தவிர. மீதி இருக்கிற ஒரு பெட்டிதான் இன்னும் திறக்காமல் இருந்தது. அதுவும் ஒரு வடிவான பெட்டி. அதற்குள் இருப்பது என்னவென்று அண்ணா இதுவரை சொல்லாமல் விட்டது வேறு சந்திராவிற்கு தவிப்பாய் இருந்தது. எதுவாய் இருந்தால் என்ன. போகும்போது ''தங்கச்சி இது உனக்கு'' என்று தூக்கித் தருவார்தானே. அப்போது பார்ப்போம் என்று பொறுமையாக இருந்தாள் சந்திரா.

அடிக்கடி வீட்டுக்குள் ஆட்கள் வருவதும் இடைப்பட்ட நேரத்தில் கமெராவையும் தூக்கிக்கொண்டு அவர்கள் குடும்பத்தோடு ஊர் சுற்ற வெளிக்கிடுவதும், சந்திராவுக்கு அண்ணாவோடு மனம் விட்டுக் கதைக்க முடியாமலிருந்தது.

வந்தவர்கள் மனம் கோணாமல் இருக்க வேண்டும் என்பதற்காக புருசனிடம் சொல்லி இறைச்சி வத்தல், பட்டதில பெரியமீன், என்று வீட்டுக்கு கொண்டுவந்து சமைப்பதும், பரிமாறுவதுமாக ஓய்ந்து போனாள் சந்திரா. இப்பிடி இருக்கும்போது "வீட்டிற்கு சாப்பிட வரட்டாம்" என்று உறவினர்கள் வீட்டிலிருந்து ஆள் வந்தால் சந்திராவிற்கு பத்திக்கொண்டு வரும்.

ஒரு கிழமைதான் அண்ணா நின்றார். ''அண்ணியின் சொந்தக்காரர் யாழ்ப்பாணத்தில் இருக்கிறாங்கள். அவையப் பாத்திட்டு அப்பிடியே நல்லூருக்கும் நிண்டு போட்டுத்தான் வருவன்" என்று சொல்லிக்கொண்டு கிளம்பியவர்கள் இன்னும் வரவில்லை. சரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகிற போது வரட்டும் என்று மனம் தாளாமல் வீட்டுக்குள்ளிருந்த அந்தப் பெரிய சில்லுப்பூட்டிய பெட்டியைப் பார்க்கிறாள் சந்திரா. "எப்பிடியும் பெறுமதியான சாமான்கள்தான் இருக்கும்" அண்ணன் சந்திராவை மனசில் வைத்துத்தான் இந்தப் பெட்டியைத் திறக்காமல் வைத்திருக்கிறார் என்ற நினைப்பே அண்ணனை உயரத் தூக்கி வைத்தது.

அப்பாவின் 'சா' விற்குக்கூட அண்ணா வரவில்லை. வெறும் தந்தியோடு இருபத்தையாயிரம் ரூபா காசை அனுப்பி வைத்துவிட்டுப் பேசாமல் இருந்தவர்தான் அண்ணா என்ற கோபதாபம் மனசுக்குள்ள இருந்தாலும் இவ்வளவு காலத்திற்குப் பிறகு வந்தவரிடம் எதையும் ஏடகூடமாகக் கதைத்து விடக்கூடாதென்று கவனமாய் இருந்தாள் சந்திரா. ஆனால் நடந்து முடிந்தவைகள் மனதைவிட்டு நீங்காமல் இருந்தது என்பது உண்மைதான்.

சந்திராவும், புருசனும், பிள்ளைகளும், மற்றச் சோதரங்களும் அங்க இங்க ஓடித் திரிஞ்சு அப்பாவிட சாவிற்குரிய எல்லாக் காரியத்தையும் முடிச்சப் பிறகு... கடன் கொஞ்சம் மிஞ்சிற்று. அண்ணா வீட்ட விசயத்தைச் சொன்னபோது நாலு சகோதரங்களில தன்டை பங்கைத் தந்தாச்சு என்றும், அண்ணிக்கு சுகமில்லை என்டும் அங்க கனக்க செலவு என்டும் கைகழுவி விட்டபோது மற்றச் சகோதரங்கள் நெருப்புத் தூக்கிக்கொண்டு 'தாம் தீம்' என்று குதித்தார்கள். சந்திராதான் "என்ன செய்யிறது அண்ணனுக்கு வசதியில்லப் போல" என்று சமாளித்தாள்.

இடையில் இரண்டு தடவை சந்திராவின் புருசன் டெலிபோனில் காணிவாங்கவென்று காசு கேட்டபோது... கொஞ்சம் அனுப்பி வைத்துவிட்டு தான் வரும்போது மிச்சத்தப் பார்ப்போம் என்று சொல்லிப் போய்விட்டார்.

நாதன் அண்ணனை சந்திரா அனுசரிக்குமாப்போல் மற்றச் சகோதரங்கள் அனுசரிப்பதில்லை. ஆனால் பதினாறு வருசத்திற்கு பிறகு குடும்பத்தோட அண்ணன் வந்திருக்கிறார் என்டவுடனே எல்லாச் சகோதரமும்தான் சாப்பாட்டிற்கு ஆள் அனுப்புவதும், அவர் கொடுக்கிறத வாங்கிறதுமா இருக்குதுகள். அண்ணன் தன்ர சகோதரங்களுக்கு எதைக் கொடுத்தாலும் அதனுடைய வெளிநாட்டு விலையையும், இங்கேயுள்ள விலையையும் சொல்லத் தவறுவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணன் தன்னிட சகோதரங்களிட பிள்ளைகளுக்கு ஆளுக் கொன்று என்ற வீதத்தில் பலவர்ணப் பேனாக்கள் அடங்கிய பெட்டியைக் கொடுத்து பிள்ளைகள் மனசிலும் இடம்பிடித்து விட்டார்.

அப்பிடியும், இப்படியும் நாதன் கொண்டு வந்த வெளிநாட்டுச் சாமான்களெண்டால் ஒரு குடும்பத்திற்கு ஒன்று இரண்டு என்ற கணக்கில் ஒரு பத்துக்குள்தான் வரும். ஆனால் சந்திராவிற்குத் தெரியும். அந்தப் பெரிய பெட்டிக்குள் இருப்பதெல்லாம் தனக்காகத் தான் அண்ணா வாங்கி வந்திருக்கிறார்... அதுதான் அவர் அதனை அவசரமாய்த் திறக்க விரும்பவில்லை.

யாழ்ப்பாணம் போன அண்ணன் திரும்பி வந்தவுடனே பெட்டியைத் திறக்கச் சொல்லிக் கேட்டு மற்றவைக்குத் தெரியாமல் எல்லாச் சாமனையும் வாங்கிவிட வேண்டும் என்று சந்திரா நினைத்துக் கொண்டாள்.

ஒருவாரம் கழித்து நாதன் தனியாகத்தான் வந்தார்.

தான் அவசரமாகக் கொழும்புக்குப் போக வேண்டும். அண்ணியும், ஸ்வீட்டியும் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குப் போய்விட்டார்கள். கொழும்பில் அண்ணியின் தம்பிக்கு கலியாணமாம். தான் இங்க இந்தப் பெட்டியைக் கொண்டு போகத்தான் வந்தன். என்று அந்தப் பெட்டியைத் தூக்கிக்கொண்டு புறப்பட்டபோது சந்திராவிற்கு அழுகை முட்டியது.

அவள் அழுவதைப் பார்த்து அண்ணன் "இதென்ன சின்னப்புள்ள மாதிரி தங்கச்சி... நான் திரும்பி வருவன்தானே... ஏன் அழுகிறாய்..." என்று அவளுக்கு ஆறுதல் சொல்ல அவளுக்கு ஆத்திரம் பொத்துக் கொண்டு வந்தது.

* * *

நாதன் கொழும்பிலிருந்து சொல்லி விட்டதாக ஒரு பெடியன் வந்து சொன்னான். "அவருக்கு கொழும்பில அலுவல் முடிஞ்சி அப்பிடியே வெளிக்கிடுறாராம். உங்கட்டச் சொல்லச் சொன்னார் சந்திராக்கா."

சந்திரா இடிந்து போனாள். அண்ணன் வந்து போகும் வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பட்ட வரவு செலவைக் கணக்குப் போட்டாள். வேன் பிடித்த காசு, சமைச்சுக் கொட்டின காசு, எல்லாத்துக்கும் அவர் அப்பப்ப தந்த காசு, மணிக்கூடு எல்லாம் கையும் கணக்கும் சரியாப் போய்ச்சுது.

ச்சீ... அவர் விட்டிட்டுப் போன எச்சங்களைப் பார்க்க அவளுக்கு அருவெறுப்பாய் இருந்தது.

பாவம் சந்திரா...!

**– காலநதி 2005 சித்திரை –**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லேசாகத் தூறிக்கொண்டிருந்தது வானம். இப்போது இருள் கொட்டத் துவங்கியிருந்தது. "ச்ச... முன்னமே போயிருக்கலாம்." அலுத்துக்கொண்டு திரும்பிப் பார்த்தான் இருளன். அந்த வாட்ச்மேன் இவன் நிற்கும் இடத்திற்குத்தான் வந்துகொண்டிருந்தான். மழுமழுவென்று... ஆமிக்காரன் மாதிரியே முகம் இவனுக்கு. இவன் கையிலிருந்த தடியை ஆட்டியபடி அங்கு நின்றவர்களை சற்று நேரத்திற்கு முன்புதான் விரட்டி விட்டான்.. மாலை ஆறுமணிக்கு மேல் இங்கே வெளியாட்கள் யாரும் நிற்கக்கூடாது. நோயாளர்களைப் பார்க்கும் நேரம் முடிந்து விட்டால் இந்த

# இனி விடிந்து விடும்

வாட்ச்மேன்களெல்லாம் ராசாக்களாகி விடுகிறார்கள். பெரியவர், சின்னவர் என்றில்லாமல் எல்லோரையும் விரட்டோ விரட் டென்று விரட்டுவதில் இவர்களுக்கு இருக்கிறது கடமை யுணர்வா... காழ்ப்புணர்வா... என்று தெரியவில்லை.

"ஏன் நிக்கிறீங்கள் போகயில்லயோ?"

"மழை விடட்டும் போறன்."

"டொக்டர் வந்தால் எங்களத்தான் ஏசுவார் போங்கோ.."

அங்கிருந்த வெளியாட்கள் யாரும் தரித்து நிற்ப தாகத் தெரியவில்லை. ஆளுக்காள் குடையை விரித்துப் பிடித்தபடி அவர்கள் பாட்டுக்கு நடக்கத் துவங்கி விட்டார்கள். வாகனங்களில் வந்தவர்கள் சீறிக்கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறக்கிறார்கள்.

இருளனும் தன் வீட்டில் உள்ள குடையை நினைத்துக் கொண்டான். அது எப்போதோ வாங்கிய மான் மார்க் குடை. நன்றாக உழைத்த குடை. இப்போது மூன்று கம்பி உடைந்து சீலையைப் புறப்பக்கம் தள்ளியபடி...

மழையைக் கண்டவுடன் வழமையாக நினைப்பது போல இப்போதும் நினைத்தான்.

"அவசரமாக அதைக் கட்டி எடுத்தால் உதவும்... இப்படி அத்துவான நேரத்தில."

"ஐயா... பகிடியோ பன்றீங்கள்... இதுகளில நிக்கக்கூடாது என்டல்லோ சொன்னனான்..." வாட்ச்மேன் கையை வைத்துத் தள்ளாத குறையாக விரட்டினான். இவன் சொன்னாலும் சொல்லா விட்டாலும் ஏழு மணிக்குக் கடைசி பஸ். போகத்தானே வேணும் என்றவன் மணியைப் பார்த்தான் ஆறு நாற்பதைஞ்சு.

இருளன் இன்னும் கொஞ்சம் ஒதுங்கி நின்றான். வராண்டாவில் ஒரு மனுசத்தலையையும் வாட்ச்மேன் தெரிய விடுறானில்லை என்றவுடன் அவனுக்கு எரிச்சல் வந்தது.

"நான் வேணுமெண்டாப்பு நிக்கிறன். மழை கொஞ்சம் குறைஞ்சாலும் போயிடுவன்."

மழையைப் பார்க்காமல் ஓடி பஸ்ஸைப் பிடித்து விடலாமா? நினைப்பு அடங்குவதற்குள் வராண்டாவை விட்டு வெளியில் இறங்கினான். நிமிச கணத்தில் சடசடவென மழையில் தெப்பலாய் நனைய ஓடினான்.

"ஐயோ... நனையுறோமோ..." அவனுக்குள் நிரந்தரமாய் தங்கியிருக்கும் ஆஸ்துமா வருத்தத்தை நினைக்கத்தான் பயமாயிருந்தது. குறுக்கு வழியென்று அவனுக்கு ஒன்றும் தெரியாது. தெரிந்த பாதை மெயின்ரோடுதான். சள்... சள்ளென்று பறக்கும் வாகனங்களை விட்டு விலகி விலத்தி ஓடினான். தெருவிளக்குகளின் வெளிச்சத்தில் ரோடுகளின் குண்டும் குழியும் தெரிந்தது. அதில் தண்ணீர் கட்டியிருப்பதைப் பார்த்துத் தாவித்தாவி அவன் ஓடுவதைப் பார்த்தால் யாரும் வேடிக்கையாகத்தான் நினைப்பார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருளனுக்கு 'திக்' என்றிருந்தது. அவன் ஓட்டமும் நடையுமாக பஸ் ஸ்ரான்டுக்கு வந்தபோது அவன் போகவேண்டிய கடைசி பஸ் கண்ணுக்கெட்டிய தூரத்தில் போய்க்கொண்டிருந்தது. அங்காலாய்த்தான். "பஸ் எதற்காகவாவது நிற்காதா... ஓடிப்போய் ஏறி விடலாமே..." ஓடியும் பார்த்தான். பஸ் போய்விட்டது. பின்லைற்றின் சிவப்பு வெளிச்சம் தூரத்தில் போகும்வரை பார்த்தான்.

அவனுக்கு ஊர் போய்ச் சேர வேண்டிய மார்க்கம் ஏதுமில்லை என்றவுடன் மனம் உளைந்தது.

'அடச்சீ...' மன உளைச்சலை உதறினான். அது அவனை விட்டு விடாமல் ஒட்டிக்கொண்டது.

மழை விட்டிருந்தது. குளிர்ந்தது. வானத்தை நிமிர்ந்து பார்த்தான். பேயாக வெருட்டுகிற கறுப்பு.

"மழை இருக்கு"

மற்றவர்கள் நேரத்தை பார்த்தபடி கிளம்பி விட்டார்கள். பஸ் ஸ்ரான்ட் கடைகளைப் பூட்டிவிட்டு அவர்களும் புறப்பட இடம் வெறிச்சோடியது..

இருளன் தனியாக அங்கு நிற்பதாக உணர... பயம் வந்து ஒட்டிக் கொண்டது. அவன் மெதுவாக கால்போன போக்கில் நடக்கத் தொடங்கினான்.

இப்போது அவனுக்கு இருப்பது இரண்டு பிரச்சினைதான். ஒன்று சாப்பாடு... மற்றது இந்த இரவைக் கழிக்க ஓரிடம்.

சாப்பாட்டைக் கூடத் தவிர்த்து விடலாம். ஆனால், தெருவில் தனியாக இரவிரவாக நடந்து திரிய முடியாது. ஆமிக்காரர், பொலிஸ் காரர் யாரும் கண்டுவிட்டால்...

அந்த விபரீதத்தை நினைத்துப் பயந்தான்.. இந்த நேரத்தில் யார் வீட்டுக் கதவைத் தட்டுவது... தனக்கு இங்கு தெரிந்தவர்கள் யாரும் இருக்கிறார்களா மூளையைப் போட்டுக் கசக்கினான்...

நகரசபை சுத்திகரிப்பாளர்களெல்லாம் அவனது உறவினர்களும், தெரிந்தவர்களும்தான். ஆனால் அவர்கள் தூரத்தில் சேரியில் அல்லவா இருக்கிறார்கள். முடிந்தளவு அவன் வேறு யாரிடமும் போய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவி கேட்பதைத் தவிர்த்துவிடத் தீர்மானித்தான். இங்கு யாரிடம் போய் நின்றாலும் கோத்திரம்... குலம்... சாதியென்று கேட்டு விலக்கி விடுவார்கள். இந்த மனுசரிடம் போய் அவமானப்பட்டுத் திரும்புவதை விட ஆமிக்காரர், பொலிஸ்காரர் பரவாயில்லை.

குளிரடித்தது. கைகளை மாறிமாறித் தேய்த்து சூடேற்றிக் கொண்டான். நனைந்த சாரமும், சட்டையும் இப்போது உடம்புச் சூட்டில் காய்ந்து விட்டிருந்தது.

தூரத்தில் அந்தோனியார் கோவில் முகப்புத் தெரிந்தது. முகப்பு மணிக்கூடு ஒன்பது மணி எனக் காட்டியது. அவன் கால்கள் அனிச்சை யாக தேவாலயத்தை நோக்கி நடந்தன. "வராண்டாவில் படுக்க லாம்" அவனது நினைப்பிற்கு ஏற்ப மனம் சிரித்தது. கொஞ்சம் விரைவாக நடந்தான்.

இருளன் கோவிலை நெருங்கியபோது... கதவை ஒருவர் இழுத்துச் சாத்திக்கொண்டிருந்தார். அவர்தான் கோயில் மெலிஞ்சி யாராக இருக்க வேண்டும். இருளன் எட்டி நடந்தான்.

"யாரது..." அந்த முகப்பு லைட் வெளிச்சத்தில் இன்னார் யாரென் பதைத் தெளிவாகப் பார்க்க முடியாதிருந்தது.

"ஐயா... மகன் ஆஸ்பத்திரியில வாட்டில இருக்கிறான்... மழை பெய்ஞ்சதால பஸ்ஸ விட்டிட்டன்... இதில கிடந்திட்டு விடியப் போறனய்யா..."

இருளன் சுருக்க வரிச் செய்தியாக சொன்னவுடன் மெலிஞ்சியார் எடுத்த எடுப்பில் கடுகடுத்தார்.

"இங்க படுக்க ஏலாது. சுவாமி பேசுவார். போங்கோ." சொன்னவர் இருளனைக் கிட்ட வந்து கூர்ந்து பார்த்தார்.

"எங்க இருந்து வாறீங்கள். வேதமோ... சைவமோ...?"

இருளனுக்கு படக்கென்று ஓர் நினைப்பு... நல்லவேளை சாதியப் பத்திக் கேட்காமல் சாமியப் பற்றிக் கேட்கிறார். சமாளிக்கலாம்.

"நான் சைவம்தான். ஆனால்...."

"சைவமோ... நீங்கள் இங்க படுக்கக் கூடாது.." மெலிஞ்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாருக்கு கோயில் சாமான்கள் ஏதும் களவு போய்விடக் கூடாது என்பதில் கவனம்.

"ஐயோ.. ராவில நான் எங்க போறது..."

"எங்கேயும் போங்கோ..."

"இல்லய்யா நான் சைவமென்டாலும் எனக்கு யேசுநாதர நல்லாத் தெரியும்... அவர் நல்லவர்... நான் ஊரில பாஸ்ரரிட வீட்டில வேலை செய்தனான்."

"பாஸ்டரோ... அப்ப நீங்கள் சபையோ..." மெலிஞ்சியார் வெறுப்புக் காட்டுவது போலிருக்க... இருளன் பதைத்தான். தேவை யில்லாமல் வாயைக் குடுத்திட்டோமோ, இவங்களுக்கு சபையெண் டாலும் பிடிக்காது.

மெலிஞ்சியார் இப்போது கொஞ்சமும் இரக்கம் காட்டுவதாக இல்லை.

"சொன்னால் கேளுங்கோ. இங்க நாங்கள் வேற ஆக்களத் தங்க விடுறதில்ல."

இருளனும் வேற வழியில்லாமல் இரக்கத்திற்காக இறைஞ்சி னான். மெலிஞ்சியார் விடவில்லை. அவர் கதவை இழுத்துச் சாத்த இருக்கிற ஒரு வழியும் அடைபடுகிறதே என்ற ஆதங்கத் தவிப்பில் இருளன் கதவுக்கும் மெலிஞ்சியாருக்கும் இடையில் போய் நின்று கொண்டான்.

இப்போது மெலிஞ்சியாருக்கு கண் மண் தெரியாத கோபம் இருளனைப் பிடித்துத்தள்ள.. இருவரும் வாறாக இழுபட்டதில் வாசலோடு இருந்த யேசுநாதர் சிலுவையில் அடிக்கப்பட்ட சுருபத் தின் மீது இருளன் போய் விழுந்தான். சுருபமும் கீழே விழுந்தபோது சிலுவைவேறு... யேசுநாதர் வேறாகக் கிடக்க.. இருளன் பயந்து போனான்.

மெலிஞ்சியாருக்கு முகம் சிவந்தது..

இருளன் பேதலித்தான். படுக்க இடம் கேட்ட இடத்தில் தகரா றாகி, அது மனசை உடைக்க நடப்பது நடக்கட்டும் என இருளன் வெளிக்கிட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது பயம் கடந்து அவன் மனம் வேறு எதற்கோ அழுவது போல் இருந்தது. எங்காவது வெட்ட வெளியிலாவது அமர்ந்து கொண்டிருந்தாலும் பரவாயில்லை என்று தோன்றியது.

கைவிடப்பட்ட சென்ரிப்பொயின்ருக்குள் பயமில்லாமல் நுழைந்தான். அமர்ந்தான். சற்றுவேளையில் நித்திரையாகிப் போனவனுக்கு யாரோ கூட இருப்பது போல உள்ளுணர்வு. விழிக்க அவன் பக்கத்திலிருப்பது தெரிந்தது.

"யாரு?"

"நான் யேசு.."

இருளனுக்கு பயத்தோடு அதிர்ச்சியும் கூடிவர... அந்த உருவம் கதைத்தது.

"நீதானப்பா எனக்கு இரட்சகன். என்னை சிலுவையில் சிறைப் பிடித்து வைத்திருந்தார்கள். நீதான் என்னை மீட்டாய்." இருளனுக்கு ஒன்றும் புரியவில்லை.

"என்னை அங்கு சிலுவையில் தொங்க விட்டுவிட்டு எத்தனை மீறல்களைத்தான் செய்கிறார்கள். ச்சீ... எனக்கு அவர்களையும் பிடிக்கவில்லை... அந்த இடத்தையும் பிடிக்கவில்லை. நல்ல வேளையாக நீ எனக்கு விடுதலை வாங்கித் தந்தாய். எனக்கு எங்கு போவதென்று தெரியவில்லை. அதனால்தான் உன் பின்னாலேயே வந்து விட்டேன். உன்னோடு தங்குவதற்கு இடம் தருவாயா?

இருளனுக்கு சிரிப்பு வந்தது. இருவரும் சிரித்தார்கள். இனி விடிந்து விடும்.

**— காலநதி — 2006 ஆனி —**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தரியின் செளந்தரியம் காணாமல் போய் பத்து வருசமாயிட்டுது. போற வாற இடத்தில இவளைப் போலவே எத்தினை பேர் இழந்திட்டு நிக்குதுகள்...

புதுசாப் பொட்டழிச்சுப்போட்டு நிக்கிறதுகளும் வாழத்தானே செய்யுதுகள்... என்று ஒரு கோட்டுக்குப் பக்கத்தில் பெரியதொரு கோட்டைப் போட்டுத்தான் தன் துன்பத்தைச் சிறிதாக்கி வைத்திருக்கிறாள் சுந்தரி.

ஆனாலும், தேவைக்கதிகமாக இன்னும் வாழ்ந்து கொண்டிருப்பதாக... ஓர் அசதி.

தலைக்கு மேலே சுற்றிக்கொண்டிருந்த சீலிங்பேன்

# காணாமல் போனவன்

கரகரத்துச் சத்தம் போடுதென்று அப்பா அதைக் கழற்றி வெளியே வீசச் சொல்லி விட்டார்.

“ஐயா... யாரையும் பிடிச்சுத் திருத்திப் பூட்டுவோம்” என்று சொல்ல...

“வேண்டாம். அது அவுட்டொவ் பெசன்... தேவை யில்ல.. தூக்கிப் போட்டுட்டு புதுசா ஒரு பேன் வாங்கிப் பூட்டுங்கோ” அவர் அழுத்தமாகச் சொல்லி விட்டார். அவர் எப்போதும் இப்படித்தான். ஏதென்டாலும் அது அதற்குரிய வேலையக் கோளாறு இல்லாமல் செய்ய வேண்டும். அது மனுசராய் இருந்தாலும் அவருக்குப் பிடிக்கயில்லயென்டால் திரும்பியும் பார்க்க மாட்டார்.

சுந்தரி தன் கணவனோடு நல்ல மாதிரி வாழ்ந்த போது சந்தோசப்பட்ட அப்பா, நாதன் காணாமல் போன தற்குப் பிறகு சுந்தரியோடு சேர்ந்து கண்ணீரோடு ஏறாத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆமிக் கேம்பும் இல்ல. பார்க்காத மறியலும் இல்ல. எல்லா இடமும் தேடிந் திரிந்த பிறகுதான் அப்பா அலுத்துப் போய்ச் சொன்னார். "பிடிச்சவங்கள் யாரென்டு தெரியாம இப்பிடி அலைக்கழிய ஏலாது. ஒழுக்கமா, கவனமா இருந்தா ஏன் இந்தப்பாடு."

"ஏதென்டாலும் நாதன் எனக்குப் புருசன். யார் வந்தாலும் வரா விட்டாலும் தேடித்தானே பார்க்க வேணும். புருசன் இல்லாட்டி கஷ்டம் எனக்குத்தான்" என்று திரிஞ்சபோது அவள் அரசியல்வாதி களோட கதைக்கிறதும், அதிகாரிகளோட பழகிறதும், தனியாக வெளிக்கிட்டுப் போறதும் வாறதும் மற்றாக்கள் பார்வையில் அசிங்க மாகத்தான் தெரிந்தது.

அப்பாவிட காதில மானங்கெட்ட சேதி விழுந்தால் சுந்தரியை இனி வெறெங்கேயும் வெளிக்கிட்டுப் போக விடமாட்டார் என்பது அவளுக்குத் தெரியும்.

செத்தவனிட பிரேதத்தக் கண்ணால பாத்திட்டால் அதற்குரிய சடங்குகளச் செய்து போட்டு ஆறுதலடைஞ்சிருக்கலாம். இது ஒரு செய்தியுமில்லாம மாயமாகிப் போனவனுக்காகச் சும்மா வேஸ்டா காலத்தக் கடத்துறது அவருக்குக் கோளாறாகத்தான் தெரிந்தது.

இப்ப ஆகக் கூடினால் சுந்தரிக்கு முப்பத்திரண்டு வயசுதான். இன்னும் அழகும், செழிப்புமாகத்தான் இருக்கிறாள். அவள் கண்ணுக்குள்ள நிறைஞ்சிருக்கிற கனவையும், ஏக்கத்தையும் கவனித்து பொருமலோடு சொன்னார்.

"சுந்தரி காணமால் போனவனுக்காக, பத்து வருசமா திரும்பி வராதவனுக்காக இன்னொரு சீவன் வாழாமல் இருக்கிறது எனக்கு ஒப்பமில்ல."

அவர் போன மாசம் மட்டக்களப்பு காரைதீவுக்குப் போயிட்டு வந்த நாளில் இருந்து புதுசாக ஒன்றைச் சொல்லிக் கொண்டு இருக்கிறார்.

தூரத்து உறவாம். சுனாமியில பொண்டாட்டியையும், பிள்ளையை யும் பறி குடுத்திட்டு நிக்கிறானாம். அவனுக்கு மறுமணம் அவசியம் என்று வீட்டில் வந்து நியாயம் கதைப்பது எதற்கென்று சுந்தரிக்குப் புரிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிக்க அடிக்க அம்மியும் நகரும் என்பதாக அவளுக்குள்ளும் இப்போது புதுக்கப் புதுக்கக் கலர்க் கனவுகள். எதுவாக இருந்தாலும் மிருக சாதியா..? இழுத்துக்கொண்டு போய்த் தீவனத் தொட்டிக்குப் பக்கத்தில் கட்டுவதற்கு. அப்பாவும் சுந்தரியின் பதிலுக்காகக் காத்திருந்த நேரம்தான் யாரோ ஒருவன் வெலிக் கடை மறியலில் இருந்தவனாம். அவன் தெரிந்தவர் மூலமாகத் தகவல் அனுப்பியிருந்தான்.

நாதனுக்கு மூளை சரியில்லாமல் போய் அங்கொடைக்கு அனுப்பியதாக. இது நடந்து ஏழெட்டு வருசமாகி விட்டது என்றும் அந்தத் தகவல் சொல்லப்பட்டிருந்தது. குட்டிக் குட்டியாய் மனசு முழுவதும் சுந்தரி வளர்த்து விட்டிருந்த தாளான் நினைப்புக்கள் இந்த தகவல் வெய்யிலில் கருகிப் போனது.

சுந்தரிக்கு அப்பிடியொரு இடத்திற்கு ஏன்தான் வந்தோ மென்றிருந்தது.

இப்படி மனநோயாளர் மருத்துவமனையில் தன் கணவன் இருந்தால் எப்படி...? ஐயோ... அவள் நெஞ்சு பதைத்தபடியே இருந்தது.

அப்பாவுக்கு இங்கு வர விருப்பமில்லாமல்தான் இருந்தது.. அவரையும் கூட்டிக்கொண்டு வர சுந்தரி எடுத்த பிரயத்தனம் அதிகம்.

"பைத்தியக்கார ஆசுப்பத்திரியில் இருந்து மாப்பிள்ளையைக் கண்டு பிடிப்பதென்றால் வேண்டாமே..." என்று சொல்லிக் கொண்டே இருந்தார்.

சுந்தரி புருசனோடு வாழ்ந்த இனிமை அனுபவங்களை மட்டும் நினைத்துப் பார்த்தாள்.

உண்மையிலேயே நாதன் நல்ல குணமான மனிதன். நல்ல புருசன். இயக்கத்திற்கு ஏதோ ஒரு வகையில் உதவி செய்ததாக அச்சுறுத்தப்பட்டபோது அதனை அலட்சியம் செய்து விட்டு அங்கே போய்வரப் போய் திடீரென காணாமல் போய் விட்டார்.

அப்பப்பா... எத்தனை விமர்சனங்கள்.

குடும்பக்காரன்... சும்மா இருந்திருக்கலாம். இவனுக்கேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவையில்லாத வேலை.

சுந்தரிக்காக அனுதாபப்பட்டவர்களும்தான் இருந்தார்கள். நாதன் திரும்பி வந்து இந்த ஊரிலேயே நல்லா வாழவேண்டுமென்று தானே அவள் இத்தனை பேச்சுக்கும், ஏச்சுக்கும் அவமானத்திற்கு மிடையில் தேடியலைகிறாள். அப்பாவும், மகளுமாய் ஆஸ்பத்திரி முழுவதும் தேடினார்கள்.

நாதன் பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் இல்லையென்றதும் அவளுக்குள் உற்பத்தியாகிப் பெருகிய சந்தோசம் ஒரு சில மணி நேரத்தில் மடிந்தது.

அது... அவர்கள் புறப்பட்டு வந்தபோது ஒரு பஸ் ஸ்ராண்டில்... சுவரோடு பேசிக்கொண்டிருந்த ஒரு பைத்தியத்தை தற்செயலாகப் பார்த்தவளுக்கு அதிர்ச்சியாக இருந்தது.

"இல்ல இருக்காது." கிட்டப் போய்ப் பார்த்தாள்.

"ஓ... அது நாதன்தான்... அதே அடையாளம்."

அப்போது சுந்தரி ஐந்து மாதக் கர்ப்பிணி. கிணற்றடியில் வழுக்கி விழ இருந்தவளை... அவசரமாய் தாங்கிப் பிடித்த நாதனுக்கு வாளித் தகரம் கையில் கிழித்து பெரிய காயம். ஆறு தையல் போட்ட தழும்பு அப்படியேதான் இருந்தது. சுந்தரி அடிக்கடி சொல்லிக் கொள்ளு வாள், "இந்தக் காயம் என்னைக் காப்பாற்றும் போது வந்தது..." அன்பாக அவன் கையைப் பிடித்து முத்தமிடுவாள்.

அதே சாயல். அதே கண்ணும்... மூக்கும்... சர்வ நிச்சயமாய் அது தன் கணவன்தான்.

"அப்பா... இது... இது நாதன்தான்."

அந்தப் பைத்தியம் எந்தப் பிரக்ஞையும் இன்றி ஏகாந்தமாய் சிரித்துக் கொண்டிருந்தது.

அப்பா அதையே பார்த்துக் கொண்டிருந்தார்..

அவருக்குள் எத்தனை மன வெடிப்புக்கள் இப்போது என்பது சுந்தரிக்குத் தெரியும்.

வீட்டில் பழுதாய்ப் போன மின் விசிறியைக் கழற்றி தூர வீசு என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்னது போல நாதனையும் சொல்லி விடுவாரோ. சுந்தரி பயந்தாள்.

ஆனால் அவர் அப்படிச் சொல்லவில்லை.

"சுந்தரி... ஒரு வேனைப் பிடிச்சு ஏத்திக்கிண்டு போவோமா?"

சுந்தரி தலையாட்டினாள்.

அப்பா வேன் பிடிக்கப்போய் விட்டார்.

"என்னங்க..." கூப்பிட்டாள்.

அது பார்த்துச் சிரித்தது. கையை நீட்டியது.

அழுக்குப் பிடித்து நீண்ட நகம். துர்நாற்றம் வீசியது.

"என்னங்க... என்னைத் தெரியுதா... நான் சுந்தரி..." அது அவளை மேலும் கீழும் பார்த்துவிட்டு அசிங்கமாய் திட்டியது.

ம்... இது சரிவராது என்ற நினைப்பில் அவள் மனம் குமுறி உடைந்தது. உள்ளுக்குள்ளே வெந்து கொண்டிருந்த செங்கல் சூளை போலப் ப்ரமை பிடித்து நின்றாள்.

தனியாக வந்து உட்கார்ந்து கொண்டாள்.

நாதன்... அந்தப்.பைத்தியம் ஆங்காரமாய் யாரையோ திட்டிக் கொண்டு தன் தாடி முடியைப் பிய்த்துக் கொண்டிருந்தது.

சுந்தரி கண்ணை மூடினாள். தெளிவுக்காக சிதறிய மனசை ஒன்று ஒன்றாக பொறுக்கி ஒட்ட வைத்தாள். அவளுக்குள் ஓர் இறுக்கம் வளர்ந்தது.

புருசன் இல்லாத பத்து வருசம். வாழுவதற்காகப் பட்ட பாடு போதும். இனி... ஒரு பைத்தியத்தோடு வாழ்க்கை... முடியுமா? இது தேவைதானா? விதவை அல்லது வாழ்விழந்தவள் என்ற பெயர் நீடிப்பதால் ஒன்றும் கெட்டு விடாது.

"சுந்தரி... வேன்... வந்திருக்கு." அப்பா வாகனத்தோடு நாலு பேரையும் கூட்டி வந்திருந்தார்.

"ஆளக் குண்டு கட்டாத் தூக்கி வேனில ஏத்திடலாமா?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தவன் கேட்டான்.

சுந்தரி மறித்தாள்.

"அப்பா.. ஏத்தி..."

"வீட்டுக்கு கொண்டு போவோம்..." அவர் பதில் சொல்லும் போதே சுந்தரியின் கேள்வியை ஆழம் பார்த்தார். சுந்தரி தன்னைப் போலவே யோசிக்கிறாளோ?

நாமாக விரும்பிப் பெற்றுக் கொள்வது இலாபம் என்பது போல நாமாக விரும்பி இழப்பதும் இலாபம்தான்.

"மருமகன் பைத்தியமாகத் தெருவில சுத்தி... யாருக்கும் கட்டுப் படாமல்.." அவருக்கு அந்த நினைப்பே பயங்கரமாக இருந்தது.

"அப்பா... இது நாதன் இல்ல... இது வேற யாரோ பைத்தியம்."

"சுந்தரி ... நீ..." அவருக்குப் புரிந்தது.

"ஓம் அப்பா... எம் புருசன் செத்திட்டாரு..."

— மன்னா — 2006 மாசி —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படலைக்கு வெளியே சுந்தரம் மாஸ்ரருடைய தலை தெரிந்தது. கனகம்மா அவசரமாய் வீட்டுக்குள்ளே போய் பாயில் சுருண்டு படுத்திருந்த புருசன் ராசுவை எழுப்பினாள்.

"ஞ்சேருங்க... சுந்தரம் மாஸ்ரர் வாறாரு..."

அவனைப் பிடித்து உலுப்பினால்தான் எழும்புவான். இரவு பத்தரை மணிக்கு வேலை முடிந்து அசதியாகப் படுத்தவன். எப்போதும் இப்படித்தான் கனகம்மாவுக்கு அவனைப் பார்க்க பாவமாக இருந்தது.

# ஊரைத் தெரிஞ்சுக்கிட்டு

ஊரில இருந்த கடை, கண்ணிகள வீட்டுப்போட்டு கையில் கிடைச்சத எடுத்துக் கொண்டு ஓட்டமும், நடையுமாக அலைந்து திரிஞ்சு... அகதி முகாமுக்கு வந்து சேர்ந்த போது ஊனமான உடலும், உயிரும், சொப்பிங் பேக்கும்தான் மிச்சம் என்ட கணக்கில வறுமை தலை விரிச்சு ஆடுது.

சொந்த ஊரில தூர்ந்து போன வாய்க்காலும், பாழ் விழுந்த நிலமும் கையை விட, ஒப்புக்குப் போட்ட கொட்டில் வீட்டுக்குள்ள வாழ்க்க முடங்கிப் போய்ச்சு. கனகம்மா படுத்திருந்த மூன்று பிள்ளைகளையும், பெரு மூச்சோடே பார்த்தாள். அகதி வாழ்வின் காயங்கள் அனைத்தும் ஒன்றன் பின் ஒன்றாக அணிவகுத்தது நினைவுக்கு வர பிள்ளைகளின்ர படிப்பும் கெட்டுப் போய்ச்சு என்ற உளைச்சலோடு படுத்திருந்த ராசுவை எழுப்பினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஞ்சேருங்க... ஞ்சே... சுந்தரம் மாஸ்ரர் கூப்பிடுறார்."

'திடும்'மென எழும்பிய ராசு பாயில இருந்தபடியே படலையை நோக்கினான்.

"வாங்க மாஸ்ரர்."

"உள்ளே வாங்க மாஸ்ரர்" கூப்பிட்டவனுக்கு அவரை இருத்து வதற்கு ஒரு பிளாஸ்ரிக் கதிரைதானும் வீட்டில் இல்லாதது சங்கடப் படுத்தியது. ராசுவுக்கு மாஸ்ரரைக் கண்டதும் நேற்றிரவு வேலை முடிந்து வரும்போது அவரோடு கதைத்தது ஞாபகம் வந்தது.

"ந்தா... ராசு.. உன்ர உழைப்பில குடும்பத்த சமாளிக்க ஏலா தென்டு நினைக்கிறன். உனக்கு இஸ்ரமென்டாச் சொல்லு..." அவர் பொடி வைத்துப் பேச... ராசு சுந்தரம் மாஸ்ரரைப் பார்த்தான்.

"ராசு.. உன்ன மாதிரித்தான் பெட்டிக்கடை சிவாவும் கஸ்ரப் பட்டான். இப்ப அவன் வீட்டில போய்ப்பாரு. ரீவியும், டெக்கும், மிக்சியும், வோசிங்மெசினும் எல்லாம் வெளிநாடுதான்." ராசு நின்று யோசித்தான்.

"ஓம் ராசு. உன்ர மனிசியையும் அனுப்பினியென்டால் உன்டை கஷ்ரம் எல்லாம் போயிடும்."

ராசுவுக்கு உடனே ஒரு பதிலும் சொல்ல இயலாமல் இருந்தது.

"பிறகு பார்ப்போம்" என்று ஒற்றைச் சொல்லில் பதில் சொல்லி விட்டு வீடுவிடென்று வீட்டிற்கு வந்தவன் அதை யோசித்தபடி படுத்து விட்டான்.

சுந்தரம் மாஸ்ரருக்கு ஒரு பொம்பிளையப் புடிச்சு வெளி நாட்டுக்கு அனுப்பினால் சுளையாக ஐயாயிரம் ரூபா கிடைக்கும். கஷ்டப்பட்டதுகளோட பக்குவமாக் கதைச்சுப் பார்த்து விசயத்த முடிக்கிறதில மனுசன் கெட்டிக்காரன். அவருக்கு இப்போது ராசு தான் கண்ணுக்குள் துறுதுறுவென்டு உறுத்துறான். எப்பிடியும் அவரிட இழுப்புக்கு ராசு விழுவான் என்று தெரிந்ததால் மறுநாள் காலை யிலேயே வீடு தேடி வந்து விட்டார் சுந்தரம் மாஸ்ரர்.

"கனக்கயில்ல. பத்தாயிரம் ரூபாவுக்குள்ளதான் எல்லாம். பாஸ்போட்டோட விசா கையில. மெடிக்கலுக்கு நான் பொறுப்பு.."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தரம் மாஸ்ரர் சொன்னது சட்டென்று கனகம்மாவுக்கு நல்ல தென்று பட்டது. ஒரு நிமிசத்தில குடும்பக் கஷ்டம் எல்லாம் தீர்ந்தது போல நினைப்பு. அந்த மலர்ச்சியோடே கனகம்மா ராசுவைப் பார்த்தாள். கனகம்மாவுக்கு புரியாதது அவனுக்குப் புரிந்திருந்த படியால் அவன் அவளைப் பரிதாபமாகப் பார்த்தான்.

"கனகு... மாஸ்ரர் உனக்குத்தான் சொல்றாரு. அவரு பொம்பிள களத்தான் சவூதிக்கு அனுப்புறாரு."

கனகம்மாவுக்கு பகீரென்றிருந்தது. அவள் சட்டெனக் கருகி னாள். அது ஒரு சில நிமிடங்கள்தான்.

இப்போது அவள் மனசு இன்னொரு மார்க்கம் கிடைத்ததாக யோசிக்க ஆரம்பித்தது. உழைப்பும், பிழைப்பும் குடும்பத்துக்குத் தானே. மனசு நியாயம் சொன்னது. ஆசை துளிர் விட்டது.

"நீங்க புள்ளகளப் பாத்துக்கிள்ளுவீங்களா..?" ராசு தலை யாட்டினான்.

மாஸ்ரருக்கு சந்தோசம். அவர் நினைப்பில பணம் சிரித்தது.

"நாளைக்கு நான் கொழும்புக்குப் போறன். காச ஆயத்தப் படுத்திக்கிண்டு வெளிக்கிட்டீரென்டால் பாஸ்போட் எடுத்து விசா வுக்கும் போட்டிரலாம்."

அவர் சொல்ல கனகம்மாவுக்குள் கனவு வளர ஆம்பித்தது.

கனகம்மா வாழ்க்கையில கொழும்பு பார்ப்பதே பெரிய விசயம். மூத்த பொம்பிளப்பிள்ளையிட காதில கிடந்ததக் கழற்றி காசாக்கும் போதும், அதிட மூளிக்காதில வேப்பங்குச்சி செருகும் போதும் நெஞ்சு வலித்தது. மூன்று பிள்ளைகளையும் கட்டிப்பிடித்து உச்சி மோந்து புறப்பட்டாள் கனகம்மா.

கொழும்பு..!

சன நெரிசலும், வாகனங்களின் இரைச்சலும், வியாபாரப் பார்வைகளும் கனகம்மாவின் நெஞ்சைக் குடைந்தது. சுந்தரம் மாஸ்ரர் ஏஜென்சியைப் பார்த்துவிட்டு வருவதாகச் சொல்லி விட்டுப் போயிருந்தார். கனகம்மாவோடு இன்னும் ஐந்து பொம்பிளைகள் அந்த அறையில் இருந்தார்கள். ஒருவருக்கொருவர் அறிமுகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாவிட்டாலும், பார்க்கும் போதெல்லாம் சிரித்துக் கொண்டார்கள். அவர்களுக்கும் சுந்தரம் மாஸ்ரர்தான் ஏஜென்சியாம். தன்னோடு பயணிக்கக் கூடவே ஆட்கள் இருப்பது கனகம்மாவுக்கு ஆறுதலாய் இருந்தது. அவர்களில் இரண்டு குமருகள். தமிழ்ப்பிள்ளைகளாம். மற்ற மூன்று பேரும் நடுத்தர வயது முஸ்லிம் பொம்பிளைகள். அவர்கள் தங்கியிருந்த லொட்ஜ் புறாக்கூடு போல நிறையப் பேர் தங்கியிருந்தார்கள். "ச்சீ" கனகம்மாவுக்கு வியர்த்தது. காற்றோட்டமாக கொஞ்சம் வெளியில் வந்து நின்றால் நல்லது என்று நினைத்தவள் வெளியே வந்தாள். நீண்ட விறாந்தையின் இருபக்கமும் வெளியில் பூட்டி வைத்தபடி பதினைஞ்சு அறைகள். அந்த விறாந்தை முடிவில் பொதுக் கழிப்பறை 'பைனோல்' நெடி தூக்கலாய் இருக்க முகம் சுளித்தாள். அது எப்போதும் ஈரமாய் தண்ணீர் ஒழுகுகிற சத்தமும், வாயைக் கழுவி ஓங்கழித்து துப்பும் சத்தமும், நீரை இறைத்து வாறுகிற சத்தமும் இடைவிடாமல் கேட்டபடியே இருக்க 'கனகம்மா' அந்த மாடிக் கட்டிடத்தின் 'பெல்கனி'யில் நின்று கொண்டு வெளியே பார்த்தாள். முகத்தில் லேசாக காற்றுப்பட ஆறுதலாக இருந்தது.

கனகம்மா அங்கிருந்து அங்கு வருவோர் போவோரைப் பார்த்தபடி இருந்தாள். அவளுக்கு பட்டணத்துப் பெண்கள் உடுத்தும் உடுப்புக்களும், அலங்கரிப்புக்களும் எரிச்சல் மூட்டியது. மனசுக்குள்ளேயே அருவெறுத்தாள்.

"ச்சீ... கலாசாரத்தைத் தொலைத்துவிட்டு எப்படியெல்லாமோ வாழுதுகள்."

ஏற்கனவே சவூதி, பஹ்ரைன் என்று போய் திரும்பி வந்து மீண்டும் இன்னும் சம்பாதிக்க வேண்டுமென்று எந்த வழி காட்டலுமில்லாமல் வெளிநாடு போவதற்குத் துணிந்து வந்திருக்கும் பெண்களை நினைக்கும்போது கனகம்மாவிற்கு ஆச்சரியமாய் இருந்தது.

"அக்கா.." சத்தம் கேட்டுத் திரும்பினாள். விழிப்புருவங்களைச் சீராக்கி... முகத்தை வசீகரப்படுத்திக் கொண்டு ஒரு பெண் நின்றாள். அவளை வேறெங்கும் பார்த்ததாக கனகம்மாவுக்கு சடுதியாக ஞாபகம் வரவில்லை.

"யாரு..." அவள் பதில் சொல்லவில்லை. கனகம்மாவை தலையிலிருந்து கால்வரை கண்களால் அளந்தாள்... பிறகு கேட்டாள்..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீங்களும் பஹ்ரைன் வரப்போறீங்களா அக்கா. உங்கட வடிவுக்கு அங்க நல்ல டிமாண்ட். நல்லா சம்பாதிக்கலாம்." அவள் ஒரு தினுசாகக் கண்ணடித்தாள். கனகம்மாவுக்கு ஏதோ புரிவது போலிருந்தது.

"நீங்க. என்ன சொல்லுறீங்க.."

"ஓம் அக்கா நீங்கள் நல்ல வடிவா இருக்கிறீங்க. என்னை மாதிரி கொஞ்சம் மேக்கப் பண்ணினாக் காணும்."

"இல்ல... நான் குடும்பக் கஸ்ரத்தாலதான்..." கனகம்மா கரைந்தாள்.

"அதானக்கா... சும்மா வீட்டு வேலையென்டால் அங்க ஆக்கின தான். கேரளா டிரைவர்மார் வருவாங்கள்... அட்ஜஸ்ட் பண்ணினாக் காசுதான்."

அவள் சொல்லச் சொல்ல கனகம்மாவுக்கு தன் ராசுவின் அப்பாவித்தனமான முகம் மனசுக்குள் வந்தது.

சட்டென அறைக்குள்ளே வேகமாகப் போனவள் தன்னுடைய உடுப்புப் பையைக் கையிலெடுத்தபடி வீடுவிடென்று படியிறங்கினாள்.

"கனகம்மா" சுந்தரம் மாஸ்ரரின் குரல் அவளை நிறுத்தியது. அவள் திரும்பி அவரது முகத்தை பார்த்தபடி சொன்னாள்.

"மாஸ்ரர் நான் வெளிநாட்டுக்குப் போகயில்ல. கஞ்சியக் குடிச சென்டாலும் இங்க மரியாதையா வாழ்ந்தால் போதும்."

"ஏன் வெளிநாட்டுக்குப் போறதுகள் எல்லாம் கெட்டுப்போற தில்ல கனகு"

"இல்ல மாஸ்ரர். அங்க போய் கெட்டும் போறாங்களென்ட விசயம் நாளைக்கு என்னட புருசனுக்கு சந்தேகத்த ஏற்படுத்தக் கூடாது. நான் என்னிட புள்ள குட்டிகளுக்கு நல்ல அம்மாவா இருக்க விரும்புறன்."

அவள் பஸ்ராண்டை நோக்கி நடந்தாள்.

**கோப்பாய் ஆசிரியர் கலாசாலை தமிழ்த் தினப் போட்டியில் 1ம் பரிசு பெற்றது —1999 —**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுர்.டுர்..டுர்..ர்.. நிமாலை விரட்டிக்கொண்டு அஜந்தன் ஓடினான். நிமால் அவனுக்குப் பிடிபடாமல் லாவகமாக வெட்டி ஓடினான். இருவரும் சிரித்துக் கும்மாளமிட்டு விளையாடுவதைப் பார்க்க அருணுக்குப் பொறாமையாக இருந்தது.

அருணுக்கும் அவர்களுடன் சேர்ந்து விளையாட வேண்டுமென்று கொள்ளை ஆசை. படிக்கட்டிலிருந்து படித்துக்கொண்டிருந்தவன் புத்தகத்தை மூடி வைத்து விட்டு அவர்களுடன் சேர்ந்து கொள்ளலாம் என்று நினைத்தபோது அம்மா சொன்னது ஞாபகம் வந்தது.

# ஸ்கொலர் சிப்

"ஸ்கொலர்சிப் சோதின முடிஞ்சப் பிறகுதான் விளையாட்டு. நீ எங்கேயாவது விளையாடினதக் கண்டன் கொல்லுவன்."

அருண் திரும்பவும் மாதிரி வினா விடைப் பயிற்சி புத்தகத்தினுள் முகத்தைப் புதைத்தான். அவனது கவனத்தைக் கலைத்துக் கொண்டு திரும்பவும் அந்த டுர்... ர்ச் சத்தம் கேட்க நிமிர்ந்து பார்த்தான். இப்போது அஜந்தன் நிமாலை விரட்டி ஓடிக்கொண்டிருந்தான்.

அருண் அம்மா பயத்தை உதறிவிட்டு படிக்கட்டி லிருந்து இறங்கினான்.

"டேய்... நானும் வாறன்டா..."

இப்போது விளையாட்டின் கோலம் மாறியது. மூன்று பேரும் ஆடக்கூடிய தாண்டிக்கோட்டுக்கு மாறியிருந் தார்கள். அருண் வேகமாக ஒற்றைக்காலில் கெந்தியடித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான். சட்டென அவன் சந்தோஷம் கருகுவது போல் தலைக்குள்ளே புதுசாக வலித்தது. 'சுள்"ளென்று குத்திய வலி தலை முழுவதும் பரவுவது போலிருக்க இடறினான். தலை சுற்றியது. அப்படியே கீழே இருந்தான். நொடிக்குள் முகமெல்லாம் வியர்த்தது. கண்கள் இருட்ட சாய்ந்தான்.

"அருண்... அருண்..." வசந்தி ஓங்கியழைத்தாள். வெகுநேரமாய் அருணைக் காணவில்லை. பயந்து போனாள். ஒருவாரமாய் அருண் ஒரு மாதிரியாக ஆகிவிட்டான். தனியாகப் போய் அமர்ந்து கொள் கிறான். பார்வையைக் குத்திட்டு அசைவில்லாமல் இருக்கிறான். வசந்திக்கு அவன் போக்கு மனசுக்குள் குடைந்தது. அருண் எவ்வளவு நல்ல பிள்ளை. குழப்படியில்லாமல் பள்ளிக்கூடம், ரியூசன், பயிற்சி என்று உற்சாகமாய் ஓடிக்கொண்டிருந்தவன் இப்போது கொஞ்ச நாளாய் சோம்பேறியாக., ஒழுங்கில்லாமல் இருக்கிறானே என்று யோசிக்கும்போது வசந்திக்கு கோபம், கோபமாய் வந்தது. சோதனைக்கு இன்னும் நான்கு மாதங்கள்தான் இருக்கின்றது. ஐந்தாம் தர ஸ்கொலர்சிப் சோதினை என்றால் சும்மாவா? இப்போ தெல்லாம் பிள்ளைகள் ஸ்கொலர்சிப்பில் பாஸ் பண்ணுவதைத் தமது கெளரவம் என்று நினைத்து அல்லாடுகிற பெற்றோர்கள்தான் அதிகம். அதற்கு உதவிப் பணம் கிடைக்கின்றதென்பதை விட தம்மை புத்தி சாலிப் பெற்றோர்கள் என்று அடையாளப் படுத்துவதாக எண்ணிக் கொண்டு பாடாதபாடு படுகின்றார்கள். இவர்களின் "ஈகோ"க்களில் அகப்பட்டு விழி பிதுங்குகிற பிள்ளைகள்தான் பாவம்..

"எப்பிடியும் அருண் மாவட்டத்திலேயே பெஸ்ட் ரேங்கில் பாஸ் பண்ணுவான்" வசந்திக்கு தன் மகன் அருண் பற்றிய கனவு தவிடு பொடியாகிற மாதிரி நினைக்கும் போதெல்லாம் ஆத்திரம் வருகின்றது.

"வசந்தீ... உன்ர மகன்தான் கெட்டிக்காரனாம்."

"ஏன் யாரு சொன்னா.."

"எல்லாரும்தான் சொல்லுதுகள்.."

வசந்தியிடம் ஏதாவது காரியம் ஆகவேண்டுமென்றால் அருணைப் பற்றி அவளிடம் புளுகிக் கதைத்தால் போதும். அப்படியே குளிர்ந்து போய் விடுவாள். எப்படியும் ஸ்கொலர்சிப் சோதனையில் அருணை முதல் தரத்தில் பாஸ் பண்ண வைக்க வேண்டும் என்பதில் அவளுக்குள் ஒவ்வொரு நாளும் வைராக்கியம் உரம் பெற்றுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டே இருந்தது. முதல் வேலையாக ரீவியின் மின்சார இணைப்பை துண்டித்து விட்டாள்.

"அருண்... இனி நீ ரீ.வி பார்க்கக் கூடாது. சோதின முடிஞ்சப் பிறகுதான் இனி வீட்டில ரீ.வீ."

"அம்மா... அம்மா சனிக்கிழமை ஜூனியர் ஜீ பார்க்கிறன்மா." அருண் கெஞ்சினான்.

வசந்தி கரைவதாயில்லை. பள்ளிக்கூடத்தில் அருண் கெட்டிக் காரன்தான் என்று அவனுக்குக் கற்பிக்கும் குணா ரீச்சர் சொல்லி ஊட்டிய நம்பிக்கையையும், அருணின் நடத்தையையும் வைத்து ஒவ்வொருநாளும் ஒப்பிடுவதும் உறைவதுமாக இருந்தவளுக்கு அருணுக்குள் நடக்கிற இரசாயனப் போர், அவனது உற்சாகமிழப்பு எல்லாம் அவளைப் பயமுறுத்தியது.

"இன்னும் ட்றை பண்ணனும்." மனதுக்குள் சொல்லிக் கொண்டு தேடினாள்.

இப்போதெல்லாம் அருண் சரியாகச் சாப்பிடுறானில்ல. படிக்கும்போது கொறித்துக் கொள்ளட்டுமே என்று வாங்கிக் கொடுத்த 'மிக்ஸர் பக்கட்'தான். அத்தோடு சரி. வீட்டில் அவனுக் காக எடுத்து வைக்கிற முட்டையையும், பாலையும் தொடுகிறானில்ல. பின்னேரம் ஆறுமணியென்றதுடன் "தலைக்குள்ளே என்னவோ செய்யுது." என்று சொல்லிப் படுத்து விடுகிறான். எஞ்சிய நேரத்தில் புத்தகத்தை திறந்து வைத்துக்கொண்டு வேறெங்கோ மனது அலைபாய வெகுநேரமாய் உட்கார்ந்திருக்கிறான் என்கிறபோது வசந்தி துடித்துப் போனாள்.

அருணுக்குள் புதிதாக ஏற்பட்டுக் கொண்டிருக்கிற மாற்றம் என்னவென்று புரியாமல் அவனை வாய்க்கு வந்த படியெல்லாம் ஏசினாள். "படிக்கிறதுக்கு கள்ளமொழிக்கிறாய். என்ர மானத்த வாங்கப்போறீயா?" என்று கேட்டதுடன் விட்டுவிடாமல். எந்த நேரமும் உழைப்பு, பிழைப்பு என்று ஓடிக்கொண்டிருக்கும் அப்பாவுக்கும் சொல்ல, அவரும் என்ன ஏதென்று விசாரிக்காமல் "வடுவா.. சோதினையில பெயிலென்டால் முதுகுத் தோல உரிப்பன்." என்று பயமுறுத்தியதுமல்லாமல் அவன் முதுகில் "தொம் தொம்" மென்று ரெண்டு போட பிள்ளை வசந்தியிடம் ஓடிவந்து தாயின் முகத்தைப் பார்க்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசந்தியும் கடுகடுத்துக்கொண்டு "வேறென்னடா... ஒழுங்காப் படிக்காட்டி இதான் நடக்கும்." என்று வெறுப்பாகி அருணுக்குத் தலையில் சொட்டினாள். அருணுக்குத் தலைக்குள் வலித்தது. வசந்திக்கு இத்தனை நாளும் பட்ட கஷ்டம் வீணாகப் போய் விடுமே யென்ற அச்சம் மேலோங்க பிள்ளைக்குள் என்ன நடக்கிறது என்பதை ஆராய மனம் நினைக்கவில்லை.

அருண் பள்ளிக்கூடம் போய் அங்கு ரீச்சர் படிப்பித்ததை யெல்லாம் உள்வாங்கி கனத்த மண்டையோடு வீட்டுக்கு வந்து சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போதே அவனது பையைத் திறந்து கொப்பிகளை எடுத்து ஒவ்வொன்றாய்ப் பார்த்து பிழை விட்டதற் கெல்லாம் வெருட்டி, உருட்டி புதிய வியாக்கியானம் கற்பித்து, சாப்பிட்டு முடிந்த கையோடு மரியான் மாஸ்ரரிடம் ரியூசனுக்கு அனுப்பி அவன் புண்ணியாமீன் சென்.ஜோசப் என்று வாங்கி வைத்திருக்கும் வினாப்பத்திரங்களையெல்லாம் அவன் கையில் திணித்து துவண்டு போகும்வரை பயிற்சி... படாதபாடு... அருணும் தாக்குப் பிடிக்கிறான் என்பதற்காக குருவித் தலையில் பனங்காயை வைப்பதுபோல தேவையற்ற கண்டனமும், தண்டனையுமாய்... வியாபித்து... இப்போது அவனுக்கு வலிக்கிறது. தலைக்குள்ளே என்னவோ செய்கிறது.

"என்னால முடியலம்மா. ஒரேயொருநாள் ஓய்வாக இருந்து விடுகிறேனே" என்று பரிதாபமாக அவன் பார்ப்பதை யாரும் புரிந்து கொள்வதாயில்லை. ஏன் இந்த அம்மாவும், அப்பாவும் இப்படி இருக்கிறார்கள்? பத்து வயது வாழ்க்கையென்றாலே இப்படித் தானோ? ஆரம்பத்திலேயே "மொக்கு" என்று பெயரெடுத்திருந்தால், போனால் போகுது என்று விட்டிருப்பார்களோ? ஓம். நிமாலையும், அஜந்தனையும் போல சந்தோசமாக விளையாடி இருக்கலாம். அவர்களும் தானே வகுப்பில நன்றாக படிக்கிறார்கள். அவர்களும் ஸ்கொலர்சிப் பாஸ் பண்ணி விடுவதாகத்தானே நம்புகிறார்கள். ஆனாலும் விளையாடுகிறார்கள். ரீவியில் ஜூனியர் ஜீ பார்ப்பதாகச் சொல்கிறார்கள். ஏன் எனக்கு மட்டும் இப்படி.? அவன் கண்கள் வழியாக இதயம் கரைந்து கசிந்தது. அழுது சோர்ந்து போனான். அவனது மனதின் களைப்பு உடலைப் பதற வைத்தது. அடிவயிற்றி லிருந்து பந்தாக உருண்டு வந்த ஏதோவென்று வாய் வழியாக வெளி யேறுவது போலிருக்க தலை சுற்றியது. அம்மாவின் பிடியிலிருந்து தப்பித்துக்கொண்டால் போதும் என்று நினைத்து யாரும் பார்க்க மாட்டாத இடமென்று வீட்டுக் குளியலறைப் பிளேட்டில் ஏறியிருந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வனுக்கு திரும்பவும் அதேபோல தலை சுற்றியது. கீழே சரிந்தான். பாதாளத்தில் இறங்குவது போல சுழன்றவனின் தலையில் கறுப்பாய் ஏதோ மோதியது. அருணைக் கொழும்பு ஆசுப்பத்திரியில் சேர்த்திருந் தார்கள். அவனுக்குத் தலையில் காயம். கட்டுப் போட்டிருந்தார்கள். பிதற்றுகிறான். ஓயாமல் சம்பந்தா சம்பந்தம் இல்லாமல் கதைக் கிறான். அம்மாவையும், அப்பாவையும் ஓர் அசிங்கமான பூச்சியைப் பார்ப்பது போல பார்க்கிறான். அம்மாவும், அப்பாவும் கிட்ட வந்தாலே பைத்தியம் பிடித்தவன் போல வீறிட்டுக் கத்துகிறான்.

எல்லாரும் சொன்னார்கள், "பாவம் அருண். நல்லாப் படிக்கிற பொடியன். இந்த முறை ஸ்கொலர்சிப் எடுத்திருந்தால் நல்லாப் பாஸ் பண்ணியிருப்பான். என்ன செய்யிறது, விதி... தலையில அடிபட்டதால அவனுக்குப் பித்துப் பிடிச்சிட்டுது."

ஆனால், அருணின் பிஞ்சு மனதின் அடிவாரத்திலிருந்து எழுந்த ஓலம் எதுவென இன்னும் யாரும் கண்டு பிடிக்கவில்லை.

வசந்தி கூட இன்னும் வெள்ளந்தியாய்... ஓர் தெம்மாடு போல சொல்லுகிறாள், "தலையில அடிபட்டதால பிள்ளைய இப்பிடி ஆக்கிட்டுது."

– காலநதி 2006 ஜூன் –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றைய தினசரிப் பத்திரிகையில் கட்டம் போட்ட செய்தி.

"ஆசிய நாடுகளின் ஓவியக் கண்காட்சியில் சூரிய நாராயணனின் "ஒரு தேவதையின் ஊர்வலம்" என்ற ஓவியம் முதல் பரிசு பெற்றது."

சூரிக்கு இருப்புக் கொள்ளவில்லை. அந்தப் பத்திரிகையை எடுத்துக்கொண்டு ஓடினான். இதைப் பொன்னியிடம்தான் முதலில் சொல்ல வேண்டும்..

"பொன்னி நான் தீட்டிய ஓவியம் பரிசு பெற்றிருக் கிறது பொன்னீ..." கூவினான் சூரி. அவளின் கையைப் பிடித்துக்

# ஓவியக் காதல்

கொண்டு கூத்தாடினான். அந்தப் பெண்ணும் சிரித்தாள். மலைமுகட்டுப் பளிங்குபோல தகதகத்தாள். அவளுக்குத் தெரியும் "சூரிக்கு என்னை விட்டால் யாருமில்லை" பரிசு பெற்ற ஓவியத்தில் பரிமளித்த தேவதை இந்தப் பொன்னிதான் என்பது இந்த உலகத்தில் யாருக்குத் தெரியும்.? ஆனால், சூரியென்கிற ஓவியனைப் படியேற்றி விட்டது இந்தப் பொன்னிதான் என்பது சூரிக்குத் தெரியும்.

சூரி பயிற்றப்பட்டவனல்ல. பிறவிக் கலைஞன்.

சிறு வயதினிலேயே வர்ணங்களால் ஜாலம் செய்ய முயன்றவன் அந்தக் கலைஞன். ஆற்றுப்படுக்கைக் கல்லாக தன்னை உருவாக்கும்போது பெற்றவர்கள் கூடத் தடையாகத்தான் இருந்தார்கள்.

"இதுவென்ன வெட்டி வேலை. உருப்படாதவனாகி விடுவாயோ, பொழுதெல்லாம் தூரிகையோடு என்ன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவோ?

அவனை விரட்டி விரட்டி வெறுத்தார்கள்.

சூரி தானே வரைந்த ஓவியங்களைத் தானே பார்த்து வியந்து... சிரித்து... பாராட்டி... மற்றவர்கள் அறியாது பெட்டிக்குள்ளேயே பூட்டி வைத்து விசனப்படுவான்.

அவனுக்குள்ளாக நிமிர்ந்து நின்ற சிருஷ்டியை யாரும் உணரவில்லை. அதனால்தான் சூரி வீட்டை விட்டு, அந்த ஊரை விட்டு ஓடி வந்தான்.

அவன் ஓடிவந்த கிராமம் அவனோடு எழில் கொஞ்சிப் பேசியது. சூரி, பச்சைப் புல்வெளிகளின் கண்ணுக்குத் தெரியாத தாகத்தை கற்பனையில் வரைந்தான். மலை முகடுகள் மேகத்தை முத்தமிட்டதை இவன் வர்ணங்களால் முத்தமிட்டான், பகலவன் உதயத்தைத் தூரிகையால் தொட்டான், பூச்சூடிய புதுப்பெண்ணின் உள்ளத்து ஆசைகளைச் சித்திரத்தில் பூசினான். அந்த அற்புதக் கலைஞனோடு கைகோர்த்துக் கொண்டவள்தான் பொன்னி. கலாரசிகை. அவள் சூரியின் ஓவியத்தோடு அவனையும் ரசித்தாள்.

சூரி வரையும் ஓவியங்கள் கதை பேச வேண்டும். காண்போர் மனங்களில் நடமாட வேண்டும் என்ற ஓவியனின் கனவை மெய்ப்பிக்க பொன்னியின் அழகுருவம் இறங்கி வந்தது. கிராமத்து செழுமையை மேனியில் வாரி இறைத்துக்கொண்டு ஓவிய இலட்சணங்களோடு ஒன்றித்து கொடியாய்... மலராய்... புனலாய்... நிலவாய்... இந்த சித்திரக் காரனின் தூரிகைக்குள் கட்டுப்பட்டுப் போனவள் பொன்னி.

முகமில்லாத கிராமத்திற்குள் தொலைந்து விடுவானே இந்த சூரியன் என்ற கவலையில் அவள் அவன் காதுக்குள் சொன்னதைத் தீட்டினான். நாட்டின் தலைவரை யாரும் எண்ணிப் பார்க்காத கோணத்தில் ஓவியத்தால் சிறைப்பிடித்து அவருக்கே பரிசளித்த போது, தலைநகரம் அவன் பெயரை ஒருதடவை ஊடகத்தால் உச்சரித்தது. சூரிய நாராயணன் மேகம் விலகித் தனியாகத் தெரிந்தான். உலகம் முரசறைந்தது. சூரியின் கலை வண்ணத்தை நாடு பேசிக்கொண்டது. நகரத்தின் வியாபாரிகள் ரசிகர்களுக்கு முகவர்கள் ஆனார்கள். சூரியின் தூரிகை பிரசித்தவைகள் ஏராளமாய் விலை போனது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திரமாய் தீட்டப்படுகின்ற உருவங்களுக்கு உயிரூட்டும் வித்தையை அவன் தொழில் ரகசியமாய்ப் பாதுகாத்தான். அது அவன் ஆற்றலின் வெற்றி என்றே நம்பினான்.

இன்று பரிசு பெற்ற "ஒரு தேவதையின் ஊர்வலம்" ஓவியம் அவன் மனதுக்குள் கருக்கொண்ட பொழுது அங்கே தேவதையாக பொன்னி யைப் பார்த்தான். அவளின் சிரிப்பின் வசீகரத்தை பக்கத்திலிருந்து படித்து பலகையில் பதிவாக்கினான்.

சித்திரக் கூடத்தில் இவனுக்காய் நடமிட்ட பொன்னியை தன் வெற்றிக்குப் பங்காளியாக்கினான்.

நேற்றுவரை கலையுலக ஜாம்பவான்கள் கூட மனனம் செய்த சூரியை, இந்தத் தூரிகைக்காரனை காற்றுக்கூட இன்று கவனித்தது.

கலாசார அமைச்சு தலைநகருக்கழைத்தது. புகழாரம் சூட்டியது. பரிசு பெற வெளிநாடு செல்ல வேண்டுமென்றது. சூரியின் அப்பா தேடி வந்தார். "சூரி, நான்தான் உன்னைப் பெற்றவன். என்னை உன் அப்பாவென்று இந்த நாடறியச் சொல்ல மாட்டாயா?" என்று அப்பா உறவு பேசினார்.

"அப்பா... இந்த சூரியனை உங்கள் வீட்டு அறைக்குள்ளே பூட்டி மறைத்து வைக்கப் பார்த்தீர்களே! என் தூரிகையை முறித்துப் போடப் பார்த்தீர்களே! போங்கள்... என் அரிச்சுவடிகள் இன்னும் நான் பிறந்த மண்ணில்தான் இருக்கிறது. போங்கள்." என்று கடிந்து அனுப்பி வைத்தான்.

நாடறிந்த சூரியன் உலகறியப் புறப்பட்டான். "பொன்னி நான் விருது வாங்கி வருகிறேன். அதுவரை எனக்காகக் காத்திரு." என்று விரிந்த வானத்தில் பறந்தான்.

அந்நேரம்தான் இந்த நாட்டில் முதுகு காட்டி உறங்கிய இனப் புயல் முகம் காட்டத் தொடங்கியது.பகையைச் சுமந்தவர்கள் சூறை யாடத் தொடங்கினார்கள். செந்தீயைக் கழுவ செந்நீர் பாச்சப்பட்ட குண்டுகள், வாய்க்கால்களையும் விட்டு வைக்கவில்லை. அகதிகளும், பரதேசிகளும் புதுசு புதுசாய்ப் பிரசவமானார்கள். நாடு கடந்த ஓட்டத்தில் முகவரியிழந்தது பொன்னியும்தான். இந்தியாவின் தமிழ் நாட்டில் எங்கோ ஓர் அகதிமுகாமில், ஏதோ ஓர் கொட்டிலில் பொன்னி வீசியெறியப்பட்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரி கை நிறைய விருதுகளோடும், மாலைகளோடும் தாய் நாடு திரும்பினான். பொன்னியிடம் பாத பூஜை செய்யத் தேடினான். காணவில்லை. கறுப்பும், கறையும், பொன்னியின் கிராமத்து எழிலைத் தீனியாக்கியிருக்க பொன்னி எங்கிருக்கிருக்கிறாள் என்று அவனுக்குத் தெரியவில்லை.

யோசித்தான். பொன்னியைக் கண்டுபிடிக்க வேண்டும் என்பதற்காக ஓவியப் பயிற்சிப் பட்டறையொன்றினை ஆரம்பித்தான். பொன்னி எங்கிருந்தாலும் அங்கு அவனைத் தேடி வருவாள் என்று நம்பினான். அவன் தூரிகை வித்தையைக் கற்றுக் கொள்ளப் பலர் வந்தார்கள். பொன்னி வரவில்லை. அவன் பட்டறையில் பட்டை தீட்டப்பட்டு லதாக்களும், ராமுக்களும், மணியம் செல்வன்களும் கரையொதுங்கினார்கள். ஆனால், சூரியின் இதயத் துடிப்பை அளந்து சொல்லுகின்ற பொன்னி மட்டும் வரவில்லை.

முறிந்து போனான் சூரி. அவனது தூரிகைக்குள்ளிருந்த பலம் வடிந்து போனது. சூரிக்குள்ளிருந்த கலைஞன் கற்பூரம் கரைவது போல காற்றில் கரைந்து போனான். தலைநகர் வாசத்திற்கு முழுக்குப் போட்டுவிட்டு தன் பிறந்த ஊரின் பூட்டிய அறைக்குள் முடங்கிப் போனான் சூரி.

இப்போது நாட்டில் யாரோவெல்லாம் ஓவியர்களாக புகழ் பெற்றார்கள். சூரியின் நாமத்தை மட்டுமே பேசியறிந்த காற்று, இப்போது வேறு யாருடைய பெயரையெல்லாம் உச்சரித்தது, ஊடகங்கள் வேறு யாருக்கோ பல்லக்குத் தூக்கியது.

தத்துப் பிள்ளைகளும், கற்றுக் குட்டிகளும் கூட விமர்சித்தார்கள்.

"சூரியனுக்கு இது இறங்குமுகம். சூரியின் ஆற்றல் அறுந்து போனது. அவன் எழுந்திருக்க முடியாதென்றெல்லாம் கொக்கரித்தார்கள்.

சூரியின் அப்பா ஓடிவந்து சொன்னார்.

"சூரி.. என்மகனே.. நீ.. என்ன செய்கிறாய்? எழுந்திரு.. எழுந்து பிரகாசி."

சூரி சொன்னான், "அப்பா... வானத்து நிலவை என் தூரிகையால் பிடித்து உங்கள் கையில் தருகிறேன். ஆனால்... ஆனால்... எனக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் பொன்னி வேண்டும்."

காலம் கடந்து போயிற்று. சூரியிடம் யாரோ சொன்னார்கள், "இந்தியாவிலிருந்து அகதிகள் நாடு திரும்புகிறார்கள்." சூரிக்கு ஏனோ துளிர்த்தது. எழுந்து நடந்தான். கப்பலால் இறக்கி விடப்பட்ட நாடு திரும்பிய மனிதர்களுக்குள் கண்களால் துழாவினான். பதிவுகளுக்காய் காத்திருந்த கூட்டத்துள் மேய்ந்தான். பொன்னி இல்லை. நெஞ் சறைக்குள் இருதயம் ஓலம் போட்டு வேகமாய் அடித்தது. ஏமாற்றத் தால் துடித்தது. துவண்டு நடந்தபோது...

"சூரி.." காந்தமாய் ஒரு குரல். அதிர்ந்தான். திரும்பினான். அங்கு கண்களில் ஈரம் கசிய அவள் நின்றாள். இவன் விழிகளைச் சுருக்கி கூர்ந்து பார்த்தான். மெலிந்த தேகம், அழுக்கு ஆடை, அவள் யார்?

"என்னைத் தெரியவில்லையா? நான்... நான்... பொன்னி."

ஜீவப்பிரவாகம் ஊற்றெடுக்க ஓடி அவளருகே சென்றான். பொன்னிதான். ஆனால் களையிழந்து... உருக்குலைந்த... பொன்னி. ஏன் இப்படி? என் தூரிகைக்குள் வசப்பட்ட எழில் எங்கே? பொன்னி இதென்ன கோலம். பொன்னி... பொன்னி... சூரிக்குள் மின்சாரம் பாய்ந்தது. தாவினான். அவளின் கைகளைப் பிடித்து முத்தமிட்டான். இவன் முகத்தில் அவள் எலும்பு துருத்தியது. "பொன்னி என் சீவனுக்குள் வாசம் செய்பவளே. ஏன் இப்படி மாறினாய்." பொன்னி சொன்னாள், இது கலை சூரி. இந்த மண்ணின் பிரதிபிம்பம் தானே கலை..." துடித்துப் போனான் சூரி.

"பொன்னி வா... என்னோடு என் பயணத்தில் நீதான் நாயகி." சூரிக்குள் ஞானம் பேசியது.

தூரிகையோடு எழுந்தான். மீண்டும் அந்த ஓவியன் ராஜதர்பார் நடத்த வருகிறான், இப்போது அவனது வண்ணக் கலவையில் ஒரு "யுத்தமும் கோலமும்" எழுந்தது. மெலிந்து வற்றிப் போன பொன்னி, கையில் ஊன்றுகோலுடன். கண்களால் சமாதானம் யாசிக்கும் பொன்னி. யுத்த வெறியாட்டாத்தால் பாதிக்கப்பட்டு நைந்து போன பொன்னி. சூரியின் "யுத்தமும் கோலமும்" ஓவியத்தின் நாயகியானாள்.

அந்த ஓவியத்தைக் காண்பவர் விழிகள் உயர்ந்தன. உலகம் வியந்தது. ஓவியக் கண்காட்சியில் யுத்தமும் கோலமும் ஓவியத்தை தந்ததற்காக சூரி மீண்டும் பரிசு பெற்றான். இது சூரிக்கு இரண்டா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வது பயணம். அழைப்புக்கள் வந்தன. பாராட்டுக்கள் குவிந்தன. பொன்னியின் கரத்தைப் பற்றிக் கொண்டே வெற்றி நாயகனாக வலம் வந்தான் சூரி.

உலகம் பேசியது "சூரி ஓர் இறவாக் கலைஞன்" அதற்கு சூரி சொன்னான், "பொன்னி என்னுடன் இருக்கு மட்டும்."

**– காலநதி 2006 ஓகஸ்ட் –**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றவர்கள் நினைத்தபடி பிசைந்து பிடித்து வைக்கிற மாதிரி சாராவால் இருக்க முடியவில்லை. அவளைச் சுற்றி இருக்கிற எல்லோர் மேலும்தான் கோபம் கோபமாய் வருகிறது. வேகமாக சுழன்று வீட்டு ஓய்வுக்காக நிற்கப் போகிற மேசை விசிறிக்கூடாக எதிரில் விழும் தன் நிழலைப் பார்க்கிறாள். அதுவும் கிடுகிடுவென அசைந்த படி... மனசைப் போலவே ஆடிக்கொண்டிருக்கிறது.

ரகுராமன்தான் இப்போது பிரச்சினை!

அவனின் பெயர் தெரிந்திருக்கிற அளவிற்கு அவன் முகமே தெரியாத அம்மா வீட்டில் ஒரே அர்ச்சனைதான்.

# ஒபக்கம்

அரசல் புரசலாக யாரோ காதைக் கடித்தார்கள் என்பதற்காக சாராவை ஓர் அசிங்கமான புழுவைப் பார்ப்பது போல அம்மாவும், அப்பாவும் ச்சீ... கூரை மீதேறிக் கூவவில்லையே தவிர அந்த விசயம் எல்லோருக்கும் தெரியும்படி செய்து விட்டார்களே... அவளுக்கு ஆத்திரம் ஆத்திரமாய் வந்தது.

"இதுக்குத்தான்... சொன்னன்... வீட்டில கிட வென்டு. போற இடத்தில மரியாதையா இருக்கத் தெரியாதவளுக்கெல்லாம் என்னத்துக்கடி வேலை..." சாரா அழாக்குறையாகக் கேட்டாள்.

"அம்மா... வேலை செய்யுற இடத்தில ஆக்களோட கதைக்கிறது பேசுறது இல்லையா."

அம்மா சினந்து பல்லைக் கடித்துக்கொண்டு கறுவினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எடி... மற்றப் பொம்பிளைகள் மாதிரியாடி நீ. புருசனைக் குடுத்திட்டு இருக்கிறவள் அடக்க ஒடுக்கமா இல்லாட்டி..."

சாராவிற்கு மையத்தை விட்டு விட்டு ஓரத்தையே கிள்ளுவது போல இந்த வலி. அழுகை வந்தது.

"ச்சே... ரகுராமனைச் சந்தித்திருக்கவே கூடாது." முள்ளைக் கடித்த ஒட்டகத்தைப் போல அந்த ரத்தம் சொட்டும் நினைவுகள் முண்டிக்கொண்டு எழுவதை அவளால் நிராகரிக்க முடியவில்லை.

அற்பாயுசில் செத்துப்போன புருசனையும், அந்தரித்த நாட்களையும் தொட்டுக் கொண்டு நினைவுகள் சுழன்றன.

அம்மாவுக்கும், ஐயாவுக்கும் வீட்டில் இன்னும் மற்றப் பிள்ளைகளுக்குச் செய்ய வேண்டிய பெரிய பொறுப்புக்களும்,. கடமைகளும் இருக்கிற போதே, சாராவும் பிள்ளைகளும் மூதேவிக் கட்டைகள் மாதிரி அவர்களின் வழியை அடைத்துப் பிடித்துக் கொண்டு இருப்பதில் என்ன நியாயம் இருக்கிறது. வீட்டில் ஒரு நேரம் கொடுப்பதும், மறுநேரம் திட்டுவதுமாக இருக்கிறார்களே என்பதற்காகத்தானே தான் படித்த படிப்பிற்கு ஏதாச்சும் ஓர் வேலையென்று வெளியே சென்றாள். அப்போது வானத்திற்கும், பூமிக்குமாகக் குதித்து ஆடிய ஆட்டம் அவளுக்கு இன்னும் நினைவிருக்கிறது.

"ஓம்... வெளியால வேலைக்குப் போய் இங்க இருக்கிறவையிட மானத்த வாங்கப் போறியாக்கும்."

"சாப்பாடும், உடுப்பும் மட்டும்தானா மனிசரிட தேவை. பிள்ளைகளிட படிப்பு, வாழ்க்கையென்டு எல்லாமும்தான் இருக்கு." அதிகம் கதைத்த, புதுசாக அரசாங்க வேலைக்குப் போற தம்பியிடம் சாரா நேரடியாகவே கேட்டாள்.

"தம்பீ, நீ கலியாணம் முடிச்சாலும் என்னையும், பிள்ளைகளையும் வைச்சுப் பாப்பியோ? வாறவள் விடுவாளோ?" அவள் கேள்வி அவர்களுக்கு உறைத்தது. தந்தி பாசையில் பேசுவது போல ஆளுக்காள் பேசி அடங்கிப் போனார்கள்.

இப்போது முன்பு போல சாரா விசயத்தில் மூக்கு நுழைத்து வீட்டில் யாரும் நச்சரிப்பதில்லைத்தான். முன்பு என்றால் அவள் உடுத்துகிற உடுப்பிற்கு ஒரு வக்கனை, ஒரு நக்கல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எடி... சாரா, இவ்வளவு டீப்பா கழுத்து வெட்டித் தைக்கக் கூடாதென்டு தெரியாதா? ச்சீ... இவ்வளவு டைட்டாவா சட்டை போடுறது. அசிங்கம்."

சாராவுக்குத் தெரியும் தான் அவ்வளவு மோசமாக உடுத்துவ தில்லையென்றாலும்கூட மற்றவர்களின் வார்த்தைகளை எச்சரிப் பாகவே எடுத்துக்கொண்டாள். சாரா அவசியத்தைத் தவிர வேறெதற்கு என்றாலும் வெளியில் செல்லுவது அரிதுதான். எங்காவது வெளியில் பார்க்கிறவர்கள் அனுதாபமாக அவளிடம் கதைக்கும்போது அவள் கழிவிரக்கத்தில் கண் கலங்குவதுதான். ஆனால், அந்த "பாவம் சாரா" என்ற வார்த்தையிலே போலித்தனம் இருப்பது அவளுக்குப் புரியாமலில்லை.

சாராவும் சரி, அவள் பிள்ளைகளும் சரி மற்றவர்களிடம் இரந்து நிற்பதைக் கேவலமாத்தானே நினைக்கிறார்கள்.

விதவைகளுக்கென்று இனாமாகக் கொடுப்பதைக் கூட போய் வாங்கி வருவதற்கு சாராவிற்கு மனம் இடம் கொடுப்பதில்லை. அதை வாங்கினாலும் குற்றம், வாங்கா விட்டாலும் குற்றம் என்ற கணக்கில் தான் வீட்டில் உள்ளவர்களின் கதை.

தன் படிக்கிற பிள்ளைகளுக்குப் பள்ளிக்கூடத் தேவை ஒன்றிற் காக உதவி கேட்டு நிறுவனம் ஒன்றில் போய் நின்ற போதுதான், இவள் படிப்பையும், நிலைமையையும் விசாரித்து விட்டு அங்கு வேலைக்கு வரும்படி அழைத்தார்கள். அதற்கு சாராவின் அழகும்தான் ஒரு தகுதியாக நோக்கப்பட்டது என்பது சாராவிற்கு தெரியாமல் இருக்க நியாயமில்லை.

அங்குதான் ரகுராமன் இவளுக்கு அறிமுகமானான். அவன்தான் அங்கு மேலதிகாரி. ஆரம்பத்தில் கொஞ்சம் தாராளமாய் இவளோடு அவன் சிரித்துப் பேசியதில் ஏதாவது உள்ளர்த்தம் இருக்குமோ வென்று இவளுக்கு வியர்த்துக் கொட்டியது உண்மைதான். இப்போது பழகிவிட்டது. இப்போது பதிலுக்கு இவளும்தான் சிரிக்கிறாள்.

"சாரா.. வேலைக்குத் தகுந்தாப்போல சுடிதாரும் போடலாம். ஜீன்ஸ் போடுறதென்டாலும் ஓக்கே. சாரிதான் கட்டணுமென்டில்ல."

சக அலுவலர் ஒருவர் யதார்த்தம் பேசியது ஆரம்பத்தில் எரிச்சல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூட்டினாலும் இப்போது அதுவும் பரவாயில்லைப் போலத் தெரிந்தது. கொழும்புக்கு செமினார் ஒன்றுக்கு வெளிக்கிட்ட போது "சாரா, அங்க எல்லாம் ஈசிவெயார்தான். ப்ளீஸ்... கோப்ரேட் பண்ணுங்க." என்று ரகுராமன் சொன்னபோது சரியெனத் தலையாட்டினாள். அவளின் உள்ளாந்த விருப்பம் ஒன்று கட்டுடைந்து நிறைவேறுகிற ஆர்வத்தில் அதிகமாக சந்தோசப்பட்டாள். ஜீன்சும், றொப்பும் கிச்சென்று பிடித்துக்கொண்டு அவளுக்கு நன்றாகத்தான் இருந்தது. கொழும்பில் வழமைக்கு மாறாக மற்றவர்களோடு கதைக்கவும் செய்தாள்.

அவள் வேலை செய்யும் அலுவலகத்தில் மொத்தம் பதின்மூன்று பேர். தினமும் எட்டுப் பேர் வெளிக்கள வேலையென்று வெளியே கிளம்பி விட்டால் ஐந்து பேர்தான் அலுவலகத்தில் காலையிலிருந்து மாலைவரை இருப்பார்கள். சாரா எப்போதும் ரகுராமனோடு அவனுக்கு உதவியாக இருப்பது போல வேலையைப் பகிர்ந்து கொடுத்திருந்தார்கள்.

சாராவை ரகுராமன் அதிகமாகத்தான் கவனிக்கிறார் என்று மற்றவர்கள் கதைக்கிறபோது இவளுக்குள் புளுக்கம்தான். ரகுராமனுக்கு அவன் செய்யும் வேலைகளில் எல்லாம் சாராவும் இருக்க வேண்டும் என்பதில் என்ன நியாயம் இருக்கிறதோ?

சாரா வேலைக்குச் சேர்ந்து ஒரு வருடத்திலேயே நல்ல வசதி. வீட்டுக்குத் தேவையானது எல்லாவற்றையும் அவள் சம்பாத்தியத்தி லேயே வாங்கிப் போட்டு விட்டாள். பிள்ளைகள் இரண்டையும் டவுண் ஸ்கூலில் கொண்டு போய்ச்சேர்த்து விட்டாள். சாராவும் நுனிநாக்கு ஆங்கிலத்தில் பேசுவதால் வெளியில் இருப்பது போலவே வீட்டிலும் மதிக்கிறார்கள். முன்பு வீட்லுள்ளவர்களின் வார்த்தைக்கு அடங்கு கின்றவள் இப்போது வீட்டிலுள்ளவர்களை அதட்டி வேலை வாங்கு கிறாள்.

ஒருநாள் கன்டீனில் நண்பர்களோடு பேசிக்கொண்டிருந்த போது அவர்கள் பகிடியாக ரகுராமனை இழுத்து இவளோடு முடிச்சுப் போட்டுக் கதைத்தது பிடிக்கவில்லையென்று போர் தொடுத்து அவர்களோடு மூன்று நாள் பேசுவதை பகிஸ்கரித்தவள்தான். பின்பு பெயரளவில் எல்லாம் சரியாகி விட்டது என்றாலும் உள்ளுக்குள்ளே புகைந்து கொண்டிருந்த சந்தேகமும், நினைப்பும் இப்போது வீடுவரை வந்து விரட்டத் தொடங்கியிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சாரா... நாளைக்கு உன்னட பொம்பிளச் சகோதரங்களுக்கு கெடுதல் வந்திரக்கூடாது. எல்லாரும் வளர்த்த வளர்ப்பத்தானே குறை சொல்லுவாங்க. ஐயோ... புருசன் எப்ப சாவான், ஆட்டம் போடு றதுக்கென்டு யாரும் சொன்னா, இங்க சாவு வீடுதான் நடக்கும்." அம்மாவின் புலம்பல் ஒப்பாரி அளவுக்குப் போயிருக்குமோவென்று சாரா பயந்தாள்.

மழையாகக் கொட்டித் தீர்க்காமல் கறுத்துக் தொங்கியபடியே இருக்கும் மேகம் போல அந்தப் பிரச்சினை வீடு முழுவதும் வியாபித் திருப்பது சாராவுக்கு ஒவ்வொரு கணமும் இதயத்தில் குண்டூசி களைப் போல குத்தத் தொடங்கியிருந்தது. என்னதான் அம்மாவுக் கும், வீட்டுக்கும் சமாதானம் சொன்னாலும் பொய் சொல்லு கிறோமேயென்ற உறுத்தல் விநாடி தவறாமல் மனசை உராய்ந்து கொண்டிருந்தது.

உண்மைதான். ரகுராமனில் எனக்கு ஈடுபாடு இருப்பது உண்மை தான் என்று சொன்னால்தான் என்ன? சே... அது தன் குடும்பத்தைப் பழிக்காதா? போன வாரம் கூட கொழும்பில் செமினார் முடிந்து எல்லோரும் ஒன்றாகத்தான் புறப்பட்டு வந்தார்கள். ஐந்து ஆண் களோடு இரண்டு பெண்களுமாக அந்தப் "பிக்அப்" வாகனத்தில் நெருக்கமாகத்தான் இருந்தது. ஒருவர் ஒருவரோடு உரசிக் கொள்ளாமல் எப்படி?

சாராவுக்கு என்னவோ பக்கத்திலிருக்கிற ரகுராமனின் உரசல் வேண்டுமென்றேதான் என்றாலும், அவளும் அந்த உரசலைத் தவிர்க்க முயற்சி செய்யாமல் இருந்து விட்டதை நினைக்கிறாள்.

"ச்சே... தவிர்த்திருக்கலாம். சரி என்னதான் கெட்டுப் போச்சு."

கணவன் இறந்து நான்கு வருடத்தில் இப்படி அவள் உணர்ச்சித் தகிப்பில் எரிந்தது குறைவுதான். ரகுராமனின் பார்வை அவளைத் தொடும்போதெல்லாம் ஏற்படுகின்ற குறுகுறுப்பை அடக்க முடிய வில்லையே.

முன்பொரு நாளும் இல்லா 'லட்ஜை'யுணர்வு நேற்று நேர்ஸ் சுந்தரியை பஸ்ஸில் பயணம் செய்யும்போது பார்த்தவுடன் வந்ததே... எப்படி? சாராவின் கணவன் சாவதற்கு முன்பு மூன்று மாதத்திற்கு ஒரு தடவை தவறாமல் நேர்ஸ் சுந்தரியிடம்தான் போய் கருத்தடை ஊசி போட்டு வருவாள். இப்போது அந்த நேர்ஸ் சுந்தரி என்ன நினைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாளோ? நாள் தவறாமல் புருசனோடு இன்பம் சுகிர்க்காமல் இருக்க முடிவதில்லையென்று விளையாட்டாக முன்பு சொல்லித் தொலைத் ததை இப்போது சுந்தரி எப்படி யோசிப்பாளோ? என்று நினைத்து சாரா "நேர்ஸ்" சுந்தரியின் முகத்தையே பார்க்காமல் இருந்து விட்டாள்.

இப்போதெல்லாம் யார் என்ன கேட்டாலும் அவர்களின் முகத்தைப் பார்க்காமலே பதில் சொல்லவேண்டும் போல் இருப்பது ஏன் என்று அவளுக்குப் புரியவில்லை.

ரகுராமன் கூட்டங்களில் எப்போதும் போல சாராவின் வேலை நேர்த்தியையும், சுறுசுறுப்பையும் சொல்லிப் புளுகும் போது மற்றவர்கள் ஏளனமாகத் தன்னைத் திரும்பிப் பார்க்கிறார்களே என்று மனசுக்குள் அடித்துக் கொள்ளுகிறாள்.

ஒருநாள் அவனது பிரத்தியேக அறையில் சாராவின் கண் களையே குறுகுறுவெனப் பார்த்துக்கொண்டு ரகுராமன் சொன்னான்.

"சாரா... நான் உங்கள முன்னாடியே சந்திச்சிருக்கணும்."

"ஏன்.."

"சத்தியமா.. கலியாணம் செய்திருப்பம்.."

அவனது பேச்சிலிருந்த வசீகரத்தை அவள் ரசித்தாள். அவள் வேலைக்குச் சேர்ந்த ஆரம்ப நாட்களில் ரகுராமனை அதிகமாக அவளுடன் கதைத்து எரிச்சல் மூட்டுவதாய் நினைத்தவள், இப்போது அவன் அவளோடு அதிகம் பேசவேண்டும் என்று விரும்புகிறாள்.

ரகுராமனும்தான் ஒப்புக்கொள்ளுகிறான். அவன் ஒரு காலத்தில் தனக்கென ஒரு சீதையோடு வாழ்ந்து வந்தவன்தானாம். சுனாமியில் அந்த சீதையைப் பறிகொடுத்த பின் முதன் முதலாக சாராவைப் பார்த்துத் தான் தடுமாறுவதாக அவனே அவளிடம் சொன்னபோது, சாரா புதிதாக ஒரு கனவுலகத்துக்குள் சஞ்சரிப்பதை எப்படி மறுக்கப் போகிறாள். ஆனால் அவள் ரகுராமனின் இழுப்புக்கு இழுபடக்கூடா தென்று தீர்மானிப்பதும், ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் அவள் அந்தத் தீர்மானத்தில் இருந்து நழுவுவதுமாக சூளை நெருப்பின் தகதகப் பாகத்தான் இருக்கிறாள்.

இவ்வளவு சீக்கிரத்தில் வீடு முழுவதும் அந்த அலை வெடிக்கு மென்று சாரா எதிர்பார்க்கவில்லை. பேசாமல் வேலையும் வேண்டாம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றும் வேண்டாமென்று வீட்டிலேயே நின்று விட்டால் என்ன? நின்று விட்டால்...

மறுபடியும் பூச்சியத்திலிருந்து ஒன்று ஒன்றாய்ப் பிரச்சினைகள் முளைக்கும்.

சம்பாத்தியத்தையும், சௌகரியத்தையும் இழந்து திரும்பவும் வீட்டுக்குள் முடங்கிப் போகிற பெண்ணாக அந்த நினைப்பே அவளை வறுத்தெடுத்தது.

தன்னைப் போலவே வாழாவெட்டியான பெண்களுக்கெல்லாம் இப்பிடிப் பிரச்சினைகள் வந்திருக்காதா என்ன? எப்படித்தான் சமாளிக்கிறார்களோ?

சாரா தன் அலைபாயும் மனதை மற்றப் பெண்களுக்குமாகப் படர விடுவதில் சாதகப்பட்டுக் கொண்டாள். நேற்றுக்கூட ரகுராமன் கேட்டான்.

"சாரா... நாம நமக்காக வாழுறதப் பற்றி யோசிப்போமா?"

அவளுக்குத் திடுக்கென்றிருந்தது. உடைஞ்சி சிதறி விடுகிற மாதிரி தலைவலித்தது. அரைநாள் லீவு போட்டுவிட்டு விறுவிறுத்து வீடு வந்து சேர்ந்தவளுக்கு இங்கு அம்மாவின் தொண தொணப்பு உச்சி தெறித்தது.

வீட்டில் உள்ளவர்களது மனப்போக்கிற்கு தன்னால் வாழ முடியாது என்பதை சாராவால் எடுத்துச்சொல்ல முடியாதுதான் என்றாலும், தானும் வாழ வேண்டும் என்ற புது ஆசையை என்ன செய்வது?

இரவு முழுவதும் சாராவிற்கு நித்திரை வரவில்லை.

"ஊருலகத்தில் நடக்காததொண்டும் இங்க நடக்கயில்ல. மனசு ஒத்துப்போற ஆணும், பெண்ணும் ஒருவருக்கொருவர் வாழ்க்கைத் துணையா கடைசிக் காலத்தில இருக்கிறதுக்கு மறுமணம் செய்து கொண்டால் என்ன?

சாரா தானே கேள்வி கேட்டு அவளே பதிலையும் சொல்லிக் கொண்டாள். அவள் மனசு முழுவதும் ரகுராமனின் நினைப்பு மட்டுமே வியாபித்திருந்தது. விடியும்வரை படுத்துப் புரண்டவள் ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்மானத்தோடு நித்திரையாகிப் போனாள்.

நேரம் பிந்தி எழும்பியவளின் மனசு இப்போது தெளிவாக இருந்தது. வீட்டில் உள்ளவர்களைப் புதிதாகப் பார்ப்பது போலப் பார்த்தாள். குளித்து முடித்து சாவகாசமாக அலுவலகத்திற்கு வெளிக் கிட்டவள் கண்ணாடி முன்நின்று பார்க்கிறாள். நெற்றியோரத்தில் புதிதாகப் புரண்ட வெள்ளை முடி ஒன்று, இரண்டு, மூன்று அப்பாடா அவ்வளவுதான். கண்ணில கண்ட நரை முடிகளை அடியோடு பிடுங்கி எடுத்துக் கையில் வைத்துப் பார்த்தாள். மனம் கனத்தது. அவளுக்குப் புத்தி எதையோ சொல்ல எத்தனிக்க. அவள் வேண்டுமென்றே அதைத் தவிர்த்தாள்.

ரகுராமனிடம் புதிய வாழ்க்கை பற்றிப் பேசுவது எப்படியென ஒரு தடவை ஒத்திகை பார்த்துக்கொண்டாள். இப்போது நாணம் மேலிட்டது. கூட சிரிப்பும் வந்தது.

சாராவிற்கு ரகுராமன் தரிசனம் அவசரத் தேவையாக இருக்கப் புறப்பட்டாள். வாசலுக்கு வந்தவள் நின்றாள். அங்கு ரீச்சருடன் சாராவின் மூத்த மகள் நித்யா நின்றாள்.

"மிஸ் சாரா, நித்யா பெரியவளாயிட்டா. இன்டைக்கு காலையில தான். பிரின்சிபல் வீட்டுக்கு கூட்டிக்கின்டு விடச்சொன்னார். அதான்."

சாரா நித்யாவை நிமிர்ந்து பார்த்தாள். அவள் வெட்கத்தோடு தலைகுனிந்து கொண்டு நிற்கிறாள்.

சாராவிற்கு தன் தலையில் காலையில் தெரிந்த வெள்ளை முடிக்கு இப்போது அர்த்தம் புரிந்தது. தன் அபத்தமான நினைப்பை எண்ணி நாக்கைக் கடித்துக்கொண்டாள். அலுவலகத்திற்கு அவசரமாகக் கடிதம் எழுதினாள்..

"மதிப்பிற்குரிய சேர்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது மகள் பெரியவளாகி விட்ட படியால் தாய்மைக்குரிய பொறுப்புக்களும், கடமைகளும் அதிகம் இருப்பதனால்... அவற்றைச் செய்வதற்கு விடுமுறை கேட்டு நிற்கிறேன்.

நன்றி

இப்படிக்கு

சாரா

**– மன்னா 2008 –**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எரிகிற நெருப்பில் எண்ணெய் வார்க்கிறது போல பக்கத்து வீட்டு அன்ரி கதைத்துக் கொண்டிருந்தாள்.

"கலியாணம் செய்து அந்த மாதத்திலேயே என்ர பேத்திக்குப் பிள்ள சனிச்சிட்டுது."

பதிலுக்கு மரகதம்மாளும் தேவகியின் காதில் விழ வேண்டும் என்பதற்காகவே உரத்துச் சொன்னாள்...

"காசு பணத்த வச்சுக்கொண்டு என்னடி செய்யுறது. அத அனுபவிக்கிறதுக்கு வீட்டில பிள்ளகள் வேணுமே... ஆசைக்கு ஒரு பிள்ளயப் பெத்துத்தர ஏலாமல்

# பிள்ளை வரம்

கிடக்குதுகள்."

தேவகிக்கு எரிச்சலோடு கோபமும் முட்டிக் கொண்டு வந்தது. குசினிக்குள் இருந்து வெளியில் வந்தவள்,

"அன்ரி... உங்கட அலுவலப் பாத்துக்கொண்டு போங்கோ. மற்றாக்களப் பத்தி புரணி கதைக்கிறதுக்குத் தானே இங்க வாறியள்..." தேவகி சூடாகத்தான் கேட்டாள்.

அன்ரிக்கு மண்டையில் உறைத்தது போல "அப்ப நான் வரட்டே." அன்ரி வெளிக்கிடவும், பரணீதரன் வீட்டுக்குள் நுழையவும் சரியாக இருந்தது.. புருசனைக் கண்டதும் தேவகி பொங்கி வந்த அழுகையைக் கட்டுப்படுத்த முடியாமல் கட்டிலில் போய் விழுந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரணீதரனுக்குப் புரிந்தது. கொஞ்ச நாளாய் இந்த வீட்டில் இது வழக்கமாகி விட்டது.

"அம்மா... ஏனம்மா தேவகி அழுகிறாள்?"

"ஒண்டுமில்ல அவளுக்கு விசர். யார் வந்து நல்லது கெட்டது கதைச்சாலும் உவளுக்குப் பிடிக்குதில்ல

பரணீதரனுக்கு "சுள்"ளென்று ஏறியது.

"இனி இந்த வீட்டு வாசலுக்குத் தேவையில்லாத கதகொண்டு யாரும் வரப்படாது."

மரகதம்மாளும் லேசுப்பட்ட ஆளில்ல. சுருக்கெனத் தைத்தாள்.

"ஏன்? ஒரு பிள்ள குட்டியப் பெறுகிறதுக்கு இவளுக்கு ஏலாமக் கிடக்கு என்டு கதைக்கிறது பிழையோ?"

அவள் பரணீதரனுக்கும் சேர்த்துக் குத்துக்கதை போட அவனுக்குக் கோபத்தோடு சேர்ந்து விசம்பலும் வந்தது. அம்மா வோடு வாய் குடுத்துத் தப்ப ஏலாதென்டு அவனுக்குத் தெரியும். விடுவிடென்று தேவகியிடம் போனான். தேவகி நைந்து நைந்து அழுவது இவனது நெஞ்சைப் பிசைந்தது.

"ஞ்சே.... யாரும் என்னத்தையும் கதைச்சிட்டுப் போகட்டும். இந்தக் காதால கேட்டு அந்தக் காதால விடுறத விட்டுப் போட்டு ஏன்... தேவகி..." பரணீதரன் தேவகியை ஆதூரமாகத் தடவினான்.

"இல்லையப்பா... நீங்கள் வீட்டில இல்லாத நேரம் பார்த்து நெடுகிலும் இதே கத. வாறவ போறவையிட்டை யெல்லாம்..." தேவகி குழறிக்கொண்டு சொல்ல வந்ததைப் புரிந்து கொண்டு,

"சரியம்மா... விடு..." அவளை மார்பில் சாய்த்துச் சமாதானப் படுத்துவதற்குள் போதும் போதுமென்றாகி விட்டது.

பரணீதரன் ஒரு இஞ்சினியர். வீடு, தோட்டம் துரவு என்டும், டவுனில பெரிய கடைத் தொகுதியென்டும் சொத்துக்களுக்குச் சொந்தக்காரன். கெம்பசில படிக்கும்போது தேவகிய லவ் பண்ணிப் பிரச்சினைப்பட்டுத்தான் அவளக் கலியாணம் முடிச்சான். எட்டு வருஷம் பிள்ளையில்ல என்டவுடனே வீட்டில உள்ளதுகள் முணுமுணுக்கத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துவங்கிட்டுதுகள். எல்லா மெடிக்கல் டெஸ்டும் செய்து பார்த்தும் பலன் இல்லை. தேவகிக்கு கர்ப்பம் தங்கமாட்டேன்கிறது. எவ்வளவு பக்குவமாக இருந்தாலும் ஏழெட்டு நாட்களில் கர்ப்பம் கலைந்து விடுகின்றது. போன மாதம் தேவகி உண்டாகியிருக்கிறாள் என்ற வுடன் அவளை வீட்டில் எந்த வேலையும் செய்ய விடாமல் படுக்கை யிலேயே வைத்துப் பராமரித்ததும், தூக்கிச் சுமந்ததும் வீணாகி விட்டது. ம்ஹூம்... அதுவும் கலைந்துவிட தேவகி ஒப்பாரி வைக்காத குறை. நொந்து நூலாகிப் போனாள்.

இப்போதெல்லாம் மரகதம்மாள் தேவகியை எரிப்பது போல பார்க்கிறாள்.

"பரணீ... கொப்பர் சேர்த்த சொத்து எல்லாத்தையும் கோயிலுக்கு எழுதி வைச்சிட்டுப் போய்ச் சேரவேண்டியதுதான். உனக்கென்டு ஒரு வாரிசு இல்லாட்டில் பேந்தென்ன செய்யப் போறாய்."

"அம்மா... எங்களுக்கென்ன வயசே போயிட்டுது. பேசாமல் கிடவுங்கோ."

"எட்டு வருசத்தில பிறக்காத பிள்ள இனிப் பிறக்கப் போகுதே. ஞ்சே.. உன்ர கதய விட்டுப் போட்டு இந்தியாவுக்கென்டாலும் போயிட்டு வா. பரணீ... அங்க போனதுகள் பிள்ளையோட வந்து நல்லூரானுக்கு நேத்திக்கடன் முடிக்கிறத நீ கேள்விப்பட யில்லயோ..." மரகதம்மாளும் இதுகளப் பற்றி விசாரித்துத்தான் வைத்திருக்கிறாள்.

"டெஸ்ட் டியூப் பேபிக்கென்டாலும் ட்ரை பண்ணிப்பார்" என்டெல்லாம் ஆரம்பிச்சப் பிறகு பரணியும் அதுபற்றி யோசிக்கத் தொடங்கியிருந்தான். ஆனால் தேவகிக்கு அதில் உடன்பாடில்லை. அவளுக்கு விஞ்ஞான வழிகளை விட ஆன்மீகத்தில் இருக்கிற நம்பிக்கையைப் பார்த்தால் நமக்கே அவளுக்குப் புத்தி சொல்ல வேண்டுமென்று தோன்றும். இயலும் என்டதுக்கு தன்னையும், இயலாதென்டவுடனே கடவுளையும் இழுத்து விடுறது பரணிக்கு நியாயமாகத் தெரியவில்லை. அதனால் அவனும் தேவகியை நச்சரிக்கத் தொடங்கியிருந்தான். ஆனால் தேவகி அசைந்து கொடுப்பதாயில்லை.

"ஏன்.. என்னைப் பிள்ளை பெற ஏலாதவள் என்டு ஊருக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறையடிக்கப் போறியளே. டெஸ்ட் டியூப் பேபி என்டாப் போல ஊருலகம் என்ன சொல்லுமென்டு தெரியாதோ? ஏனப்பா நமக்கென்ன வயசே போயிட்டுது. பேசாமல் விடுங்கோ" என்று தேவகி ஒரேயடியாக மறுத்துவிட மரகதம்மாள் புதிதாக இன்னுமொரு வியூகத்துக்குள் இறங்கினாள்.

பரணியும், தேவகியும் மனம் கோணிப் போயிருந்த ஒரு சமயத்தில் தன் பிள்ளையைத் தனியாக இருத்தி மெதுவாக இறக்கினாள்.

"ஞ்சே... பரணி.. குமரகுரு மாமாவின்ர மகள் ஆனந்தியின்ர புருசன் வெளிநாட்டில கார் எக்சிடென்டில செத்துப்போய் ஒண்டரை வருசமாயிட்டுது. பாவம் வாழவேண்டிய வயசில அந்தப் பிள்ளயப் பார்க்க வயிறு எரியுது. கொப்பருக்கும் முதல் ஆனந்தியை உனக்கு எடுக்கிறதுக்குத்தான் விருப்பமாயிருந்தார். நீதான் லவ்வென்டு சொல்லி.. இந்தப் பிடாரியப் பிடிச்சிக்கொண்டு வந்து எல்லாத்தையும் கெடுத்துப் போட்டு நிக்கிறாய். ஆனந்தி நம்ம பிள்ளதானே பரணி. இவள் வேணுமென்டால் டைவர்சுக்கு கையெழுத்து வைச்சுத் தரட்டும். இல்லையென்டால் தாய்வீட்டில போய் பேசாமல் இருக்கட்டும்."

பரணி தாய் சொன்னதுக்கு மறுப்பேதும் சொல்லாமல் கேட்டுக் கொண்டிருந்தான் என்பதே மரகதம்மாளுக்கு திருப்தியாய் இருந்தது. பரணீதரன் "தாம்தூம்" என்று குதித்தால் அதற்கும் வேறு உபாயத்தை வைத்துக்கொண்டுதான் பேசினாள். "நீ உடன்படா விட்டால் என் பேரில இருக்கிற சொத்து எல்லாத்தையும் கோயிலுக்கு எழுதிப் போடுவன்" என்று வைத்திருந்த ஆயுதத்திற்கு வேலையில்லாமல் போன திருப்தியோடு மரகதம்மாள் அடுத்தடுத்த காரியங்களுக்கும் அடிபோடத் துவங்கி விட்டாள்.

பரணி வீட்டில் இல்லாத போது பேச்சோடு பேச்சாக தேவகி காதில் விழுகிற விதமாக மரகதம்மாள் தனது திட்டத்திற்கு பரணி சம்மதித்து விட்டதாக சொல்லிக் கொண்டது தேவகி நெஞ்சில் நெருப்பையள்ளிக் கொட்டியது போல் இருந்தது.

மரகதம்மாளின் கதை பேச்சோடு மட்டுமில்லாமல் சாமிநாத ஐயரிடம் ஆனந்தியின் சாதகத்தோடு பரணீதரன் சாதகத்தையும் கொண்டுபோய்க் கொடுத்த சேதி தேவகி தலையில் இடியாய் விழுந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவகி பரணியின் சட்டையைப் பிடித்து ஆட்டினாள்.

"என்னங்க... உங்களின்ர அம்மா செய்யிறதெல்லாம் பாத்துக் கொண்டோ இருக்கிறியள்?" பரணி பதில் பேசவில்லை.

தேவகி குமுறி விழுவதை அவன் பார்த்துக் கொண்டுதான் இருந்தான்.

"தேவகி... சொத்தெல்லாம் கையவிட்டுப் போகும்போது நான் என்ன செய்யிறது?" அவன் தடாலடியாகப் பேசியது தேவகிக்கு செருப்பால அடித்தது போலிருந்தது.

மரகதம்மாளை உசிப்பி விடுவதற்கும் ஆட்கள் இருந்தார்கள். ஆனந்தியின் சாதகம் பரணியின் சாதகத்தோடு ஒத்துப்போவதாக சாமிநாதய்யர் சொல்லிவிட்டிருந்தார். புதன் கிழமை நல்ல நாள் பார்த்துச் சொல்வதற்காக வீட்டிற்கு வரப்போகிறாராம் என்று மரகதம்மாள் அதிரடியாக அறிவிக்க, தேவகிக்கு வயிற்றில் புளியைக் கரைப்பது போலிருந்தது. அவளுக்கு அழுவதைத் தவிர வேறு வழி தெரியவில்லை. பரணீதரனும் ஒன்றும் அலட்டிக் கொள்ளாமல் இருந்தது தேவகிக்கு சம்மட்டி அடியாக வலித்தது.

புதன் கிழமை சாமிநாதய்யர் வீட்டிற்கு வந்தார். இந்த வீட்டில நல்லது கெட்டது எது நடந்தாலும் அவர்தான் குறிப்புப் பார்த்துச் சொல்ல வேண்டும்.

அவருடைய கணிப்பில்தான் இங்குள்ள பெரியவர்களுக்கு நம்பிக்கை4யென்ற படியால் அவர் சொல்வது எதுவாக இருந்தாலும் ஆட்டம் நடக்கும். தேவகி தன் அறையை விட்டு வெளியே வரவே யில்லை. முடங்கிப் போய் அழுகையும், கண்ணீருமாக இருந்தாள்.

கூடத்தில் இருந்த சாமிநாதய்யர் பரணியின் ஜாதகத்தைக் கையில் எடுத்துக்கொண்டார். அவருடைய முகம் அஸ்ட கோணத்தில் சுருங்கியிருந்தது. தன் தலையைப் பேனாவால் இரண்டு தடவை குத்திக் கொண்டார். மரகதம்மாளுக்கு இருப்புக் கொள்ளவில்லை.

"ஐயா... பரணியிட சாதகம் எப்பிடி... யி... ருக்கு..."

சாமிநாதய்யர் ஒன்றும் பேசவில்லை. சில நிமிடங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மௌனத்தில் கரைய விபரீதம் ஏதோ என்று மரகதம்மாள் கவலைப்பட்டாள். பரணீதரன் தூரத்தில் தூணில் சாய்ந்தபடி பார்த்துக் கொண்டிருந்தான். சாமிநாதய்யர்தான் மௌனத்தைக் கலைத்தார்.

"மரகதம்... பரணியின் சாதகத்தில் கோளாறு இருக்கிறதாலதான் யோசிக்கிறன்."

"என்னது...?" மரகதம்மாள் குரல் கம்மக் கேட்டாள்.

"இப்ப அவசரமாக் கலியாணம் செய்யணுமோ...?" மரகதம் மாளுக்கு முகம் கறுத்தது..

"ஏன்... ஐயா... குடும்பத்துக்கு வாரிசில்ல... தெரியும்தானே... அதான்... கலியாணம் செய்யத்தான் வேணும்."

சாமிநாதய்யர் செருமிக்கொண்டு கதைத்தார்.

"மரகதம் வடிவாக் கேளு பிள்ள. பிழையொண்டு நடந்திட்டுது. இத முன்னுக்கு கவனிக்காமல் விட்டுட்டன். இந்த வீட்டுக்கு பரணி மூலம் வாற ஒரு வாரிசும் நிலைக்காது. அப்பிடியும் நிலைச்சிட்டால் பரணி உசிர் தங்காது." அவர் சொல்லி விட்டு மரகதம்மாளை நிமிர்ந்து பார்த்தார். மரகதம்மாளின் சப்தநாடி அடங்கிப் போயிருந்தது.

"நான் சொல்லுறதில நம்பிக்கையில்லையென்டால் நீ வேற யாரிட்டையும் காட்டிக் கேள். நான் சொன்னதிற்கு மாறா சொல்லிட் டாங்களென்டால் நான் இந்தத் தொழில விடுறன்." அவர் தோளில் கிடந்த துண்டை உதறிவிட்டு விறுவிறுவென்று வாசலை நோக்கி நடந்தார். சாமிநாதய்யர் போனதற்குப் பிறகு மரகதம்மாள் ஒன்றும் பேசவில்லை.

சாமிநாதய்யரின் கைகளைப் பிடித்துக் கொண்டு கண்ணீர் மல்க பரணீ சொன்னான்.

"ஐயா... ஐஞ்சு வருசம் காதலிச்சுக் கைப்பிடிச்ச தேவகிய பிள்ளையில்ல என்டதுக்காக கைவிடக்கூடாதென்டுதான் நான் உங்களப் பொய் சொல்லச் சொன்னனான்." அவன் சொல்லிக் கொண்டிருக்க தேவகி தன் கணவனை ஆச்சரியத்தோடு பார்த்தாள்.

"தம்பி சாத்திரம் எண்டது நல்ல விசயத்தக் கெடுக்கிறதுக் காகப் பாக்கிறதில்ல. நல்லது செய்யிறதுக்காகத்தான் பாக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் சொன்ன ஒரு பொய் உங்க ரெண்டு பேரையும் வாழ வைக்குமெண்டால் எனக்கு சந்தோசம்தான்."

பரணீ அவர் கைகளில் பணத்தை கத்தையாகத் திணித்து விட்டு காரில் ஏறினான். தேவகி சொன்னாள், "அப்பா... சுனாமியால அநாதையாப் போன பிள்ளையொன்டை எடுத்து வளர்ப்போமா?"

"தேவகி ஒண்டில்ல... தேவகி... நமக்கிருக்கிற வசதிக்கு ஒரு அநாதைச் சிறுவர் இல்லமே நடத்தலாம்..." அவள் சிரித்தாள்.

"ஏன் சிரிக்கிறாய்... தேவகி?"

"நாளைக்கு நான் கர்ப்பமாகி விட்டால், உங்கட அம்மா அதை அழிக்கச் சொல்லிப் போடுவாங்கள். அப்பவாவது அம்மாவிற்கு உண்மையைச் சொல்லத்தானே வேணும்."

"அதையும் சாமிநாதய்யர் சொன்னால் அம்மா நம்பிடுவா."

இப்போது இருவரும் சேர்ந்து சிரித்தார்கள்.

**– வெளிச்சம்) – 2005 பங்குனி –**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது எப்போதுமல்ல. பங்குனி மாசத்தில்தான் இந்த விசேசம். அலுவாக்கரையில மத்துப் போட்டுக் கடைவது போல நொடிக்கு நூறு தடவைகள் சுழன்று கொண்டு காற்று உற்பவிக்கின்ற நுரை... கடற்கரை நீளத்திற்கு வெண்மையாய். அதை இரண்டு கைகளினாலும் அள்ளி வீசினால் மற்றவர் உடம்பில் ஒட்டிக் கொண்டு... பள்ளிக்கூடம் விடுமுறையென்றால் போதும். எங்கிருந்துதான் முளைக்கிறார்களோ... அம்பாரம் சின்னதுகள். இவர்களுக்கு இதுதான் விளையாட்டு. வெற்றுடம்பில் நுரையை அள்ளிப் பூசிக்கொண்டு உரு மறைத்து நிற்பது ஒரு வேடிக்கை போல.. 'ஓ'வென்று கோரசாக சத்தம் போட்டுக்கொண்டு கரையிலிருந்து

# கடற்குளிப்பு

கடலுக்குத் தாவி... பாவப்பிள்ளை போல காலுக்கடியில் மடிந்து விழுகிற அலையைக் கையினால் கோதியபடி இடுப்பளவு தண்ணீருக்குப் போகுமட்டும் உற்சாகம் தான்.

சிறுவர்களுக்கு இடுப்பளவுக்கு மேல் தாண்டிப் போகப் பயம் வந்து உட்கார்ந்து கொள்ளும். ஆனால் வாலிபர்கள் அப்படியல்ல. இந்த ஊரில் அதிகமாக எல்லா ஆண்களுக்கும் நீச்சல் தெரிந்திருக்கிறது. அவர்கள் துணிச்சலாய் 'விலங்க' மட்டும் போவதும், பீதியைக் கிளப்பி வீட்டு மாயமாய் மறைவதும், கடலுக்கடியில் சுழி யோடி எதிர்பாராத இடத்தில், எதிர்பாராத நேரத்தில் திடீரென்று மேலெழும்பி வீர பிரதாபம் காட்டுவதும்...

ஆனந்தி யன்னலை நன்றாகத் திறந்து வைத்துக் கொண்டு கடற்கரையையே பார்த்தபடி நிற்கிறாள். அவள் நேரம் போவது தெரியாமல் இப்படி நாள் முழுக்கப் பார்த்துக் கொண்டிருப்பதென்றாலும் சரி, அவள் புருசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகுந்தனுக்கு இந்த கடல் விளையாட்டென்றால் உயிர்.

இதுபோல ஒரு பங்குனி மாதத்தில்தான் அவர்கள் கலியாணம் நடந்தது. ஆனந்திக்கு எதெல்லாம் பிடிக்கிறதோ, அதையெல்லாம் முகுந்தன் தாராளமாகச் செய்திருக்கிறான். இந்த வீடும் அப்படித் தான். ஆனந்திக்குப் பிடிக்கிறதேயென்றுதான் கடற்கரைக்குப் பக்கத்தில்... உயரமாக... இப்போது அவள் நின்று பார்க்கும் யன்னல். இதுவெல்லாம் ஆனந்திக்குப் பிடிக்கிறதேயென்றுதான் பார்த்துப் பார்த்துச் செய்தான். முகுந்தனுக்கு மிகவும் பிடித்தமான கடல் விளையாட்டு. இப்போது ஆனந்தி அதை இரசிக்கத் தொடங்கி யிருந்தாள். அவன் கடலில் இறங்கி மூழ்கி, போதும் போதும் என்ற மாதிரி நீந்திக் கரையேறும் வரையிலும் ஆனந்தி யன்னல் வழியாக அவனையே பார்த்துக் கொண்டிருப்பாள்.

முகுந்தன் ஆர்வமாகக் கடல் விளையாட்டுப் பற்றி அவளிடம் சொல்லும் போதெல்லாம் கண்களை அகலத் திறந்து கேட்டுக் கொண்டே இருப்பாள் சூ... முகுந்தன் எவ்வளவு கெட்டிக்காரன். ஆனால் காசு காசென்று எப்போதும். சேர்ந்தாப் போல இரண்டு மாசம்... ஆனந்தியும் முகுந்தனும் கலியாண முடித்த புதுசு. அந்த இரண்டாவது மாசத்திலேயே 'சோபியா' அவளின் வயிற்றில் சனித்த அதிர்ஸ்டம் முகுந்தனுக்கு சவூதியில் அந்த வேலை கிடைத்தது. உழைக்கவென்று போனவன் சோபியாவின் இரண்டாவது பிறந்தநாள் கொண்டாட்டத்திற்கென்றுதான் வந்தான்.

அப்பப்பா... எவ்வளவு சந்தோசமான நாட்கள். அப்போதும் கடல் இப்படித்தான் வெண் நுரையோடு கடல் பூத்தது போல. முகுந்தனுக்கு ஆனந்தியை விட கடல் விளையாட்டுத்தான் அதிகம் பிடித்திருந்ததோ என்னவோ... சாப்பிட்டு தூக்கம் போடுகிற நேரம் தவிர்த்து மற்ற நேரமெல்லாம் கடலில் இறங்கி விடுகிறான்.

"என்னப்பா... எந்த நேரமும் கடலில..."

"சும்மாயிரு ஆனந்தி. இந்தக் கடல அங்க பாக்கப் போறேனே... நான் இருக்கிற இடத்தில இருந்து இரு நூறு கிலோமீற்றர் ஓடினால் தான் கடல்.. அதுவும் இது மாதிரியில்ல... சரியா மூரடு.. றவ்... சீ..."

ஆனந்தி வேறொன்றும் கதைக்கவில்லை. அவன் இஸ்டத்துக்கே விட்டு விட்டாள். அப்போதும் இரண்டு மாசம்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகப் போறேன் என்று கூவினவன் போயே விட்டான். அவன் வந்திருந்தபோது சனித்தவள்தான் 'சுகி'. அவளுக்கும் இப்போது இரண்டு வயது ஆகிவிட்டது.

மாதம் மாதம் காசும், கடிதமும் வரும். வீட்டில் ஒன்றுக்கும் குறைவில்லை. பிள்ளைகளுக்கு காசை அனுபவித்து அலுத்துப் போய் விட்டது. மற்றப் பிள்ளைகளைப் போல சோபியாவுக்கும், சுஜிக்கும் அம்மா அப்பாவுடன் சேர்ந்திருக்க வேண்டுமென்ற ஆசைதான் தலைவரை முட்டிக்கொண்டு இருக்கிறது.

இந்த வருசமும் இதோ வரப்போகிறேன் என்று இருக்கிறவன் நாளைக்கு வந்து விடுவான். பங்குனி மாதக்கடல் என்றால் முகுந்தனுக்குப் போதுமே. இனிக் கடற்குளியலும் கும்மாளமும்தான். இந்தமுறை பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு கடலில் இறங்கிக் குளிக்க வேண்டும். ஆனந்திக்கு அவனோடு பேசுவதற்கு அதிகம் கதையிருக்கிறது. வரட்டும்.

"அப்பா... உழைச்சது போதும். வீட்டில ஒரு குறையுமில்ல. பேசாமல் இருக்கிறத வைச்சு இங்கேயே ஒரு தொழில் செய்வோம்."

"நீ என்ன சொல்றாய் ஆனந்தி. நான் வேலை செய்யிறது அமெரிக்கன் கொம்பனி. அவனுக்கு என்னை நல்லாப் பிடிச்சிட்டுது. இந்த வருசத்தோட நான் அமெரிக்காவுக்கு போற வாய்ப்பிருக்கு. அநியாயமாகக் கெடுக்கச் சொல்றியா?"

ஆனந்திக்கு அழுகை முட்டுமாப் போல் இருந்தது. இப்பிடி ஒரு முரட்டாட்டமான மனுசனை வைத்துக்கொண்டு என்ன செய்யிறது?

"அப்பா நீங்கள் இரண்டு வருசத்துக்கு ஒரு தடவை வாறதும் போறதும் என்டால் வேறென்னத்துக்கு இந்த வாழ்க்கை."

இன்னும் அவனுக்குப் புரியவில்லை. கேட்டான்.

"ஏன் உனக்கென்ன குறைச்சல். வீட்டில எல்லாம்தானே இருக்கு."

அவளுக்கு செருப்படி வாங்கியது போல் இருந்தது.

"ச்சீ... இவருக்கு காசைத் தவிர வேறொன்றும் தெரியாதா? கலியாணம் முடிச்சு ஐந்து வருடங்கள் ஆகியிருந்த போதிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டிக் கழித்துப் பார்த்தால் ஐந்து மாதங்கள்தான் புருசனோடு வாழ்ந்திருக்கிறாள்.

"இது புரியமாட்டேன் என்கிறதே இந்த மரமண்டைக்கு." அப்படி யென்றால் இவன்... அந்தப் பிரத்தியேக தேவைக்கு... வேற எங்காகிலும்... வெளிநாட்டில் ஆம்பிளைகள் ஆக மோசம்... ஆனந்தி அலை பாய்ந்தாள்.

"அப்பிடியென்றால் நான் மட்டும் இப்பிடிக் கட்டுப்பெட்டியாக... இங்கே பிள்ளைகளோடு... ஒரு அப்பாவியாய்... எங்கேயோ நியாயம் தடுமாறுகிறது.

இங்கே எந்த ஆணுடனும் தெருவில் நின்று குசலம் விசாரிக்கக் கூடாது. வீட்டிற்கு தேடி வருகிற உறவினர்களிடமும் கூட தள்ளி நின்றுதான் கதைக்க வேண்டும்.

ஒரு தடவை பிள்ளைகள் படிக்கும் பள்ளிக்கூடத்திற்கு பெற்றோர் சந்திப்பு என்று ஆனந்தி போயிருந்தபோது அநியாயத்திற்கு அவளை மொய்த்த கண்களைப் பற்றி அவள் நன்றாக அறிவாள். "நல்ல செல்வச் செழிப்புத்தான். ஆனால் பாவம்" என்ற வகையிலும்தான் அவளைப் பார்த்திருப்பார்கள். இப்படிப் போகிற வருகிற இடத்தி லெல்லாம் ஆனந்திக்குச் சோதனைதான். அவள் இடறல் படுகிற போதெல்லாம் இந்தக் கடற்கரையை யன்னலால் பார்த்தாள் சரி. முகுந்தனே தன்முன் நின்று கடற்குளிப்பதைப் போல...

ஆனந்தி விதம் விதமாக உடுத்தி வீடியோவில் பதிவு செய்து முகுந்தனுக்கு அனுப்பி விடுவாள்.

"ஆனந்தி... உடுப்பு வடிவாயிருக்குது. அதேன் முகத்தை உம்மென்று வைச்சுக் கொண்டு. ஒரு இடத்திலயும் நீ சிரிக்கிறாய் இல்ல."

வீடியோவைப் பார்த்துவிட்டு முகுந்தன் டெலிபோனில் இப்படிக் கேட்கும் போதெல்லம் கொதிப்பாள்.

"ஆனந்தி நம்ம கடலில இப்பவும் கடற்குளிப்புக்கு ஆட்கள் வருகினமே. நேவிப் பிரச்சினையென்டு கேள்விப்பட்டன்." அவன் மனைவி பிள்ளைகளைவிட கடற்குளிப்புப் பற்றித்தான் விசாரிக்கிறான்.

"ந்தா... உன்ர புருசன் வெளியில நிண்டு உழைச்சது காணும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரை வீட்டில் வந்து இருக்கச் சொல்லு."

"ஓம்... இந்த முறை அவரை வீட்டில நிப்பாட்டிப் போடுவன்." ஆனந்தியின் நலனில் அக்கறையோடு பேசுகின்ற பெரிசுகளுக்கு உறுதியாகச் சொன்னாள் ஆனந்தி.

இந்த ஊரில் பெண்கள் கடற் குளிக்கவென ஒருபோதும் இறங்கியதில்லையென்ற போதிலும் இம்முறை ஆனந்தியும், பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டு புருசனோடு கடற்குளிப்புக்குப் போனாள். ஆனந்திக்கு அலுவாக்கரையைத் தாண்டிச் செல்லப் பயம் இடம் கொடுக்கவில்லை என்றாலும் அந்த அலுவாக்கரை நனைப்பும், நுரைக்குளிப்பும் இதமாகவும், சந்தோசமாகவும் இருந்தது.

பிள்ளைகளை இரண்டு தோளிலும் தூக்கி வைத்துக்கொண்டு முகுந்தன் இடுப்பளவு தண்ணீர் வரை கொண்டு சென்று அவர்களுக்கு விளையாட்டுக் காட்டினான். இரண்டு கைகளிலும் பிள்ளைகளை ஏந்தி... நீரிலே நீச்சலடிக்கக் கற்றுக் கொடுத்தான். பிள்ளைகளுக்குக் குதூகலம் தாங்க முடியவில்லை. அப்பாவைக் கட்டிப்பிடித்து கொஞ்சுவதும், குலாவுவதுமாக இருக்க ஆனந்தி சொன்னாள்.

"அப்பா... பிள்ளைகளுக்கு உங்களோட இருக்கிறதில எவ்வளவு சந்தோசம். நீங்கள் இங்கேயே இருந்து விடுங்களப்பா..."

அவள் சொல்ல அவனுக்கு முகம் கறுத்தது.

அன்றைக்குக் கடற்குளியல் சுவாரசியமில்லாமல் பாதியிலேயே நின்று விட்டது.

"விளங்காமக் கதைக்கிறாய் ஆனந்தி. இவ்வளவு காலமும் கஸ்டப்பட்டதெல்லாம் வீணாப் போயிரும். ஞ்சே... அமெரிக்காவிற்கு போறதென்டால் சும்மாவே ஆனந்தி. இந்த சான்ஸ் எல்லாருக்கும் கிடைக்கிறதில்ல."

அவன் சொல்லச் சொல்ல ஆனந்தி 'ம்' கொட்டினாளே தவிர, அவள் மனசு கனத்துக் கொண்டே போனது.

"ஒருவேளை முகுந்தனை வளைச்சுப் போட எனக்குத் தெரியவில்லையோ? முகுந்தன் எதிர்பார்க்கிற பக்குவம் எனக்கு இல்லையோ? என்றெல்லாம் யோசித்தால் எப்படியாவது அவனைத் தன் வழிக்கு இழுத்து விடுவது என்று நினைத்துக் கொண்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுக்கப் புதுக்க முகுந்தனுக்குப் பிடிக்கிற மாதிரி உடுத்தினாள். மினக்கெட்டு சமைத்துப் பரிமாறினாள். அவன் விரும்புகிற மாதிரி நடந்து கொண்டாள். சிரித்தாள். சிணுங்கினாள். கோபம் போல நடித்து பிறகு சேர்ந்து கொண்டாள். முகுந்தன் படுக்கையறையில் வைத்துச் சொன்னான்.

"ஆனந்தி... நான் அமெரிக்காவுக்குப் போனப் பிறகு பார். ரெண்டு வருசத்தில உன்னக் கோடிஸ்வரியாக்கிக் காட்டுறன்."

"இல்லப்பா.. அமெரிக்கா வேணாம்.. இங்கேயே இருப்போம்.."

"ஏன்.. ஆனந்தி.."

"இங்க இருக்கிற உறவுகள் அப்பா, அம்மா.. கடற்குளிப்பு.. இது எல்லாத்தையும் விட்டுப்போட்டு வேணாமப்பா..

முகுந்தன்.. பெரிதாக சத்தமிட்டுச்சிரித்தான்.. அந்த சிரிப்புக்கு அர்த்தம் ஆனந்திக்குப் புரியவில்லை..

இரண்டு மாதங்கள். முகுந்தனும் ஆனந்தியை விட்டுப் பிரிந் திருக்கவில்லை. அவன் அவளை நாடுவதை நினைக்க அவளுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. இந்த இரண்டு மாதமும் முகுந்தன் வெளி நாட்டைப் பற்றிக் கதைக்காமல் விட்டது ஆனந்திக்கு ஆறுதலாய் இருந்தது.

புருசனை தன் சேலைத் தலைப்பில் முடிந்து வைத்திருப்பதாக எண்ணி ஆனந்தி சிரித்தாள். அந்த சந்தோசத்திலேயே அவள் வயிறு மூன்றாவது தடவையாக பூத்தது.

அந்தப் பூரிப்பு அடங்குவதற்குள் சவூதியில் இருந்து கனமான ஒரு கடிதம் வந்தது. முகுந்தன் அதைப் படித்ததும் துள்ளினான்.

"அப்பாடா. மூன்று வருசம் அமெரிக்காவில் வேலையாம்."

ஆனந்தி முகம் சுருங்கினாள்.

"ஏனப்பா? ரெண்டு பிள்ளைகளிட பேறுகாலத்திலும் நீங்கள் என்னோட இருக்கயில்ல. இந்தப் பிள்ளைக்கென்டாலும் பக்கத்தில இருங்கோவன்."

"ஞ்சே... பொம்பிளை பிள்ளை பெறுகிறது பெரிய விசயமே?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனந்தி அமெரிக்காவில மூன்டு வருசம் உழைச்சால்..."

ஆனந்திக்கு அழுகையோடு ஆத்திரமும் வந்தது.

"நான் உங்கள புருசனா இருக்கச் சொல்லுறன் விளங்குதே?" கத்தினாள்.

"ஆனந்தி உனக்குத்தான் ஒண்டும் விளங்குதில்ல." அவன் ஆனந்தியின் வாயை மட்டும் சாத்தவில்லை அவள் மனசையும்தான் சாத்தினாள்.

முகுந்தன் பெரிய ஆரவாரத்தோடே வெளிக்கிட்ட போது ஆனந்தி ஒன்றுமே பேசவில்லை. அவன் கிட்ட வந்து அவளைக் கட்டிப்பிடித்த போதும், அவளின் கொஞ்சம் மேடு வீழுந்த வயிற்றில் கை வைத்து தடவிய போதும் அவள் ஓர் ஜடம் போலவே நின்றாள்.

முகுந்தன் பெட்டியைத் தூக்கிக்கொண்டு படலையைக் கடந்து சென்றபோதும் அவள் மனம் பாரம் இழக்காமல் தவித்தது.

அவள் கண்களை விட்டு அவன் மறையும் வரை பார்த்துக் கொண்டிருந்தவள் எழுந்து கடற்கரைப் பக்க யன்னல் வழியாக பார்த்தாள். அங்கே கடற்குளிப்பு நடந்து கொண்டிருந்தது. கூடவே முகுந்தனும் அங்கு நிற்பது போல மனசு நினைக்க... வேகமாக அந்த யன்னலை மூடினாள்.

"ச்சீ... இனி..." நினைப்பு கசந்தது.

– ஓசை 2011 தை –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஸ் ஓடிக்கொண்டிருந்தது.

முன்னால் தோன்றி பின்னால் மறையும் காட்சிகளைப் பார்த்தபடியே சூசை யன்னலோரம் இருந்தான். அவன் கண்களில் நீர் கோர்த்திருந்தது. சூசையின் தோளில் சாய்ந்தபடி தூங்கி விழுந்து கொண்டிருக்கும் அம்மாவைப் பார்க்கிறான். மெலிந்து, கன்னக் கதுப்புக்கள் வற்றிப்போய் எலும்புதான் துருத்திக் கொண்டு நிற்கிறது. முதுமைக் குழிக்குள் கண்கள் ஒளியிழந்து போய்விட்டதேயென்றுதான் இப்போது அம்மாவுக்குக் கவலை. திரும்பவும் சூசை யன்னலுக்கு வெளியில் பார்க்கிறான். பிடிபடாமல் ஓடிக்கொண்டிருக்கும் காட்சியைப் போலவே சம்பவங்கள் கோர்வை

# காத்திருப்பு

யாய் மனசில் அணிவகுத்துக் கொண்டு...

கடலில் மீன் பிடிக்கப் போக இயலாது என்று கண்டிப்பாக நேவிக்காரர் சொன்னபோது, வீட்டில் கஸ்ரம். விடத்தல்தீவுக்கு ரகசியமா சாமான் ஏத்துற ஆட்களோடு சேர்ந்து கொண்டான் சூசை. கரணம் தப்பினால் மரணம் என்ற கணக்குத்தான். விடிய விடிய முழிச்சிருந்து வாய்ப்பான நேரத்தில கடகடவென்டு போட்டில சாமான் ஏத்திவிட்டு, மின்னல் மாதிரி நின்ற இடம் தெரியாமல் ஓட வேணும். அப்படியிருந்தும் ஒருநாள் நேவிக்காரர் வெடி வைச்சுப் பிடிச்ச ஆட்களில் ஒருவனாய் சூசையும் இருந்தான். ஒருநாள் முழுக்க வங்காலைப்பாட்டு நேவிக் கேம்பில வைச்சு அடிச்சு மிதிச்சு ஆக்கினை பண்ணினபோது குய்யோ முறையோ வென்டு குழறி அழுதது அம்மாதான்.

"எம்புள்ளய விடாமல் நான் இந்த இடத்த விட்டுப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக மாட்டன்" என்று அம்மா 'கேம்ப்' வாசலிலேயே அன்னந் தண்ணி யில்லாம பழியாக் கிடந்தாள்.

போன மாசம் 'சிக்கன் குன்யா' காய்ச்சல் புழுங்கின நேரம் சூசை பேசாலை ஆஸ்பத்திரியில கையும் காலும் இழுத்து முடங்கிப் போய்க்கிடந்த போது, பக்கத்தில இருந்து சூதானம் பார்த்தது யாரு? அம்மாதான். தொழில் இல்லாத நேரம் சோத்துப்பாட்டுக்கே வழியில்லாமல் இருந்தபோது சீட்டுக்காரன் காசு கேட்டு நாய்க்குக் கேட்காத கேள்வி கேட்டு வீட்டு வாசலுக்கு வந்தான்.

"ஐயோ... எம்புள்ளயிட மானம் போகுதே..."யென்டு கையில கிடந்த மாத்து மோதிரத்தை அடகு வைச்சு பிரச்சினையை முடிச்சது அம்மாதான்.

முடிஞ்ச வரைக்கும் சூசையிட குடும்பக் கஸ்டத்தில கை கொடுத்து உதவின அம்மா மேல அண்ணனுக்கும் அண்ணிக்கும் கோபம்.

"சாவு மட்டும் அவன் வீட்டிலேயே கிடந்து சாவு" என்று சொல்லி விட்டுப் போன அண்ணனும், அண்ணியும் அம்மாவைப் பார்க்கக்கூட வருவதில்லை.

அம்மாவிடம் இப்போது யாருக்கும் கொடுப்பதற்கு ஒன்று மில்லை. அம்மாவுக்குக் காலுக்குப் பூசுவதற்கும், கையில பூசு வதற்கும் விலை கொடுத்துத்தான் தைலம் வாங்க வேண்டியிருக்கு என்றவுடன் காதில கிடந்த தோட்டையும் கழற்றி விற்று விட்டு மூளியாகக் கிடக்கிறா அம்மா.

அம்மாவிடம் வெறுகிறதுக்கு ஒன்றுமில்லை என்றதினாலோ என்னவோ சூசையின் மனுசியின் குணமும் மாறிப் போய்க் கிடக்கு. அம்மா வாயைத் திறந்து எதைக் கதைத்தாலும் அவளுக்கு கோபம் வருகிறது. அம்மாவும் அப்படித்தான் ஒரே தொண தொணப்பு. வயசு போயிட்டுதென்டு நினைப்பில்லை. யாரிலும் நம்பிக்கையில்லாத மாதிரி தனக்கென்று எல்லாம் என்ற கணக்கில் நடந்து கொள்வது சூசையின் மனுசிக்குப் பிடிக்குதில்லை. அம்மாவுக்கு நல்ல ருசியாக ஆக்கி மூட்டித் தின்ற வாய்... கேட்குதில்ல. தன் உடம்பை பாதிக்கும் என்ற அக்கறையே இல்லை.. எதையெல்லாம் சாப்பிடக் கூடாது என்று சொல்கிறார்களோ, அதையெல்லாம் வாங்கித் தின்னனுமென்டு ஆசை. இதைப் பற்றி ஏதாவது யாரும் சொன்னால், கத்த ஆரம்பித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுகிறாள். அதிகாரம் வேறு. சூசையிட மனுசிக்கு மேலாகக் கதைக்கிறா. எப்போது பார்த்தாலும் ரெண்டு பேருக்கும் ஒரே சண்டை.

சூசைக்கு இவர்கள் இருவரையும் பார்க்கும்போது வெறுப்பு வெறுப்பாய் வருகின்றது. கடலில இறங்கி மீன் பிடிச்சு ஒரு வருசமாய் போயிட்டுது. நேவிக்காரங்கள் கெடுபிடி எக்கச்சக்கம். கரைவலைத் தொழிலுக்குப் போறதுக்கே போதும் போதுமென்றாகி விட்டது. அவன் விரும்பினால் விடுகிறான். இல்லையென்றால் அடித்துத் துரத்தி விடுகிறான். கையில கிடந்தது, கழுத்தில கிடந்தது எல்லாத்தையும் வித்து செலவழிச்சு முடிஞ்சிட்டுது. புள்ள குட்டிகள் படிக்கிறதுக்கு ஆசைப்படுதுகள். ரியூசன் காசு, மாசக் காசென்டு அதுகள் வந்து நிற்கிற போதெல்லாம் சூசை கிடந்து படுகிற பாடு யாருக்குத் தெரியும்?

கூப்பன் கடை அரிசியக் காய்ச்சி அங்கின இங்கின கிடக்கிற இலை குழையப் பிய்ச்சு ஆக்கி மூட்டித் தின்னிறதும், பச்சை மிளகாய் வெங்காயத்த வெட்டிப் போட்டு உப்புத்தண்ணி தெளிச்சு கரைச்சுக் குடிக்கிறதுமா காலம் போய்க் கொண்டிருக்கு.

வீட்டில பசியும், பட்டினியும் கூடக் கூட மனுசிக்கு அம்மாவைக் கண்ணில காட்ட ஏலுதில்ல. காலையில எழும்பினா ராவு படுக்கைக்குப் போகும் வரைக்கும் சண்டை. சூசை சொல்லிப் பார்த்தான். ரெண்டு பேரும் கேட்குமாப் போலில்ல. பசியையும், பட்டினியையும் காரணம் காட்டி அண்ணன் வீட்டில போய் நின்றான் சூசை. "அண்ணன்... தொழில் துறை ஒண்டுமில்ல. சாப்பாட்டுக்கே கஸ்டமாயிருக்கு. அம்மாவைக் கொஞ்ச நாளைக்கு வைச்சுப் பாரு."

அண்ணன் கனக்க யோசிச்சுப் போட்டு

"சரி. கூட்டிட்டு வா பார்ப்பம்..." என்டு ஒத்துக்கொண்டான்.

அண்ணனுக்கு அரசாங்க வேலை. மாசச் சம்பளகாரன். பொஞ்சாதியும் நிறுவனமொன்டில வேலை செய்கிறா. கூடப் பிறந்தவனுக்கு பெரிசா அள்ளிக் குடுக்காட்டியும், அம்மாவை வைச்சுப் பார்க்கிறேன் என்டு ஓம் பட்டதே பெரிய விசயம் என்று நினைத்த சூசை அண்ணன் மனசு மாறுவதற்கிடையில் அம்மாவை கூட்டிக்கொண்டு அண்ணன் வீட்டில் விட்டிட்டு வந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அப்பாடா... கொஞ்ச நாளைக்கு நிம்மதியாக இருக்கலாம்...' என்று நினைத்த மூன்றாவது நாள்... அண்ணிதான் அம்மாவை இழுத்துக் கொண்டு வராத குறையாகக் கூட்டிக்கொண்டு வந்து, "இந்த உபத்திரவத்தை வைச்சிருக்க ஏலாதுப்பா. வந்துதா, தின்டுதா, குடிச்சுதாவென்டு சும்மா இருக்காம வீட்டத் துப்புர வாக்கிறன், தூசு தட்டுறன் என்டு ரீவியத் தள்ளி விழுத்தி உடைச் சிற்றுது. அப்பப்பா... என்னால ஏலாது. நீயே வைச்சுக்க ராசா" என்று ஒரு பொருளைத் தூக்கி வீசுற மாதிரி அம்மாவைக் கொண்டு வந்து அண்ணி விட்டிட்டுப் போனபோது சூசை நொறுங்கிப் போனான்.

"எனக்கு ஒண்ணும் தெரியாதுடா மகனே" என்ற மாதிரி சூசை முகத்தைப் பரிதாபமாகப் பார்த்த அம்மாவை என்ன செய்வது. ""நான் என்ன செய்யிறது...?" என்று மனுசி முகத்தைப பார்க்கிறான் சூசை.

அவள் வானமே இடிஞ்சு தலையில விழுகிற மாதிரிக் கிடந்து கத்துறா. "ச்சீ... இதென்ன சகோதரம். அவங்களுக்கு ஏலாதென்டா என்னட தலையில கட்டிச் சாவுறதுக்கு நான் என்ன இளிச்சவாய்ப் பொம்பிளயா?"

சூசையின் மனுசி போட்ட போட்டில் அந்த வீடே குபுக்கென்று எழும்பி உட்கார்ந்தது.

சூசைக்கு கொஞ்ச நஞ்சம் இருந்த நிம்மதியும் இத்தோடு தொலைந்து போய்ச்சு. "சரி.. சரி... பட்டதுக்குப் பாடாய் வைச்சுப் பார்க்க வேண்டியதுதான்."

இப்ப அம்மாவுக்கு கண் புகைச்சல். ஆட்கள் யாரென்று தெரியு தில்ல. பார்க்கிற காட்சியெல்லாம் சலனம் மாதிரி. நிறமும் தெரியல. ஒரு மண்ணும் தெரியல என்று சொல்றா. போன கிழமை மாறி மாறி செல்லடிச்ச நேரம் சனம் பரபரத்துக்கொண்டு கோயிலுக்கு ஓடின போது பொஞ்சாதியையும் புள்ளகளயும் கோயிலுக்கு ஓட வீட்டுட்டு கண் தெரியாத அம்மாவை கொடுங்கையில தூக்கிக்கிண்டு சூசை ஓடிப் போனதைப் பார்த்து இரக்கப்படாத சனமே இல்லை.

"அடே... தம்பீ... வரவர கண் துப்பரவாகத் தெரியாமல் போயிரும் போல இருக்கப்பு. எங்கேயாவது கூட்டிக்கொண்டு காட்ட மாட்டியாப்பு. கண்டியில நல்ல வைத்தியமென்டு சொல்லுதுகள். ஒருக்கா கூட்டிக்கொண்டு போடா மகனே! ஒரு மாசமா ராவும் பகலும் அம்மா இப்பிடித்தான் புலம்பிக் கொண்டிருக்கிறா. வயது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுபத்தாறு எழுபத்தேழு ஆகுது. இனிமேல் கண் தெரிஞ்சு என்ன தெரியாட்டில் என்ன? போற வயசுதானே என்றாலும் சூசையிட மனுசியிட சித்திரவதை இப்ப கூடிப்போய்ச்சு. அவ அம்மாவை அவசங்கைப் படுத்துறதைப் பார்த்து சூசை தட்டிக் கேட்டால் சண்டை வந்து விடுகிறது. இப்படி நாளும் பொழுதும் சண்டை பிடிச்சுக்கிண்டு கிடக்கிறது நல்லாவா இருக்கும்?

வயசு போன அம்மா தடுக்கி விழுந்தால் என்ன? செத்தால் என்ன? என்ற விதமாக மனுசி நடந்து கொள்ளுகிறாளே என்று சூசை பதை பதைத்தாலும் பொஞ்சாதி கல்லு மாதிரித்தான் இருக்கிறா. அகத்தி ஆயிரம் காய் காய்த்தாலும் புறத்தி புறத்திதான் என்ட கணக்கில அவள் இருக்கிறா. இரத்தமா உறவா? என்று நியாயப் போராட்டம் போராடுறான் சூசை.

இரண்டு நாளைக்கு முந்தி சூசையிட மனுசி செய்த கொடுஞ் செயல நினைச்சா சூசைக்கு நெருப்புச் சுட்டது கினக்கா வலிக்குது.

அம்மாவுக்கு கண் தெரியாதத வைச்சிக்கிண்டு அவவ வைச்சுப் படுத்திற பாடு. சோத்துக்குள்ள ஊத்திப் பிசையுறதுக்கு 'சொதி' கேட்க எச்சித் தண்ணியக் கொண்டுவந்து சோத்துப் பீங்கானுக் குள்ள ஊத்தினத சூசை பாத்திட்டான். அவனுக்கு ஈரக்குலை வெந்து போச்சு. ""ச்சீ... இதென்ன நிம்மதியில்லாத சீவியம். கிழடுக்கு சாவும் வந்து துலைக்குதில்ல. அள்ளிப் போட்டு புதைச்சிட்டு பேசாம இருக்கிறதுக்கு." என்று சலித்துக் கொண்ட சூசைக்கு மனசில ஓடின நினைப்புத்தான் இந்த பஸ் பயணம்.

மன்னாரில் இருந்து கண்டிக்குப் போற பஸ்ஸில முன் சீட்டில இடம் பிடிச்சு அம்மாவை இருத்தின போது "தம்பீ... நீ... என் பக்கத்திலயே இருப்பா." அம்மா வாஞ்சையாகச் சொல்ல சூசைக்கு நெஞ்சில் ஈரம் கசிந்தது. அவன் மௌனமாக மனசுக்குள் போராடி னான். மூப்பில வாற கண் பிரச்சினையை கண்டிக்கென்ன? எந்தச் சீமைக்குப் போனாலும் மாத்த ஏலாது. மாசம் மாசம் கிளினிக் கிளினிக் கென்டு இழுத்தடிப்பார்கள். செலவோட இழுத்துப் பறிக்கிறத நினைச்சுப் பார்க்கிறான்.

நிமிசத்துக்கு நிமிசம் மனுசியிட பாதகத்துக்குப் பழியாகப் போற அம்மாவுக்கு... அவன் மனசுக்குள்ளே திரும்பவும் ஒரே முடிவுதான் தீர்க்கமாயிருந்தது.

பஸ் ஏதோ ஒரு தரிப்பில் நின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யன்னல் வழியாக எட்டிப் பார்த்தான். பெயர் தெரியாத சிங்கள இடம். சூசைக்குத் தன் கணக்குச் சரியெனப்பட்டது. "அம்மா வாங்க இறங்குவோம்." மற்றவருக்கு கேட்காதபடி அம்மாவின் காதுக்குள் கிசுகிசுத்தான்.

"ஓம். வாறன்" அப்பாவியாக சூசையின் கையைப் பிடிச்சுக் கொண்டு கீழே இறங்கினா.

"வாங்க... இதில இருங்க. இன்னொரு பஸ் பிடிச்சுத்தான் ஆஸ்பத்திரிக்குப் போகணும். பஸ் நிக்குதாண்டு பாத்திட்டு வாறன். இதில இருங்க." அவன் காட்டிய இடத்தில அம்மா இருந்தாள். சூசை பஸ் ஸ்ராண்டின் இன்னொரு பக்கம் போனான்.

"கொழும்பு... கொழும்பு... கொழும்பு..." பஸ்காரப் பெடியன் கத்திக்கொண்டிருந்தான். சூசை அந்த பஸ்ஸில் ஏறிக்கொண்டான். பஸ் புறப்பட்டது. குனிந்து யன்னல் வழியாகப் பார்த்தான். அம்மா அவன் இருத்திவிட்ட இடத்திலேயே அவன் போன திக்கைப் பார்த்தபடி இருந்தாள்.

சூசைக்கு மனம் வெடித்தது. விசும்பலோடு கண்ணீர் வந்தது.

"அம்மா... அம்மா... அந்த நரகத்திலிருந்த உன்னைக் காப்பாற்ற எனக்கு வேற வழி தெரியல அம்மா..." அவன் கண்ணீர் திரை விலக்கி மீண்டும் பார்த்தான்.

அம்மா கண் சுகப்படும் என்ற நம்பிக்கையோடு இன்னும் சூசை வரவை பார்த்தபடி...

—மன்னா — 2009 பங்குனி —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அடா.. விடாதே உன்னை யழிப்பேன்...

மடை திறந்தே... படை கொண்டெழுவேன்.

திராவிடனே உனையழித்தே நான்

தலை நிமிர்வேன். சிங்கபாகு நானே. சிங்கபாகு..."

அந்தச் சிங்கள இளைஞன் பெருங்குரலெடுத்து ஓங்காரமாய்ப் பாடியதை வைத்த விழியெடுக்காமல் எல்லோரும்தான் பார்த்துக் கொண்டிருந்தோம். அவன் அந்த மண்டபத்தில் சிங்கம் போல நடந்து கொண்டே பாவனை செய்வது வித்தியாசமாக இருந்தது. 'சஜீவன்'

# கொதிப்பு

அதுதான் அவனது பெயர். உயரமாய் நல்ல வாட்ட சாட்ட மாய் இருந்தான். அவன் தலையை வெடுக் வெடுக் கென்று திருப்பும் போதெல்லாம் அவனது நீளமான தலைமுடி கொத்தாக அங்குமிங்கும் ஆடுவது அழகாக இருந்தது. நெற்றிக்கு முன்னால் வந்து விழுந்த கற்றை முடியை ஒரு கையால் ஒதுக்கி விட்டு மறுகையை சபைக்கு நேரே நீட்டி அவன் நெஞ்சை நிமிர்த்திப் பாடுகிற வரிகளில் விக்கினம் இருப்பதை அவன் மறைக்க விரும்ப வில்லை போலும். நான் கண்களை மூடிக்கொண்டேன்.

"ஓ... நான் இங்கு வந்திருக்கக் கூடாதோ."

மன்னாரில் இருந்து நீண்ட பயணப்பட்டு இங்கு வந்த ஆயாசமும், களைப்பும் தெரியாதபடி புதுமையாகவும், உற்சாகமாகவும் தெரிந்தவை யெல்லாம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது புழுவாக நெளிந்தேன்.

தலைநகரில். அதுவும் இப்படி ஓரிடத்தில்.

நேற்று மூன்றுமணி நேரமாக... அது எங்களுக்காக ஒதுக்கப் பட்ட நேரம். நல்ல வடிவாக 'சங்கநாதம்' கூத்தினை ஆடி முடித்தோம். இது பிரமாண்ட அரங்கம். நான் ஒருபோதும் இதுபோல ஓர் இடத்தைப் பார்த்ததில்லை.

பல ஏக்கர் சுற்றளவில் பிரமாண்டமான நிலையம். நிச்சயமாக இதனை வேறு நாட்டு அரசாங்கம் ஏதேனும் நல்லெண்ணமாகவே கட்டிக் கொடுத்திருக்க வேண்டும். பிரதான நுழைவாயிலால் நுழைந்து மூச்சிரைக்க படிக்கட்டுக்களில் ஏறி முடிக்கிறபோது அந்த கலையரங்கும். அதன் பின்னால் விரிகின்ற பெரிய பரபரப்புடன் கூடிய நகரமும் மறு பக்கத்தில் தொட்டு விடும் தூரத்தில் இன்னுமொரு பச்சைப் பசேல் மைதானமும். ஏற்ற இறக்க நிலப்பரப்பில் நூதனமாகக் கட்டப்பட்ட மண்டபங்களிலும், பாதைகளிலும் பளபளப் பாக்கப்பட்ட 'கிரனைட்' கற்கள் பதிக்கப்பட்டிருப்பது அழகுதான்.

இங்குதான் பிரதேசங்களின் மரபுக்கலை ஆட்டங்கள் நடைபெற ஏற்பாடு செய்திருந்தார்கள். எல்லா மாவட்டத்துக்காரரும் முடிந்தளவு வெகு சிறப்பாகத்தான் தத்தமது கூத்துக்களை ஆடினார்கள்.

எங்களை விட நிறைய சிங்கள இளைஞர்களும், வெளிநாட்டு முக்கியஸ்தர்களும் அங்கிருந்தார்கள். இன்று காலையில் இருந்து மாலை வரை சிங்கள மரபுக் கலைஞர்களின் ஆட்டமும், பாட்டும் தான். சஜீவன் நன்றாக ஜொலித்தான். விதவிதமான முகமூடிகளோடு நொஞ்சி அக்கா, தொவில், பலி நாடகத்தையெல்லாம் அவன்தான் முன்னின்று நடத்தினான். இறுதியாகத்தான் இந்த 'சிங்கபாகு' நாடகம். அதனையும் அவன் நல்ல விதமாகத்தான் அமைத் திருந்தான்.

இந்த நாடகம் முடிந்ததும் எல்லா நிகழ்ச்சிகளும் முடிந்து விட்டதாகச் சொல்லுவார்கள். எனக்கு எரிச்சலாக வந்தது.

சஜீவன் நல்ல கலைஞன். ஏன்தான் இப்படி வரிக்கு வரி தன் பாடலில் துவேசத்தைக் கொட்டுகிறானோ? அவன் பாடியது சிங்களத்தில் தான் என்றாலும் எனக்கு அந்த பாசை தெரிந்திருந்த படியால் எல்லாம் புரிந்தது. இப்போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு 'லசந்திகா' ஞாபகத்திற்குள் வந்தாள். அவள் ஒரு தேவதை. சிங்களத்தி.

எனக்கு அந்த மொழியைக் கற்றுத் தந்த குருவாயினி.

எட்டு வருசத்திற்கு முன்பு... நினைவுகள் அலையாகப் புரண்டது. இப்படியொரு கலை விழாவில் நடனக் குழு ஒன்றில் அவள் பணியாற்றிக் கொண்டிருந்த போதுதான் எனக்கு அவளைத் தெரியும். என்னை அடிக்கடி திரும்பிப் பார்க்க வைத்த அழகி. குருநாகலில் இளைஞர்களுக்கான உறவுப் பாலம் நடந்தபோது நானும் துடிப்பான இளைஞனாக அங்கிருந்தேன். ஒரு தேவை கருதி லசந்திகாவை சந்தித்தபோது அவளின் காந்த விழிகளின் இடைப்பாட்டைத் தவிர்க்க முடியவில்லை.

உண்மையிலேயே பாசை தெரியாமலே மனம் ஒருவருக் கொருவர் தாவி அலைபாயும் என்பதை உணரவைத்த நாட்கள் அவை. அவளோடு பேச வேண்டும் என்பதற்காகவே 'சப்தகோசய' புத்தகம் வாங்கி, அவசர அவசரமாகச் சிங்களம் பயின்றேன். அவளும் தான் எனக்காகத் தமிழ் படித்தாள். இருவரும் மனதின் மூலை முடுக்குகளை அலசும் அளவிற்கு பாசை படித்திருந்தோம். இரண்டு வருடங்களின் பின்பு எங்கள் கோயில் திருவிழாவுக்கு அழைத் திருந்தேன். லசந்திகா தனியாக வரவில்லை. தன்தோழி ஒருத்தி யுடன் வந்திருந்தாள்.

வீட்டிற்கு அவளை அறிமுகப்படுத்தினேன். நான் அவளை விரும்புவதாகச் சொன்ன போதுதான் பிரச்சினையே வந்தது. வீட்டிற்கு பெரியவர் என் 'ஐயா'தான். அவர்தான் என் காதலை விவகார மாக மாற்றினார். லசந்திகாவின் காதில் விழத்தக்கதாகவே விசத்தைக் கக்கினார்.

"எங்கேயோ ஆடிக்கொண்டிருந்த சிங்களப் பெட்டையையே கூட்டிக்கொண்டு வந்தனி..." அவரின் சிலேடைக்குள்ளிருந்த அவளின் சுயகௌரவ அழிப்பு லசந்திகாவைக் கிழித்துக் குதறியது.

அன்று அழுது குழறியபடியே வெளியேறியவளை என்னால் சமாதானப்படுத்த முடியவில்லை. காலம் அவளின் மனக்காயத்தை ஆற்றும் என்று காத்திருந்தேன். அது நடக்கவில்லை. லசந்திகா இராணுவத்தில் போய்ச் சேர்ந்து விட்டதாகச் சொன்னார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் சோதனைச் சாவடிகளில் எல்லாம் சீருடை அணிந்த இராணுவப் பெண்களுக்குள் லசந்திகாவை தேடினேன். அவள் இல்லை. இதுவரை இல்லை. எனக்கு சிங்களப் பாசையையும், இனம் பற்றிய புரிதலையும் கற்றுத் தந்த உபாத்தியாயினி லசந்திகா.

'ஜெயவேவா' கோசம் அந்த மண்டபத்தை அதிர வைத்த போது லசந்திகாவின் நினைப்பு இடையிலேயே அறுந்து போனது. இப்போது சஜீவனும், தோழர்களும் பெரியதொரு நாவாயில் சமுத்திரம் கடப்பது போல பாவனை செய்து ஆடிக்கொண்டிருந் தார்கள்.

இடைவெளி விட்டு அங்கொன்றும், இங்கொன்றுமாக வட்ட வட்ட மேசைகளும் நாற்காலிகளும் போடப்பட்டிருப்பது வசதி யாகவும், அழகாகவும்தான் இருந்தன. வந்திருப்பவர்கள் பிரதேச வித்தியாசம் பாராத வண்ணம் வெவ்வேறாகத்தான் அமர்த்தப்பட்டி ருந்தார்கள். சிற்றுண்டியும், தேநீரும் பரிமாறப்பட்டது. எனக்கு அருகில் இருந்தவர் பாக்கிஸ்தானியாராக இருப்பார் என நினைத்துக் கொண்டேன். அவரும் சஜீவனின் ஆட்டத்தை விழி கொட்டாமல் பார்த்துக் கொண்டிருப்பது எனக்கு என்னவோ போலிருந்தது.

இப்படித்தான் சஜீவனைப் போல நல்ல கலைஞர்களை வைத்து இந்த நாட்டின் உண்மையான வரலாற்றையே புரட்டிப் போடுகிற விதமாக ஆடல் பாடல்களுடன் கதை சொல்லப்படுகிறதோ.? நெஞ்சு கொதித்தது. இந்த இடத்தில் நான் ஒரு பூச்சியைப் போல சிறுத்துப் போவதை நினைக்க மனம் விம்மியது.

"அனுராதபுரத்தை ஆட்சி செய்த சிங்கபாகு திராவிடர் படை யெடுப்பை முறியடித்தான். தமிழர் தம் கொட்டத்தை அடக்கினான். சிங்களத்தை உயர்த்திய மாவீரன் சிங்கபாகு" என்ற சஜீவன் பாடுகிற பாடல் தமிழர் இருப்பினை தவிடு பொடியாக்கி "ச்சீ" இதென்னது? எனக்கு முள்ளி வாய்க்கால் படுகொலைகள்தான் ஞாபகத்திற்கு வந்தன.

"சஜீவனுக்கு நல்ல சாரீரம்... ஆனால் துவேசம் அதிகம்."

என் அருகில் இருந்த பாக்கிஸ்தானி ஆங்கிலத்தில் இதைச் சொல்லியபோது அவர் வேறு யாருக்கும் சொல்கிறாரோ எனத் திரும்பிப் பார்த்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை. அவர் என்னிடம்தான் அதைச் சொல்லியிருக்கிறார் என்று தெரிந்து சினேகமாய் முறுவலித்தேன்.

அவர் நீளமான குர்தாவும், அங்கியும் குதிரை முகம் போல நீண்ட முகத்தில் குறுந்தாடியும், நல்ல சிவப்புமாக... சிரித்தார்.

மன ஆறுதலுக்காகப் பேச்சுக் கொடுத்தேன்.

"கௌரவமாகத்தான் அழைத்தார்கள். இங்கு பாருங்கள் கொச்சைப்படுத்துகிறார்கள்."

அவருக்குள் எனது ஆதங்கம் படர்ந்திருக்க வேண்டும். என்னை நோக்கித் தன் கரத்தை நீட்டினார். நான் பற்றிக்கொண்டேன்.

"நீங்கள்..."

"இந்தியத் தூதுவராலயத்தில் பணி புரிகிறேன்."

இதை ஆங்கிலத்தில் சொன்னவர் சட்டென்று தமிழுக்கு மாறினார்.

"நான் தமிழ் நாட்டைச் சேர்ந்தவன்... தமிழன்."

அவர் அதைச் சொல்ல அனிச்சையாக நான் எழுந்து நின்றேன். எனக்குள் சட்டெனப் பூத்தது இரண்டு ஆச்சரியங்கள். ஒன்று அவருக்கு சஜீவனின் பாடலின் பொருள் புரிகிற அளவுக்கு சிங்களம் தெரிந்திருக்கிறது. மற்றது, எனது அங்கலாய்ப்பு அவருக்கு நான் சொல்லாமலே புரிந்திருக்கிறது..

அவர், நான் எழுந்து நின்றதை "ஏன் இப்படி?" என்பதுவாய்ப் பார்த்தார்.

"மாவீரன் முத்துக்குமார் பிறந்த மண்ணிலிருந்தல்லவா வந்திருக்கிறீர்கள். அதற்காகத்தான் இந்த மரியாதை." நான் சொன்னது அவர் நெஞ்சை உடைத்திருக்க வேண்டும். நிமிர்ந்து உட்கார்ந்து என் கண்களைப் பார்த்தபடியே பேசினார்.

"முத்துக்குமார்.. 'ம்' ஈழவர் துயரத்தை இந்த உலகம் திரும்பிப் பார்க்க அவன் நடத்திய கவன ஈர்ப்புப் போர்... ஆகிருதி... உயிர்ப் பிரிவு" இதைச் சொல்லும்போது அவரது கண்கள் பளபளத்தது. அவர் பேசிய தமிழ் இனித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் இந்த சிங்கள நாட்டிற்கு வேலையாக வரும்போதே, அந்த மொழியைக் கற்றுக்கொள்ள விரும்பினேன். கஸ்ரப்பட்டுத்தான் படித்தேன். இப்போதும் எனக்குள் மீண்டும் 'லசந்திகா' என்ற தேவதை ஊர்வலம் நடத்தினாள்.

"சூ... எவ்வளவு இனியவள்." என் வாழ்க்கையில் தவற விட்ட அரிய உறவு அவள்தான். என் மனம் மீண்டும் அதை ஒப்புவித்தது.

"சிங்கபா... சிங்கபா..." சஜீவனின் குரல் புதியதொரு தாளக் கட்டில் வீச்சமாகக் கேட்க.. லசந்திகாவின் நினைப்புத் தவறியது.

மாவீரன் முத்துக்குமார் முன்னால் சஜீவன் துரும்பாகத் தெரிந்தான். மனசுக்குள் இறுக்கம் தளர்ந்தது போலிருந்தது.

கொஞ்ச நேர மௌனத்திற்குப் பின்பு அந்த இந்தியர் சொன்னார்.

"முத்துக்குமார் பிறந்த தமிழ்நாடு. இப்போதுதான் நான், நீங்கள் சொன்னதின் பெறுமதியை உணருகிறேன். அவர் தன் கரத்தால் என் கரத்தை இன்னும் இறுக்கமாகப் பற்றினார். இது போதும் என்பதுவாய் அது இருக்க.

சஜீவனின் பாடல் வெறும் சத்தமாகத்தான் கேட்டது. நான் பேச்சை மாற்றினேன்.

"நீங்கள் நேற்று வந்திருந்தால் எங்கள் மன்னார் மாதோட்டப் பாங்கு ஆட்டத்தைப் பார்த்திருப்பீர்கள்."

"அப்படியா...? ஓ...". அவரின் கண்கள் ஆர்வத்தால் விரிந்து பின்பு அந்த சந்தர்ப்பத்தை இழந்ததற்காக வருத்தம் தெரிவித்துக் கொண்டன.

"உங்கள் பெயரென்ன...?" எனக்கு அவருடன் பேச வேண்டும் போல் இருந்ததால் கேட்டேன்.

"அன்பழகன்"

நான் எனது பெயரைச் சொன்னபோது புருவத்தை உயர்த்தினார்.

"தமிழ்நாட்டில் புரிசை கண்ண பிரானின் தெருக் கூத்துக்கள் பற்றி அறிந்திருக்கிறீகளா?" அன்பழகன் கேட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓம். எனக்குத் தெரியும். நான் சென்னையில் கூத்துப்பட்டறை மாணவனாக இருந்தபோது அவரைத் தெரியும். நல்ல படைப்பாளி."

நான் சொன்னதைப் புன்முறுவலோடு கேட்டுக் கொண்டிருந் தவர் அவர் பேச்சால் இடைநிறுத்தினார்.

"ஆம். நல்ல படைப்பாளி. தெருக்கூத்தில் ஆடுகின்ற கூத்தை அரங்க ஆற்றுகை செய்யக்கூடிய விதமாகவும் அவர் அமைத்திருப் பதைப் பற்றித்தான் சொல்கிறேன். எந்தவொரு கலைக்கும் தனித்துவம் மாறாது பொதுத்தன்மை இருந்தால் நல்லது."

அன்பழகன் எதைச் சொல்ல நினைக்கிறார் என்பது புரியாமல் நெற்றியைச் சுருக்கினேன். அவர் வருந்தும் குரலில், "ஈழத்தமிழருக் கென்று ஓர் பொதுவான கூத்து முறையை பிரகடனப்படுத்துங்கள். வடமொழி, தென்மோடி, வடபாங்கு, தென்பாங்கு, முல்லை, வசந்தன், சிந்து... உங்கள் மாதோட்டப் பாங்கு என்று உங்களுக்குள்ளேயே பிரிந்து கிடப்பதுதான் உங்களின் பலவீனம்." நான் அவர் சொன்ன நியாயத்தை யோசித்துக் கொண்டிருந்தேன்..

"உங்களுக்குள்ளே பிரிவினை வாதம் இல்லாமல் இருந்தால் எவ்வளவு நன்றாக விருந்திருக்கும்." எனக்கு முள்ளிவாய்க்கால் ஞாபகத்திற்கு வந்தது. அன்பழகன் வார்த்தைகள் எனக்கு உறைத்த போது சஜீவனின் பாட்டுச் சத்தம் என்னைக் கேலி பண்ணுவது போலிருந்தது.

"சிங்களத்தில் பேராசிரியர் எதிரிவீர சரத்சந்திரா செய்த நல்ல வேலை இதுதான். மனமே...சிங்கபாகு இது அவர்களின் பொது அரங்கு. பாருங்கள் அதனால்தான் இங்கிருக்கின்ற சிங்கள இளைஞர்கள் பிரதேச வேறுபாடு இல்லாமல் ஒன்றாக கோரசாக அதைப் பாடுகிறார்கள்.. ஆனால் உங்கள் மாதோட்டப் பாங்குப் பாடலையோ, ஆட்டத்தையோ வேறு மாவட்டத்து ஈழவர்கள் பாடி ஆட முடியுமா?

பாருங்கள்..."

அவரது கேள்வியிலிருந்த உண்மை என்னைத் தடுமாற வைத்தது. அவர் என் வாயைப் பூட்டிவிட்டு மௌனமானார்.

சஜீவனின் நாடகம் எதிர்பார்த்ததை விட வெகு சீக்கிரத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிந்து விட்டதாகத் தோன்றியது. சஜீவனுக்கு பாராட்டுக்கள் குவிந்தன. மற்றவர்கள் வரிசையாக வந்து வாழ்த்துச் சொன்ன போது அவன் கர்வமாயிருந்தான்.

அந்த மண்டபத்தை விட்டு வெளியேறி விடலாமா? என்று நினைத்தேன். சட்டென்று நாக்கைக் கடித்துக்கொண்டேன். "இல்லை அது நாகரீகம்." மனம்தான் சொன்னது. ஆனால் உடம்பு 'லட்ஜையால்' குளிர்ந்தது.

சஜீவன் என்னருகே வரும்போது கிட்டத்தட்ட அரைச் சாவுதான்.

"நான் சஜீவன்... அனுராதபுரம்" அவன் என் கையைப் பற்றினான். நான் என் பெயரைச் சொல்லிவிட்டு அவன் முகத்தைப் பார்த்தேன்.

"எங்கிருந்து வருகிறீர்கள்?" கேட்டான்.

"மன்னார்"

ஒரு சொட்டு நேரம்தான். சஜீவனின் முகம் இறுகியது. நான் மன்னார் என்று சொன்னதும் அவனுக்கு தென்பகுதி இனப் படுகொலைக்குப் பதிலடியாக அனுராதபுரத்துக்குள் படை நடத்தி சங்காரம் செய்த மன்னார் மாவீரன் விக்டர் ஒஸ்காவின் கம்பீரம் ஞாபகத்திற்கு வந்ததோ என்னவோ? சரேலென தன் கையை என்னிடமிருந்து எடுத்துக்கொண்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கௌ**தமரின் நிஷ்டை கலைந்தது...

"வந்திருப்பது யார்...?"

"பாடலிபுரத்திலிருந்து வருவதாகச் சொல்கிறாள். பகட்டாக இருக்கிறாள்" கௌதமர் கண்களைத் திறக்காமலே புருவத்தை உயர்த்தினார்.

"என்ன சொல்கிறாள்."

"தங்களோடு பேச வேண்டுமாம்." கௌதமர் துணுக்குற்றார்.

"ஒருவேளை யசோதாவாக இருக்குமோ? ச்சீ...

# யசோதா

இருக்காது. அவள் இத்தனை தூரம் தேடி வருவதாயிருந்தால் முன்பே வந்திருப்பாளே."

இப்போதெல்லாம் நிறையப் பேர் கௌதமரைப் பார்க்க இங்கு வருகிறார்கள். அவர்களில் பெண்களும் தான். நேற்றுக்கூட இளவரசி வஸாகாவும், பட்டத்து ராணி மல்லிகா தேவியும் சேடியரோடு வந்தார்கள். உபதேசம் கேட்டார்கள். இளவரசி வஸாகா கூ.. எத்துணை ஆழமான அறிவாற்றல். சித்தார்த்தரின் உபதேசத்தைக் கண்களை மூடியபடியே கேட்டுக் கொண்டிருக்கும் பணிவு. கௌதமருக்கு வஸாகாவைப் பிடித்திருக்கிறது.

வருகிறவர்கள் ஏதோ ஒரு நம்பிக்கையில் வருகிறார்கள். இந்த உலகத்தில் உள்ளும் புறமுமாக அழிவற்ற நிலையில் நித்திய வஸ்து எதுவும் இல்லை என்ற ஞானம் மற்றவர்களுக்கு உயர்ந்த எண்ணங்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுத்தியிருப்பதால்தான் ஏராளமாய் ஆட்கள் கௌதமரைத் தேடி வருகிறார்கள்.

'சரயூ' நதித்தீரத்தில் அழகிய மாடம். இளவரசன் சுதத்தன் புத்தருக்காக மாடம் மட்டுமல்ல, ஏராளமான திரவியங்களைச் செலவழித்து ஜேதவனம் என்கிற உத்தியானத்தையுமல்லவா உருவாக்கி கௌதமருக்கு பாத காணிக்கையாக்கியிருக்கிறான். அங்கு "புத்தம் தா்மம் சங்கம்" என்று ஓங்கியொலித்த மந்திரத்தினுள் எல்லாமும் கட்டுப்பட்டிருந்தது. அகன்ற மேடையின் நடுவே ஓங்கி வளர்ந்து நிழல் பரப்பிய அரசமரம். இது கௌதமரின் முயற்சியினாலும், ஆழ்ந்த சிந்தனையினாலும் மனதின் மயக்கம் போக்கி தெளிவைப் பெற்றதின் அடையாளமாக தலைநிமிர்ந்து நிற்கிறது. அரச மரத்தை வணங்குவது முயற்சியையும், ஆத்ம வெற்றியையும் வணங்குவதற்குச் சமானம். இறுமாப்புடன் விழிகளைத் திறந்த கௌதமருக்குத் தூரத்தில் யசோதா தெரிந்தாள்.

"வரச்சொல்லுங்கள் ஆனந்தரே" கௌதமருக்கு பணிவிடை செய்யும் ஆனந்தருக்கு அவரின் வார்த்தையே வாழ்க்கை என்பது போல விரைந்தார். யசோதா கௌதமரின் முன்னிலையில் வந்து நின்றபோது தேகம் ஒரு தடவை சில்லிட்டு ஆடியது. குரலைத் தாழ்த்தி அழைத்தார்.

"ய..சோ..தா.."

"யசோதாதான் உங்கள் மனைவி. உங்களோடு சயனித்துப் பிள்ளை பெற்றுக்கொண்ட அபலைப்பெண்."

வந்தவள் கோபமாய் பொரிந்தாள்.

"சாந்தி... சாந்தி... புத்தம் சரணம்..." அவர் தடுமாறி ஞானம் பேசினார்.

யசோதா முகம் சுழித்தாள். கோபத்தால் அதிர்ந்தாள். "நீங்கள் பூட்டிய தாலி இன்னும் என் கழுத்தில்தான் இருக்கிறது.பாருங்கள்." அரச மரத்தின் கிளையில் இருந்த பட்சியொன்று கீச்சிட்டு படபடத்துப் பறந்தது. கௌதமர் நெஞ்சில் யசோதாவின் பார்வை ஈட்டியாய்க் குத்தியது. அவர் மனசோடு ஞானம் பேசினார். அவர் இதழ்கள் முறுவல் பூத்தது..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"யசோ..தா..." வெகு நாட்களுக்குப் பிறகு அவளின் பெயரை உணர்ச்சியோடு உச்சரித்தார். "பெண்ணே நான் சொல்வதைப் பொறுமையாக கேள். இந்த உலகத்தின் பேறுகள் யாவும் கணத்துக்கு கணம் மாறிக்கொண்டேயிருக்கும். தோன்றியது யாவும் அழியும். இந்த அநாத்ம வாதத்தைப் புரிந்து கொள். நான் பரிநிர்வாணம் அடைந் திருக்கிறேன். ஆசை துறந்து ஞானம் பெற்றிருக்கிறேன். இதைவிடப் பெரியது ஒன்றுமில்லை."

அவர் பேசிக்கொண்டிருந்தபோதே சீடர் ஆனந்தர் வருவதைப் பார்த்துவிட்டு அவருக்கு கைகளால் சைகை செய்தார். அந்த சைகைக்கு வரவேண்டாம் என்று பொருள். ஆனந்தர் தூரத்திலேயே நின்றுவிட யசோதா அச்சமின்றி கௌதமரை நிமிர்ந்து பார்த்தாள்.

சிரைத்த தலை, மெலிந்த தேகம், அவர் காவி தரித்திருப்பது அவளுக்கு எரிச்சலை மூட்டியது.

அவளுக்கு ஞாபகம் வந்தது. கௌதமர் காதலோடு வந்து அவளைப் பெண் பார்த்ததும், கலியாணம் செய்து கொண்டதும், சல்லாபித்ததும், அவள் ஒரு பிள்ளைக்குத் தாயானதும் அவள் மனதில் தொடராய் ஓடியது.

நினைவு சுட்டதால் பொரிந்தாள்.

"இரவோடிரவாக ஏன் யாருமறியாமல் எல்லாவற்றையும் விட்டு விட்டு ஓடி வந்தீர்கள்." கௌதமர் சொல்வதற்கு முன் சுற்றுமுற்றும் ஒரு தடவை பார்த்தார். தன் சீடர் ஆனந்தர் திடுக்கிட்டு நிற்பது தெரிந்தது. அதனால் மௌனத்தில் நிமிடங்கள் கழிந்தன.

"பெண்ணே நீ சொல்வது நிஜம்தானா?" ஆனந்தர் கேட்டார். "ஏன் உங்களுக்குச் சொல்லவில்லையா?"

ஆனந்தர் தன் குருவைக் கிட்ட வந்து உற்றுப் பார்த்தார். "ஓ எத்துணை சாந்தம். அதிராமல் கூறும் பஞ்சசீலக் கொள்கையும், தர்ம போதனையும், ஞானம் பெற்ற இவரைத் துறவுக்குத் துரத்தியது, ஆடம்பரமும் அரண்மனையும் மட்டுமல்ல கட்டிய அழகிய மனைவியும் பிள்ளையும்தான்..." ஆனந்தரின் நினைப்பில் கௌதம புத்தர் இன்னும் ஒரு படி உயர்ந்தார்.

கௌதமர் யசோதாவின் கேள்விக்கு இன்னும் பதில் சொல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லை. அவரின் மனம் வேறொரு நினைப்பில் இருந்தது. நேற்றைக்கு முன்தினம் தன்னிடம் வந்த பெண்ணை யசோதாவுடன் ஒப்பீட்டுத் தராசில் ஏற்றிப் பார்த்தார். அவள் கணவனை விட்டு விலகிய கைம்பெண். தன் ஆண்பிள்ளையைச் சர்ப்பம் தீண்டி இறந்துவிட தூக்கிக்கொண்டு ஓடி வந்தாள். "குழந்தை இறந்து விட்டது. ஒரே பிள்ளை. ஆண்பிள்ளை." அரற்றினாள். "பெண்ணே நான் என்ன செய்ய வேண்டும்?" "உயிர்ப்பித்துத் தாருங்கள் புத்தரே." "அதனாலென்ன, தருகிறேன். ஆனால் நீ ஒன்றுசெய்ய வேண்டும்?" "எது வேண்டு மானாலும் செய்கிறேன். சொல்லுங்கள்." கௌதமருக்குச் சிரிப்பு வந்தது. புன்னகை மாறாமல் "ஒருபோதும் சாவு நிகழாத வீடு களுக்குச் சென்று மூன்று பண்டங்கள்..." அந்தப் பெண்ணுக்கு வியர்த்தது. எளிதான பொருட்கள்தான் உப்பு, கடுகு, மிளகுதான்... "போ.. வாங்கிவா.. நாழிகையாவதற்குள் திரும்பிவிடு." அவள் குழந்தையின் உடலைத் தரையில் கிடத்திவிட்டு ஓடினாள். பொழுது கழிந்து வந்தவளின் மனம் கெட்டியாகியிருந்தது. "சாவு நேராத வீடு எங்குமில்லையே ஐயனே." "புரிகிறதா. சாவு மட்டும்தான் மனித வாழ்வில் நிச்சயமானது..." அவள் புரிந்துகொண்டாள். அவள் புத்தரின் ஞானத்தை உள்வாங்கியிருந்தாள். தன் பிள்ளையின் ஈமக்கிரியை செய்வதற்கு மனம் விட்டுக் கொடுத்ததை நினைத்து சாந்தி யடைந்தாள்.

அவளைவிட இந்த யசோதா என்ன? ஆழ்ந்து அமைதியாக உரைத்தால் சரியாகப் புரிந்து கொள்ளுவாள். யசோதாவின் கண்களில் ரௌத்திரம் தெரிந்தது. "நான் கேட்டதற்கு இன்னும் பதில் சொல்ல வில்லை." அவளின் சீற்றம் கௌதமரின் அமைதியைக் கலைத்தது.

"நீ என்ன கேட்கிறாய் நான் பதில் சொல்வதற்கு?"

"அரண்மனையின் கேளிக்கையும், பகட்டும் மனைவியையும், புத்திரனும் எப்படிக் கசந்தது உங்களுக்கு?"

"யசோதா மாற்றம் என்பது முன்னோக்கிச் செல்வது. பின் னோக்கியல்ல. கடந்தகாலம் பிணத்திற்கு சமனாகும். அதை நினைத்துக் குழம்பாதே. நிகழ்காலம் மட்டும்தான் வாஸ்தவம். வா.. யசோதா பொய்மையை விட்டு விலகி வந்துவிடு. நிஜமானது எது என்று காட்டுகிறேன். பிணியையும், முதுமையையும், சாவையும் உணராது புதிய நிலைக்குள் வந்து விடு."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ச்சீ... மனித வாழ்க்கையின் இயற்கை விதிகளுக்கு முகம் கொடுக்க முடியாத கோழையா நீங்கள். அதனால்தானா ஓடி வந்தீர்கள்" கௌதமருக்கு முகம் சட்டெனக் கறுத்தது.

"ஓ இந்தப்பெண்ணுக்கு எப்படிப் புரிய வைப்பது? உன் கேள்விகளுக்கு விடை கிடைக்கும் வரை காத்திரு." கௌதமர் அதற்கு மேல் அங்கு இருக்கவில்லை. எழுந்து சென்றுவிட்டார்.

நிலவொளியில் சரயூ நதியும் வெண் மணற்பரப்பும் வெளுத்துக் கிடந்தன. பௌர்ணமிக்கு இன்னும் இரண்டே நாட்கள்தான் என்ற படியால் புத்த பிக்குகள் அங்கு வரத்தொடங்கியிருந்தனர். சரயூ நதியின் சலசலப்பு மட்டும் கேட்டுக்கொண்டிருந்தது. யசோதா வுக்கு அந்த வெண்மணலில் தனியாக அமர்ந்திருப்பது இதமாக இருந்தது. தூரத்தில் கோசல ராஜ்ஜியத்தின் சிராவஸ்தி நகரத்தின் அரச மாளிகை வெளிச்சம் நதியில் விழுந்து மினுக்கிக் கொண்டி ருந்தது. யசோதா புத்தரைப் புண்படுத்திய வார்த்தைகளை நினைத்து விசனமடைந்து கொண்டிருந்தாள்.

கிரேக்கத்தில் தோன்றியிருந்த பிதாகோர், கெராக்லிட்டோ போன்ற தத்துவ ஞானிகளின் கருத்துக்களைப் பின்னுக்குத் தள்ளி விட்டு கௌதமரின் பஞ்சசீலக் கோட்பாடு முன்னுக்கு வந்து கொண்டிருந்த காலப்பகுதியில் யசோதாவால் மட்டும் ஒத்துப்போக முடியவில்லை என்றால்.... உலகமே போற்றித் துதிக்கும் கௌதம புத்தரைப் பற்றி தனக்கிருக்கும் நினைப்பு மாற்றப்பட வேண்டும் என்று நினைத்தாள். அவள் மனம் இளகியது.

மீண்டும் மடத்திற்கே சென்று விடுவோம் என்று எழுந்தவளுக்கு சற்றுத் தூரத்தில் காவியுடையோடு அவளை நோக்கி பிக்குகள் வருவது தெரிந்தது. எல்லோரும் மதிக்கும் புத்தரின் பிரதம சீடர் மகாஸ்தவீர் தர்மசேனர்தான் வந்துகொண்டிருந்தார்.

"குழந்தாய்... வா... உணவருந்தலாம்." யசோதா மனதுக்குள் குமைந்தாள். தன் தவறுக்காக வருந்தினாள். "புரிகிறது யசோதா... உபநிடதம், பிரம்மவாதமும் கற்பித்தவைகளைத் தாண்டி, பரித்தி யட்சப் பொருட்களைத் தாண்டி ஆத்மா, கடவுள், நித்தியத்துவம், சொர்க்கம், நரகம், புனர்ஜென்மம் என்பவைகளையெல்லாம் தாண்டி கௌதம புத்தரின் அநித்யவாதத்தை உன்னால் ஏற்றுக் கொள்ள முடியாதிருக்கிறது அல்லவா?" அந்தப் பெரியவரின் தொனியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்த கனிவும் ஆழமும் யசோதாவை அசைய விடவில்லை. அவளுக்கு அவரின் வார்த்தைகளைக் கேட்கவேண்டும் போலிருக்கக் கேட்டாள்.

"அப்படியானால் கௌதம சித்தார்த்தர் பெண்ணாகிய என்னை அபலையாக்கியது பாவமில்லையா?"

பெரியவர் சிரித்துவிட்டுச் சொன்னார், "இந்த உலகத்தின் நியமங்களும், அதனால் விளைந்த தத்துவங்களும் நதியைக் கடக்கப் பயன்படுத்தும் தெப்பக்கட்டைகளைப் போல, நதியைக் கடக்க உதவியதே என்பதற்காக அந்தத் தெப்பக் கட்டைகளை தலையில் வைத்துச் சுமந்துகொண்டு திரிவது புத்திசாலித்தனமல்ல."

யசோதா பெரியவரின் அசையும் உதடுகளையே பார்த்துக் கொண்டிருந்தாள். வெகுநேரம் அவளுக்கு கேள்வி கேட்கத் தோன்றவில்லை. அவளுக்கு மனம் புரளுவது போலிருந்தது.

"உண்மையாகவா, மக்கள் இவற்றையெல்லாம் ஏற்றுக்கொள்கிறார்களா?" "இல்லாமலா, அதோ தெரிகிறதே ஸிராவஸ்தி நகரம்.... அங்குதான் இளவரசி வஸாகா புத்தருக்காகக் கட்டும் ஆயிரம் அறைகளும், ஏழு மாடியுமான பூர்வராம மிருதார் மாதாமடம் இருக்கிறது. பிரசேனஜித்தனின் பட்டத்து அரசி மல்லிகாதேவி புத்தருக்காகக் கொடுத்த கொடைகளின் எண்ணிக்கை சொல்லிமாளாது. இளவரசன் சுத்தன் அருளிய ஜேதவனம் பற்றி கேள்விப்பட்டிருப்பாய்."

"அப்படியானால் சொத்து சேர்க்கிறீர்கள்?" "சொத்தா யாருக்கு? பெண்ணே உடுத்துவதற்கு மூன்று துணிகள், மண்ணால் வனைந்த பிச்சைப்பாத்திரம், தண்ணீர்ப்பை, ஊசி சவரக்கத்தி, இடுப்புக்கச்சை இவைகளைத் தவிர வேறொன்றும் பிக்குவுக்குச் சொந்தமில்லை. ஒரு கவளம் அன்னம் கிடைத்தாலும் மற்றவர்களுக்குப் பகிர்ந்து கொடுத்துத்தான் உண்ண வேண்டும்"

"மடமும் உத்தியாவனமும் யாருக்குச் சொந்தம்?" "அது பகவான் அமைத்த சங்கத்திற்குச் சொந்தம்." அவர் சொல்லி முடிக்க மற்றவர்கள் ஒரே தொனியில் "புத்தம் சங்கம் தர்மம்" என்று சொல்ல யசோதாவின் வாயும் அவளையறியாமல் அந்த மந்திரத்தை உச்சரித்தது. அவளின் வாார்த்தைகளை மேவிக்கொண்டு புத்தி பேசியது. "எது என்னவாய் இருந்தாலும் அவளுக்கு கௌதமர் செய்தது தவறு.. தவறு.. தவறு.." விடிந்தது.!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"யசோதா, பிக்குனிகளை வரச் சொல்லியிருக்கிறேன். பஞ்சாங்க நமஸ்காரம் செய்து பஞ்ச சீலத்தை ஏற்றுக்கொள். பிக்குனியாகி விடு" யசோதாவுக்கு கட்டுப்பட முடியவில்லை. "இரவோடிரவாக விட்டுப்பிரிந்த உங்களிடம் பகல் பொழுதில் சொல்லி விட்டுப் பிரிவதற்காகவே நான் வந்தேன்." புறப்பட்டாள் யசோதா. அவளுக்குப் பின்னால் அந்தப் போதனை கேட்டுக் கொண்டே இருந்தது.

"ஜீவகாருண்யமே... மந்திரம்.. ஜாதி சமய வேற்றுமை இல்லாத உலகம் வேண்டும்.. உயர்வு தாழ்வு இல்லாத உலகம் வேண்டும்."

**– மன்னா – 2009 பங்குனி –**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரீடம். ஆசனி மரத்தில் செஞ்சது. அந்த நாளையில மூவிராசா வாசாப்பில ஏரோது ராசா தலையில வைச்சு ஆடுற கிரீடம். அந்தப் பெரிய கிரீடத்தை மிராந்த தச்சருதான் செய்தாராம். தஞ்சாவூர்ப் பட்டை ஒட்டி, இந்தியாவில மதுர மீனாச்சியம்மன் கோவிலில வாங்கின முத்து, மணி, சரமெல்லாம் கட்டின நல்ல வடிவான கிரீடம். தங்கக் கலரில லைற் வெளிச்சத்திற்குச் சும்மா தகதகவெண்டு இருக்கும்.

பறுனாந்து அந்தக் கிரீடத்த உத்துப் பாத்துக்கிண்டு இருந்தான். அவனுக்குள்ள இருந்த ஆச அன்டைக்கு நிறைவேறப்போகுது. அவன் ஆசப்பட்ட வரவு. இந்தக்

# கிரீடம்

கிரீடத்த தலையில வைச்சு ஆடனும். பறுனாந்து மனசுக்குள்ள சிரிக்கிறான்.

அவன்ர மாமா சைமன் பீரிசுதான் முதல் ஏரோது ராசா வரவெடுத்து ஆடுவாரு. அவர்ர சத்தமும், சாரீரமும், போடுற கூத்தும் ''சூ'' பார்க்கப் பதினாறு கண் வேணுமாம். ஓம் இந்தக் கிரீடத்த தலையில வைச்சுஆடுற ஆட்டத்துக்கு ஒரு மவுசுதான். "தாரகை யுதித்தது பொய்காண நூதனமான தாரகை யுதித்தது பொய்காண்"

மனுஷன் சிங்காசனத்தில இருந்து பாட்டுப் படிச்சுக்கிண்டு பாயுற பாய்ச்சலில மேடையே ஆடிப் போகும். பிற்பாட்டுக்காரன் அசந்து போவான். அப்பவே சொல்லுவாங்க, ''சைமன் பீரிசுக்குப் பிறகு இந்த வரவ எடுத்துப் படிக்கிறதுக்கு இந்த ஊர்ல ஆளில்ல.'' இப்பிடிக் கதைச்சதுதான் பறுனாந்துக்குப் பிடிக்கயில்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ம் இவர விட்டா ஆளில்லையாக்கும். வரவத் தந்து பாரு. கூத்துப் போட்டுக் காட்டுறன்." பறுனாந்து இளந்தாரி. செருக்குப் பிடிச்சுக் கதைக்கிறானென்டு பாக்க, ''இந்த முற வாசாப்பில நாந்தான் ஏரோது" என்டு ஒத்தக்காலில நிக்கிறான். கட்டஎகாரங்க, பெரிய மனுசங்க சொல்லிப் பாத்தும் கேக்கிறானில்ல. பறுனாந்துக் குப் பின்னால இளவட்டப் பயல்கள் நின்டுகின்டு 'உஸ்' காட்டுறான்கள். இவ்வளத்திற்கும் சைமன் பீரிசு பறுனாந்துக்கு சொந்தத் தாய்மாமன். குடும்பத்தில உள்ள பிரச்சின சந்திக்கு வர வேணாமென்டு ஆக்கள் கேட்க சைமன் பீரிசு விட்டுக் குடுத்திட்டாரு. ''சரி ஆசப்படுறான் படிக்கட்டும், மருமகன்தான்." அவ்வளவுதான். பறுனாந்துக்கு தல கால் தெரியவில்லை. கொப்பிய வாங்கிப் பாட்டெல்லாம் பாட மாக்கிற்றான். இனிக் கூத்துத்தான் பழகணும். அதுக்கு தலையில வைச்சு ஆடுறதுக்கு மரக் கிரீடம் வேணுமே. அது மாமா சைமன் பீரிசிட்டத்தானேயிருக்கு.

வெக்கம் ரோசம் பாக்காம, அவர் வீட்டு வாசலுக்குப் போய் நிண்டான். ''சூ... ராசா வந்திருக்காரு ஏரோது ராசா! ஏன்னென்டு கேளு..."

மாமா அவரு மனுசியப் பார்த்துக் கேக்கிறாரு. பறுனாந்து எச்சி விழுங்கினான். "மர முடியத் தாங்க. வைச்சு ஆடிப் பழகணும்." மாமா பறுனாந்த மேலையும் கீழையும் பாத்திட்டு ''மூணு றாத்தல் வரும் பாரம் வைச்சு ஆடுவியா?'' ''ஆடுவன்." பறுனாந்து 'இடும்புக்கு' கதைச்சான். அவரு அலுமாரிக்கு மேல மாட்டுத்தாள் பேப்பரால சுத்திக் கட்டி வைச்சிருந்தத சூதானமா இறக்கினாரு. ஆவன்டு நின்ட பறுனாந்து கையில கொடுக்கிறாரு. ''ந்தா... கவனம்..." வாங்கினான். வாய்க்குள்ள சிரிச்சுக்கிண்டு போறான். அவன் படலையத் திறக்கும்போது மாமா கூப்பிடுறார். ''ஞ்சே பறுனாந்து..." அவன் திரும்பிப் பார்க்கிறான். ''ஏலாதென்டா வெள்ளென சொல்லிரு." ''ஏலாதா... கூத்துப் போடும்போது பாருங்க." அவன் முறைச்சிற்றுப் போறதப் பார்த்தபடியே நிக்கிறாரு சைமன் பீரிசு.

முதல் முறையா மர முடிய வைச்சு ஆட, பறுனாந்துக்கு கொஞ்சம் பாரம் தெரிஞ்சுது. போகப் போக பாரம் துப்பரவாத் தெரியல. ''நல்ல கூத்து. பறுனாந்திட கூத்தும் பாட்டும் பரவாயில்லத்தான்." என்டு அண்ணாவியார் சொன்ன நேரம் பறுனாந்துக்கு பெருமையா இருந்துது. என்ன இருந்தாலும் சொந்த அக்கா மகன் ஒதுங்கி இருக்கக் கூடாதென்டு மனுஷன் சும்மா இருக்கயில்ல. அவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராவில கூத்துப் பழக்கிறதுக்குக் கூடுற இடத்துக்குப்போய் அவருக்குத் தெரிஞ்ச அகட விகடமெல்லாம் அவனுக்கு சொல்லித் தான் கொடுத்தாரு. கூத்தில உள்ள குதிப்பையும், தீர்மானக் கட்டையும் அவரு போடுற தினுசில பறுனாந்தும் போட்டுப் பழகிற்றான்.

இந்த முறை வாசாப்பில ஏரோதுக்கு பறுனாந்துதான் படிக்கிறானாம் என்டு தெரிஞ்சு சுத்து வட்டாரம் எல்லாம் ஒரு வித மாகத்தான் பார்த்தது.

காணிக்கத் திருநாளுக்கு முதல் நாள் ராவு ஏழு மணிக்கெல்லாம் துவங்கிற வாசாப்பு விடியப்புறத்தில முடிவுக்கு வரும்போது மூவி ராசாக்களப் போட்டு பயமுறுத்தி, அவதிப்படுத்திற ஏரோது வரவுதான் பறுனாந்துக்கு. பாக்கிற சனம் நித்திரத் தூக்கத்தில அயந்து போற நேரம். பறுனாந்துக்கு அட்டகாசமா மேடையில ஏறனும். அவன் போடுற கூத்தும் பாட்டுந்தான் சனத்திற்கு தெம்பு.

வாசாப்புக்கு மூணு நாள்தான் இருந்தது. பறுனாந்துக்கு சாடையா இருந்த இருமல் கூடிக்கொண்டே போய்ச்சு. பறுனாந்து சூடு என்டு சோர முழுகிற்று, வேப்பம் பட்டக் கசாயம் வைச்சுக் குடிச்சுப் பார்த்தான். சரிவரவில்லை. அதிமதுரம் நல்லதென்டு சொல்ல அதையும் திண்டு பாத்தான். மரியான் பரிகாரி பாத்திற்று, "இதொரு சாதியா இருக்கு" என்டவரு வசம்பும் பனங்கற்கண்டும் சேத்து கொத்தமல்லி ரசம் மாதிரியொண்ணு வைச்சு மூணு சந்தி குடுத்துப் பார்த்தாரு. சரிவரயில்ல. "இருமல் ஒரு ஐந்து நிமிசம் நிக்குதில்ல. இருமலென்டா அதயேன் கேக்கிறீக, நெஞ்சுக்கூடு அதிரிற மாதிரி இருமல். நாளைக்கு வாசாப்பு, பறுனாந்துக்கு என்ன செய்யிறதென்டே தெரியல்ல. அவனிட அம்மா மேரி என்ன செய்தா தெரியுமா? அவ அண்ணனிட கண்ணூறுதான் இப்படியிருக்குதோ என்ன கொள்ளையோவென்டு சைமன் பீரிசுக்குத் தெரியாம அவரிட காலடி மண்ணையெடுத்துக்கிண்டு வந்து பிள்ளைக்குச் சுத்திப் போட்டு கண்ணூறு கழிச்சு ஊத்துறா. அப்படியும் இருமல் நிண்ட பாடில்ல. என்ன செய்யிறது? இந்த லட்சணத்தில வாசாப்பு எப்படிப் படிக்கிறது? பயந்திட்டான். அவன் எடுத்திருக்கிறது அப்படியும் இப்பிடியுமா? முக்கியமான வரவு. அதுவும் நேத்தி வாசாப்பு. மாமா வோட வம்பிழுத்து வரவு வாங்கினதுதான் பிழையோ? அவனுக்கு மனம் கிடந்து அவதிப்படுது. வீட்டுக் கதவப் பூட்டிட்டு தனியா இருந்து படிச்சுப் பாத்தான். தொண்ட நோவுது. ஒரு பாட்டத்தானும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுசாப் படிக்க ஏலுதில்ல. பாட்டுக்கு மேல இருமல் வந்து துலைக்குது. அவன் நம்பிக்க இழந்து அழுதான். முதல் முறையா தோல்வியை ஒப்புக்கொள்ளனும்போல இருக்குது.

ராவைக்கு வாசாப்பு. ஊரெல்லாம் திருநாளைக்கு சோடிச்ச மாதிரி இருக்கு. புறத்தி ஊராக்கள் வந்து குமியுதுகள். கோவீல் றோட்டில மணிக்கட பூரிக்கடயென்டு எக்கச்சக்கம். சைமன் பீரிசு ஈசிச்சேர்ல படுத்துக் கிடக்காரு. அவரு மனசு பாரமாக் கிடந்து தவிக்குது. அவருக்கு ஏலாமப் போகுமட்டும், ஊர்ல வாசாப்பு படிச்சா அவருதான் ஏரோது ராசாவெண்டு நினைச்சிருந்தாரு. இப்படி அவருட மருமகனே அவரு நினைப்பில மண்ணள்ளிப் போட்டுட்டான். மத்தவங்க சொன்னாங்கன்டு ஏரோது வரவ விட்டுக் கொடுத்தது பிழை. அவரு மானத்த விட்டுக் கொடுத்த மாதிரிக் கிடந்து குமுறாரு. மருமகன்தான் என்டாலும் தன்னிட காலத்திற்குப் பிறகென்டாலும் பரவாயில்ல. இப்பயும் எனக்கு ஏலும் எனக்கு ஏலும் என்டு மனசுக்குள்ள உருக்குடுக்கத் துவங்கினாரு சைமன் பீரிசு.

அவசரமா எழும்பி பொட்டகத்தில வைச்சிருந்த சலங்கையை எடுத்துக் காலில கட்டினாரு. அறைக் கதவைப் பூட்டிக்கிண்டு, சாரத்த தூக்கிச் சண்டிக் கட்டு கட்டிக்கிண்டு போடுறாரு கூத்து. ''சக்கை சக்கையாக வாக்கி சக்கரத்திலே பூட்டி விட்டு மறந்திட மறந்திட துட்டனேயுன்னை சாட்டையாலடித்து வதைத்திடுவேனே" குரலை உயத்தி கணீரென்டு அவரு படிச்ச பாட்டும் போட்ட கூத்தும் அதயேன் கேக்குறீக? ஊருஞ் சனமும் வந்து நின்டு பாக்குது. அவரு கண்ணில இருந்து வடிஞ்ச கண்ணீரும் கவலையும் ஊர் பாக்குது. ஆடியாடிக் களைச்சுப்போய் தரையில வீழுந்திட்டாரு சைமன் பீரிசு. இருமல் சத்தம் கேட்டு முழிச்சுப் பாத்தாரு மனுசன். அவரு முன்னால பறுனாந்து நிற்கிறான்.

''மாமா", ''என்ன?" பறுனாந்துக்கு கண் கலங்கியிருந்தது. ''மாமா நீங்க படிங்க மாமா. எனக்கேலாது" சொன்னவன் இடைவெளி இல்லாமல் இருமினான். சைமன் பீரிசு முகத்தில பிரகாசம் பரவிற்று.

**— காலநதி — டிசம்பர் —**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வி**ட்டுபட முடியாத 'வீல்'ச்செயார் சில்லுச் சுழலும் விசுக் விசுக்கென்ற சத்தம் ஓய்ந்து எல்லாம் நிசப்தம். மனசு மட்டும் அரற்றிக் கொண்டிருக்கிறது.

"நாற்பது வயசு தாண்டியபோது கவனமா இருந் திருக்கணும். இரும்பையும் கடிச்சுத் தின்னுற மாதிரி இளவயசில்லையே."

எல்லோரும்தான் கதைக்கிறார்கள். "பாவம் கிடந்து அழுந்துது." ஒருமையில் விளித்து இரக்கம் காட்டுவது எரிச்சல் எரிச்சலாய் வருகின்றது.

ஐம்பதைக் கடத்தி அறுவதிற்குள் நுழைந்து ரெண்டு

# ஆசை மரிப்பு

வருடம்தான் ஆகிறது. அதற்குள் பக் பக்கென்று பற்றிக் கொண்ட வருத்தங்கள்.

இருந்து விட்டு சடுதியாக எழும்பினால் லேசாத் தலை சுற்றியது. டொக்டரிடம் காட்டியபோது 'கவனம் கொலஸ்ரோல்தான் பிரச்சினை.'

அந்த எச்சரிப்போடேயே எல்லாவற்றையும் துறந்து துறவியாகியிருக்க வேண்டும். அடுத்த வருடமே ஒருநாள் தினசரிப் பத்திரிகையைக் கையிலெடுத்துக் கொண்டு தரையில் இருந்தபோது ஐஞ்சு நிமிசம்தான் பின் பிடரிக் குள் 'சுரீர்' என்று குத்தி நீளமாய் தேகமெங்கும் ஊர்வது போல ஒரு வலி. திரும்பவும் அதே டொக்டர் "ஐயா... மெத்தக் கவனம். சுகர்தான் பிரச்சினை. இனி டெய்லி மாத்திரை எடுத்தக்கொள்ள வேணும். அப்போதாவது ஓய்ந்திருக்க வேண்டும். புத்தி வேறு, நாக்கு வேறு என்றாகி விட்டது. இந்த உடம்பு எத்தனை முறைதான் எச்சரிக்கும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று மாதத்திற்கு முன்பு லேசாக வீட்டுப்படிதான் காலில் இடித்து சின்னக் கீறல்தான் என்றிருந்தபோது, அது சீழ்ப்பிடித்து... ரணப்படுத்தி... சின்னதாக இருந்தது நாளுக்குநாள் பெரிதாகி... ஐயோ அதையேன் கேட்கிறீர்கள். இரவில் தூக்கம் கெட்டு விடிய விடிய குத்து வலியென்று உபாதைப்பட்டு செத்தது போதுமென்று ஆஸ்பத்திரிக்குப் போனபோது... பட்டது எங்கேயோ கெட்டது எங்கேயோ என்ற மாதிரி ஒன்றல்ல மூன்று விரல்களை ஒரேயடியாக எடுத்து விட்டார்கள்.

அப்படியிருந்தும் "குளிசை போடுகிறீர்கள்தானே... பரவாயில்லை வீட்டில் திருநாளைக்குச் செய்தது'' என்று சீனிப்பனியாரத்தை நீட்ட, மனசில் வெடுக்கென்று பற்றிக் கொண்ட ஆசையின் நிமித்தம் ஒன்றே ஒன்று வாங்கிச் சாப்பிட்டுவிட்டு ஓய்விலிருந்தபோது திடீரென திடுக்குத்திடுக்கென்று பதைபதைக்க பிறகு சப்த நாடி அடங்கிப் போய்த் துடிப்பில்லாமல் ஐசி வார்டில் அனுமதித்து ஏழுநாள் சிகிச்சைக்குப் பிறகுதான் ஒருபடியாய் உயிர் வந்தது. இப்போது காலில் பந்தம் போல பெரிதாக ஆசுப்பத்திரி 'பென்டேஜ்' போட்டுக் கட்டி, ஒரு 'வீல்'ச்செயாரும் தந்து அனுப்பியிருக்கிறார்கள்.

கிட்டத்தட்ட கட்டிப்போட்ட நாய் மாதிரித்தான்.

"சாவுறது சரி.. நல்லாத் தின்னுட்டுச் சாவோம்'' என்றுதான் மனசு பத்தாம் பசலித்தனமாக அடித்துக் கொள்கிறது. வீட்டில் உள்ளவர்கள் இனிப்புச் சாப்பாட்டைக் கண்ணில் காட்டாமல் மறுப்பது பாசத்தினாலா கோபத்தினாலா? என்று நானே பட்டிமன்றம் நடத்திக்கொண்டிருப்பது...

"ச்சீ.. ஏன்தான் இந்த மனம் வக்கிரம் பிடித்து அழுகிறதோ?''

நேற்று முன்தினம் பரந்தாமன் பார்க்க வந்திருந்தான். பால்ய நண்பன். வெறுங்கையை ஆட்டிக்கொண்டு வந்தான்.

''என்னடா சேது... அடம் புடிக்கிறியாம்?"

எனக்கு அவன் நட்பின் மீது கோபம் வந்தது.

''நீயுமா நண்பா... அட எல்லாரும் சாவுறதுதானே... பிடிச்சத வாங்கிச் சாப்பிட்டு செத்துப் போறேன்டா."

''சேது... உன்னோட பிடிவாதம் எனக்குத் தெரியாதா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழிச்சாட்டியம் பண்ணாம பேசாதிரு."

அவன் அட்வைஸ் பண்ணப் பண்ண எரிச்சல் முட்டிக்கொண்டு வருகிறது.

''வேண்டாம்டா விட்டிரு. நீ என்னைப் பார்க்க வரயில்ல யென்டாலும் பரவாயில்ல. இப்பிடி உப்புச்சப்பில்லாம அட்வைஸ் பண்ணாதே."

அவன் போய்விட்டான். இப்போது வெளியாட்கள் யாரும் என்னைத் தேடி வருவதில்லை. அவ்வளவுதான். பிரியமில்லாமல் அழைப்பில்லாமல் இருப்பதன் வேதனை புதுசாக கொஞ்சம் கொஞ்சமாகத் தொற்றிக் கொள்கிறது.

வீட்டில் மகனும் மருமகளும் கண்ணுக்குக் கண்ணாகத்தான் வைத்துப் பார்க்கிறார்கள். வாரம் ரெண்டு தடவை குறிஞ்சா இலைக் கஞ்சி, குரக்கன் மாப்பிட்டு, காலையும் மாலையும் மெட்வோமின். இரவில் டைனோவில். நேரம் தவறாமல் மாத்திரை மருந்து. அத்தோடு பத்தியம் வேறு. இப்போது ஒரு தொந்தரவும் இல்லை. எனக்காக இல்லாவிட்டாலும் வீட்டில் இருப்பவர்கள் அலட்டிக் கொள்ளாமல் இருக்க வேண்டும் என்பதற்காகவாவது கொஞ்சம் கட்டுப்பெட்டியாய் இருக்க வேண்டும் என்று தீர்மானித்த போது தான் பட்டமரம் என்றால் வெட்டி முறிச்சிர வேண்டியதுதான் என்பது போல அது நடந்தது.

ரகுவிற்கு என்ன ஆய்ச்சுதோ? வழமையாக எல்லோருக்கும் அதைத் தின்னாதே இதைத் தின்னாதேயென்று வாய்ப்பூட்டுப் போடுகிறவன், இன்றைக்கு யாரோ வெளிநாட்டு நண்பர் கொடுத் தாராம் என்று 'டமாரம்' அடித்துக்கொண்டு பெட்டியொன்றைக் கொண்டு வந்தான். அது ஸ்வீட். கொக்கோ சொக்கலேட். நண்டு, கணவாய், இறால், சிப்பி, முத்து என்று அச்சொட்டாக வடிவமைக் கப்பட்டு சின்னதாக உருவங்கள். அத்தனையும் இனிப்பு.

நம்ம வீட்டு ஐயனுக்கு ஆகாதென்று தூரக்கொண்டு போகிறானா? அதுவும் இல்லை. வீல்செயாரை நகர்த்தி அறை வாசலில் நின்று பார்த்தால் கூடத்தில் நடப்பது அப்படியே தெரிகின்றது.

மருமகள் எடுத்துக்கொடுக்க பிள்ளைகள் அதை வாங்கிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்ப்பதும், சாப்பிடுவதும், சூப்புவதுமாக...

வாய் கேட்டால்தானே. நீர் ஊறுகின்றது. கண்களை மூடி... இதென்ன... மனசுக்குள் முக்குளிப்பா?

சொக்கலேட் வாசனை மூக்கைப் பிடிக்கிறது.

எத்துணை பெரிய 'ப்ரம உருவம்' ச்சீ... அற்பமாய் ஒரு சீனிப் பண்டத்திற்கு அலைபாயும் மனதைக் கட்டுப்படுத்த முடியாமல்... இனி எப்போதுதான் இப்பிடிக் கிடைக்குமோ? ஒருவேளை டொக்டர் "உங்கட சுகர் கண்டிசன் பரவாயில்லயே. எப்போதுமல்ல எப்போ தாவது சின்னதாய் கொஞ்சம் சாப்பிட்டால் ஒன்றும் பிரச்சினை யில்லை" என்று சொல்லிவிட்டால் ம்ஹூம்... இது நடப்பதாவது? அறுவது வயசு வாழ்ந்தாகி விட்டது. இப்படி ரணம் பிடித்த உடம்பை வைத்துக்கொண்டு இன்னும் வாழ்வது தேவையா?

பிள்ளைகள் பெற்று பேரர்களும் கண்டு விட்டாகி விட்டது. இனி என்ன? மனைவியும்தான் ஆசைப்பட்டாள் நான் பார்த்ததைக் கூட அவள் பார்க்கவில்லையே. செத்துத்தான் போனாள். ஒரு சொக்க லேட்டுக்காக எப்படித்தான் இந்த மனம் குறுகுறுக்கிறது.

மகனின் கடைசிப் பெண். தாத்தாவோடு எப்போதும் கொஞ்சு கிற பேத்தி. கையில் சொக்லேற்றோடு வருகிறது.

"தாத்தாவுக்கு குடும்மா."

தருகின்றது.

வாங்கும்போது மனம் உருட்டுகிறது "ஏய்... வேணாம்." ஆனாலும் கைக்குச் சொரணையில்லை. நீளுகிறது.

ஒரு விள்ளல். ருசித்து முன் பல்லால் நன்னி.. நாக்குநீரில் நனைத்து.. "பச்".. குளிர்ந்து கொண்டு அண்ணாக்கில் ஒட்டியதை நாக்காலேயே துருவி எடுத்து.. மீண்டும் வாய்க்குள் உமிழ்நீரில் கரையவிட்டு.. அது பானியாக..

"ச்சீ.. இதென்ன வயசுதான் ஏறியிருக்கே தவிர.. கொஞ்சம் புத்தியில்லாமல்.."

சூடாகப் பலமாக அடித்த மருமகளின் பேச்சுக்குப் பதில் சொல்லாமல் மிடறு விழுங்கிக்கொண்டு 'பேந்தப்பேந்த' என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்வார்களே அதுபோல முழித்துக் கொண்டிருப்பதில் தன்னையும் அறியாமல் கரைந்து உருகும் சுய கௌரவம்... வெட்கமாகத்தான் இருக்கிறது.

''காலில மூணு வீரல எடுத்தாச்சு. மாசத்தில ஒரு தடவை ஐசி வாட்டில படுத்திட்டு வாறதுக்கா...''

ரகுதான்... நெத்தியில அடிக்கிற மாதிரி பட்டென்று கதைக்கிறான். கையில் இருந்தது நழுவி கீழே விழுகின்றது.

வேறு வழியில்லை. ஈசிச்செயாரை உருட்டிக்கொண்டு அறைக்குள் போய் கதவைத் தாழிட்டுக் கொண்டாலும் பேய் மனம் இனிப்பைத் தேடி அலைவதைத் தடுக்க முடியவில்லை.

ஒரே நாளில் ஒரே நேரத்தில் தின்று முடிக்க முடியவில்லை. குசுனி டப்பாவொன்றில் மருமகள் பத்திரப்படுத்தி "நாளைக்கு...'' என்று உயரத்தில் கொண்டு போய் வைப்பது இந்த வயோதிப ஞானக் கண்ணுக்குத் தெரிகின்றது. இருக்கட்டும் பார்ப்போம்.

ஒரு நாளும் அன்பைப் பரிமாறியிருக்காத மருமகள், சமயம் வரும் போதெல்லாம் வார்த்தையால் புண்ணாக்கத் தவறுவதில்லை. "கிழடு... அலப்பில் திரியுது...'' சுரீர் என்று குத்துகிற வார்த்தைகளில் எல்லாம் இழந்து பரிநிர்வாணமாகி விடுவது போல... ரிட்டையராகி விடுவதற்கு முன்பு கூட அந்த ஆளுமை... இப்போது கண்ணுக்குள் வந்து நிற்கிறது. ''படு ஸ்மார்ட்... சேதுராமன் நடந்தால் சிங்கம் நடக்கிற மாதிரிக் கம்பீரம்." சொன்னவர் வாயில் சீனியள்ளிப் போட வேண்டும். ச்சீ... இதுவென்ன எப்போதும் சீனி... இனிப்பு என்று... வேறு என்ன செய்வது? தன்னைத்தானே கடிந்து கொள்வதும், சுருங்கிப் போவதும் இதைவிட செத்துப்போக... ஏன் சாக வேண்டும்? நன்றாகத் தின்று தீர்த்து விட்டுத்தான் அது எல்லாம்.

மேசையில் கிடக்கிற நீல நிற 'பைல்' அதுதான் என்னைப் பற்றி எழுதியிருக்கிற மெடிக்கல் 'ரிப்போர்ட்'. இந்தக் கூட்டுக்குப் பிடித்திருக்கிற உபாதைகளையெல்லாம் பட்டியல் போட்டு அந்த டொக்டர் எழுதி வைத்திருக்கிறான். கொலஸ்ரோல் என்று ஆரம்பித்து, பிரசர்... அல்சர்... இப்போது டயபட்டிக்... அச்சா! ஒரு குறைச்சலுமில்லாமல் நிறைந்து போய்க் கிடக்கிற வியாதி. அந்த பைலைப் பார்க்க ஆத்திரம் ஆத்திரமாய் வருகின்றது. ''கைகள் நன்றாகத்தானே இருக்கின்றது. இந்த பைலை எடுத்துக் கிழித்து எறி''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உச்சந்தலையில் ஆணியடித்தது போல ஒரு உபதேசம். சற்று நேரத்திற்குள் இந்த நீல பைலை எடுத்துக் கிழித்தெறிய எப்படித்தான் வேகம் வந்ததோ?

மன உளைச்சல் குறைந்திருந்தது. கிழிந்த 'பைலை' எடுத்துப் பொருத்திப் பார்க்க, பெருமூச்சுத்தான் வருகின்றது.

திரும்பவும் அந்த வெளிநாட்டுச் சொக்கலேற்றை மனம் வெட்கமில்லாமல் நினைக்கிறது. அது... மருமகள் சாப்பிட்டு மீதியைப் பொறுக்கி ஒரு பிளாஸ்ரிக் டப்பாவில் போட்டு குசினியின் 'கொங்கிறீட்' அலுமாரியின் மேல் முதல் தட்டில் பத்திரமாய் வைத்திருக்கிறாள். கை துறுதுறுவென்றிருக்கிறது. மெதுவாக வீல்செயார் அனிச்சையாகவே கூடத்திற்கு உருள... மத்தியானம் வீட்டில் யாரும் இருப்பதாகத் தெரியவில்லையே. மகன் வேலைக்குப் போய்விட்டான். மருமகள் வெளியில் எங்கேயோ போயிருக்கிறாள். குழந்தைகள் இல்லை. பள்ளிக்கூடம் போய் விட்டார்கள்.

மெதுவாக... மெதுவாக் 'வீல் செயார்' குசினிக்குள்ளேயே நகர, 'தோ அலுமாரியின் மேல் தட்டில் இருக்கும் டப்பாதான்' கிட்ட நகர்ந்து... முக்காலியை இழுத்து எடுத்து அருகில் வைத்து, முக்காலியில் ஒரு கால்... வீல்செயாரில் ஒருகால்... போதும். கை எட்டக்கூடியதுதான். டப்பாவை எடுத்து மூடியைத் திறந்து அதே வாசனை. சொக்கலேட். கையை விட்டு பெரிதாக ஒன்றை எடுத்து வாயில் வை...க்...க... அட...டா...ச் செயார்தான் உருளுகின்றது. ஐயோ! அட... விழுந்து... ஐயோ... பதறிக் காலை நகர்த்த, ஐயோ... விழுகின்ற போது 'ணங்' தலையில் முட்டியது கொங்கிறீட்தான். அவ்வளவுதான் நினைவு தப்பும்போது பிடரியில் ஈரமாய்... சிவப்பு... கண் பஞ்சடைந்து சாய ஓ... உயிர் போகிறதோ? இதென்ன பெரிய நோவென்று ஒன்றுமில்லாமல்... தலையை சாய்த்துக் கீழே...

**– காலநதி – 2006 நவம்பர் –**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யன்னலோரமாய் இருந்துகொண்டு தூரமாய்ப் பார்த்தேன்.

வானத்தை இறக்கிவிட்ட மாதிரி... வெளிச்சுப் போய் இருக்கிறது. ஒரே நாளில் வேக வேகமாக அடர்ந்திருந்த தெருவோரத்து வேப்ப மரத்தையெல்லாம் வெட்டி சங்காரித்துக் கொண்டு போகின்ற அந்த மிருகம் போன்ற பெரிய வாகனத்தைப் பார்க்க எரிச்சல் எரிச்சலாய் வந்தது.

இந்த ஊருக்கு செழிப்பும் அழகும் வேம்புதான். அதனை எல்லாரும் மருத்துவ மரம் என்று கொண்டாடு

# மாற்ற மயக்கம்

கிறபோது இந்த ஆர் டிஓ காரன்களுக்கு மட்டும் அது புத்தியில் உறைக்காததுபோல வேரோடு வெட்டிச் சாய்த்துக்கொண்டு போகிறார்கள். றோட்டை அழகு படுத்துகிறார்களாம்.

முன்பெல்லாம் சாலையின் ஒரு கோடியில் நின்று பார்த்தால் ஒற்றையாக யாரோ ஒருவர் போய் வருகிறதைத் தான் பார்க்க முடியும். இப்போது என்னடாவென்றால் எங்கிருந்துதான் முளைத்தார்களோ, இத்தனை பேர். காலையில் இருந்து மாலை வரை அதுவும் விதவிதமான வாகனங்களோடு. இது எங்கள் ஊர் எங்கள் கடற்கரை என்று சொந்தம் கொண்டாட முடியாதபடி கடற்கரைக் காணியை எல்லாம் யாரோ அள்ளி வீசுகிற கற்றைக் காசு களுக்கு விற்றுக் கொண்டிருக்கிறார்களாம். எனக்கு என்னவோ கடற்கரை கிட்ட வந்தது போல இருக்கிறது. அப்படியே எல்லாவற்றையும் கபளீகரம் செய்து விட்டால் பரவாயில்லைப் போல இருக்கிறது. யுத்தம் முடிந்த பின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடகடவென்று சடுதியாக மாறுகின்ற கோலங்களைப் பார்க்கும் போது மனசுக்குள் பயம் தொற்றிக்கொள்ளுகிறது. புதுசு புதுசாக நாளுக்கு நாள் தோன்றுகிற உல்லாச விடுதிகளும், ஹோட்டல்களும் திரும்பவும் தலைமன்னார், இராமேஸ்வரம் கப்பல் ஓடப்போவதாகச் சொல்லுகிறார்கள். இப்போதே கடற்கரைப் பக்கம் ஊர்ப்பொண்டுகள் கருவாடு காயப் போடவும் போக முடியுதில்லையாம். யாரோவெல் லாம் அசிங்கமாகப் பார்க்கிறார்களாம். வீட்டு ஆம்புளைகளே பொண்டுகளை மறிச்சிப் போட்டாங்கள். யுத்தம் நின்று போனால் எல்லாம் சரியாகிப் போய்விடும் என்று நினைத்ததெல்லாம் பொய் தானோ?

வித்தியா முதல்நாள் வேலைக்குப் போகவெளிக்கிட்டபோது பொட்டக்குட்டி வேலைக்குப் போறாளென்று கவலையாகத்தான் இருந்தது. கொஞ்சநாள்தான். வீட்டுக்கு வசதி வந்தபோது சந்தோசமாத்தான் எல்லாரும் எல்லாத்தையும் அனுபவிச்சோம். ஆனால், இப்போ... வித்தியாவின் போக்கை நினைக்கிறபோது நெஞ்சு குமுறுது. இவள் வீட்டிலிருக்கிற போது அவள் தம்பீ அனந்து வுடன் போடுகிற சண்டைக்கு காரணம் புரியாமலிருந்தது. அவனும் அப்படித்தான் பள்ளிக்கூடம் விட்டு நேராக வீட்டுக்கு வருகிறா னில்லை. அவனும் அவளைப் போலவேதான் ஊர் சுற்றிவிட்டு பிந்திப் பிந்தித்தான் வருகிறான். இப்போதெல்லாம் அவன் தேவையை அவனே பார்ப்பது போலவே கையில் காசுப் புழக்கம். கேட்டால்,

''கடக்கரையில வெள்ளக்காரனுக்குத் தண்ணி வித்த காசு'' என்கிறான். ஆம்பிளப் புள்ள நேரஞ்செண்டு வந்தாப் பரவாயில்ல. பெண்பிள்ளை வீட்டுக்குப் பிந்தி வருவதுதான் எனக்கு வேதனையாக இருந்தது.

உதட்டுக்கு சாயம் பூசிக்கொண்டிருந்த வித்தியாவிடம் கேட்டேன், "ராத்திரி பதினொரு மணிக்குப் பிறகு வெளியில என்ன வேலை?''

வித்தியா பதிலொன்றும் பேசாதிருந்தாள்.

''பொம்புளப்புள்ள நேரஞ்செண்டு வாறது சரியில்ல.''

உதட்டுக்கு சாயம் பூசுவதை நிறுத்தாமலே வித்தியா சொன்னாள். "அப்ப வேலைக்குப் போகாமல் விடட்டோ?'' எனக்கு என்ன பதில் சொல்லுவதென்றே தெரியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மௌனம். அனிச்சையாகவே நான் என் காலைப் பார்த்தேன். வலது முழங்காலுக்கு கீழே வெட்டி மழுக்கி விட்ட இடத்தில் ஒரு பிடிப்புமில்லாமல் சுருங்கிப்போய், பார்க்க என்னவோ போலிருக் கிறது. வீல்செயார் உபயம் வாழ்வுதயம்.

தாயில்லாப் பிள்ளைகளை நினைத்து தவித்த போதுதான் வித்தியா பிழைக்கப் போகிறேன், உழைக்கப் போகிறேன் என்று வெளிக்கிட்டாள்.

வித்தியா வேலைக்குப் போனதற்குப் பிறகு குடித்தனத்துக்குத் தேவையானது எல்லாமும்தான் தாராளமாய் கிடைக்கிறது என்றாலும் ஒவ்வொரு நாளும் நெஞ்சைப் பிடித்தபடிதான் வாழ்க்கை போகின்றது. இப்போது நான் ஏதும் ஏடாகூடமாய்ச் சொல்லி, எங்கே வித்தியா வேலைக்குப் போகாமல் விட்டு விடுவாளோ? படக்கென்று பயம் வந்து ஒட்டிக்கொண்டது. ஆனாலும் என் பொன்னத்தனத்தை நினைத்து மனசு கருகியது. வீட்டுக் குமர்ப்பிள்ளையை வேலைக்கு அனுப்பிச் சாப்பிடும் எனக்கு ஏன் அவளிடம் இந்த வேண்டாத கேள்வி யெல்லாம். பொருமிக்கொண்டு மீண்டும் யன்னல் பக்கமாய் வீல்ச் செயாரை உருட்டினேன். தூரத்தில் கடல் தெரிந்தது. உயரமாய் எழுந்து கரையில் மடியும் மார்சா அலைகள். திரும்பிப் பார்த்தேன். வித்தியா வாசல் தாண்டிப் போயிருந்தாள். இப்போது இந்தத் தெருவில் இருந்தே ஐந்தாறு பெண் பிள்ளைகள் வித்தியாவைப் போன்று வேலைக்குப் போகத் தொடங்கியிருந் தார்கள். கடற்கரையில் புதிதாகக் கட்டியிருந்த ஸ்டார் ஹோட்டலில் தான் வேலையாம். நடைமாறி உடைமாறி ஒரு தினுசாகத்தான் எல்லாம் தெரிகின்றது. வழக்கத்துக்கு மாறாக பின்னேரம் நான்கு மணிக்கெல்லாம் வீட்டுக்குள் நுழைந்த வித்தியா கைப்பையைக் கட்டிலில் வீசியெறிந்துவிட்டு படபடவெனப் பொரிந்தாள்.

அவள் கோபத்துக்கு காரணம் என்னவென்று தெரியவில்லை. வீட்டுக்குப் பின்னால் கிணற்றடிக்கு முகம் கழுவவென்று வந்தவள், வேலியைத் தாண்டி பக்கத்து வீட்டு அனுஜாவைக் கூப்பிட்டாள். வந்த அனுஜாவின் முகமும் உற்சாகமிழந்துதான் இருந்தது.

"கோல் கிடைச்சுதா?"

"இல்லையே..."

"இப்ப கேர்ள்சுக்கு கோலிங் வாறது குறைவு பார்த்தியா?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஓம்... வெள்ளக்காரன்களுக்கு சின்னப் பொடியன்கள் வேணுமாம்.''

வித்தியாவுக்கு தன் தம்பி அனந்துவை நினைக்கப் பயமாக இருந்தது. மறுபடியும் வீட்டுக்குள் வந்தவள் தம்பியைத் தேடினாள்.

நான் பொறுக்காமல் கேட்டேன்.

"யாரைத் தேடுறாய்?''

"இவன் தம்பி எங்க..?''

"அவனும் உன்னப் போலத்தான். இங்க எங்க நிக்கிறான். ஊர் சுத்துறான்.''

சினந்து என்னைப் பார்த்தவள், என்ன நினைத்தாளோ அவசர மாய் வெளிக்கிட்டு வெளியே போனாள். அவள் போகிறதைப் பார்த்து என் வீல்ச்செயாரும் தலைவாசலுக்கு உருண்டது. வெளியில் தெருவில் யாரோ பேசிக்கொண்டு போவது கேட்டது.

"சின்னப் பொடியன்கள் நாலு பேர பொலிஸ் பிடிச்சுக்கிண்டு போகுது.''

"ஏனாம்?''

"யாரோ ஒரு பயலுக்கு எய்ட்சாம்.''

எனக்குத் 'திகீர்' என்று இருக்க சடுதியாக நெஞ்சு வலித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எஸ்.ஏ.உதயனின் படைப்புகளை முன் வைத்து பின்னுரையாக சில குறிப்புகள்

**- மேமன்கவி -**

நண்பர் உதயன் ஈழத்து தமிழ் புனைகதைத் துறையில் நன்கு அவதானிக்கப்பட்டு வருபவர். இதற்கு காரணம் இதுவரை காலம் அவர் வெளியிட்ட நாவல்கள் பெரும்பாலானவை பல்வேறான விருது களை பெற்றவை என்பதற்காக அவதானிக்கப்படு கிறார் என்பதற்கு இதை கூறவில்லை. அதற்கு மேலாக அப்படைப்புகள் பேசிய விடயங்கள், அவை வெளிப்பட்ட விதங்கள் என்பவற்றால் அவர் அவதானிக்கப்பட்டுள்ளார் என்பதுதான் நிதர்சனம்.

**"குண்டு சேர்"** என்ற இந்த சிறுகதைத் தொகுப்பு அவரது முதலாவது சிறுகதைத் தொகுப்பு என்பது குறிப்பிடத்தக்கது. சிறுகதை என்பது பல்வேறு சஞ்சிகைகள், பத்திரிகைகளில் படிக்கப்பட்டாலும், குறித்த ஒரு படைப்பாளியின் சிறுகதைகள் ஒரு தொகுப்பாக பயிலப்படும் பொழுது, அப்படைப் பாளியை பற்றிய ஒரு படிமம், வாசக-அனுபவ வெளி யில் உருவாக்கம் பெறுகிறது என்பது ஏலவே நாம் படித்த பாடமாக இருப்பினும், இன்றைய சூழலில் வாசிப்பின் அரசியல், பிரதியின் அரசியல் என்பன வற்றின் பிரக்ஞை வளர்த்திருக்கும், முன் நிறுத்தப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டிருக்கும் சூழலில், தனியாகவோ, தொகுப்பாகவோ ஒரு படைப்பாளியின் ஒவ்வொரு படைப்பும் தனி பிரதியாக பயிலப் படும் பொழுது, வாசகனின், விமர்சகனின் வாசிப்பின் ஊடாக ஒரு படைப்பாளியின் ஒரு பிரதி விசாரிக்கப்படும் பொழுது, அப்படைப்பாளியை பற்றிய படிமமானது பல்வேறு கோணங் களில் முன் நிறுத்தப்படும் அனுபவம் சாத்தியமாகிக் கொண்டி ருக்கிறது.

அத்தகைய அனுபவவெளி நின்று அவரது இத்தொகுப்பி லுள்ள பிரதிகளை **நான் வாசித்த** பொழுது, கிடைத்த அனுபவத்தை பகிர்ந்து கொள்வதே இப்பின்னுரையின் நோக்க மாகுகிறது.

இத்தொகுப்பில் அமைந்திருக்கும். 15 கதைகளும் 15 விடயங்களை பேசி இருப்பதாகத் தோற்றம் தந்தாலும், ஒரு சில வகைகளாகப் பிரித்து பார்க்கும் தன்மைகளை அக் கதைகள் கொண்டிருக்கின்றன. அந்த வகையில் இன்றைய நமது வாழ்வியலை சுற்றி இருக்கின்ற குறிப்பிட்ட ஒரு விடயத்தை, மீண்டும் மீண்டும் வெவ்வேறு வார்த்தைகளில் பேசாது, பல்வேறு விடயங்களை அக்கதைகளில் உதயன் பேசி இருப்பது சிறப்பான, பாராட்டதக்க ஓர் அம்சம் எனலாம்.

அவ்விடயங்களை பேசி இருக்கின்ற விதங்களை ( உதயன் என்ற கதை சொல்லியிலிருந்து விலகி) ஒரு வாசக - விமர்சன அனுபவத்தில் இருந்து பார்க்கின்ற பொழுது, அவற்றியில் ஒருமைப்பாட்டையும், முரண்பாட்டையும், சிறப்பையும் பலஹீனத்தையும் நம்மால் கண்டு கொள்ள முடிக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த ஒருமைப்பாடும், சிறப்பும் ஒரு கதை சொல்லியின் ஆளுமையின் பலத்தைக் காட்டி நிற்கின்றன என்றால், அந்த முரண்பாடும் பலஹீனமும்தான் ஒரு கதை சொல்லி தன் பாத்திரங்களை கை விடுகின்ற, சரியாக பராமரிக்காமல் விட்ட நிலையினை நமக்கு அடையாளப்படுத்துகின்றன.

இத்தகைய நிலைகளுக்கு கதை சொல்லி எந்த இடத்தில் நின்று பேசுகிறார் என்ற கேள்விக்கான (அதாவது கதை சொல்லி தன்னிலை நின்று அப்பிரதியில் ஒரு பாத்திரமாக வரு கிறாரா? அல்லது படர்க்கையில் நின்று அப்பிரதியின் கதை யோட்டத்தின் ஒரு பார்வையாளராக வருகிறாரா? என்ற மாதிரியான) பதிலும் கணிசமான அளவுக்கு பங்கு வகிக்கிறது என்பது எனது அப்பிராயம்.

அதேவேளை தன்னிலை நின்றோ அல்லது படர்க்கை நிலை நின்றோ ஒரு கதை சொல்லி ஒரு கதையை நகர்த்தி செல்லும் பொழுது, எதிரில் இருக்கின்ற பாத்திரத்தின் மன நிலையை, உள்மன ஓட்டத்தை சித்திரிப்பது என்பது யதார்த்தத்திற்கு முரணாகாமல் சித்திரிப்பது என்பதுதான் கதை சொல்லியாக இயங்குகின்ற படைப்பாளியின் திறனாகும்.

இத்தகைய சிந்தனையின் தளத்தில் நின்று உதயனின் கதைப் பிரதிகளை நான் அடையாளப்படுத்திக் கொண்ட அனுபவத்தையே இங்கு பதிவு செய்து இருக்கிறேன்.

விரிவஞ்சி எல்லாக் கதைகளையும் பல்வேறு வகைப் படுத்தி பார்க்காது இரண்டு வகையான சிந்தனைகளின் கீழ் ஒரு சில கதைகளை பற்றி பேசலாம் என் நினைக்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. வன்முறை - நேயம் (நேயம் என்று சொல்லும் பொழுது, தன் மாணவன் மீதான அன்பு, தாய்ப்பாசம், கணவன் மீது கொண்ட காதல், பிள்ளை மீதான அக்கறை) என்ற எதிர்வு உதயனின் பிரதிகளில் செயற்படும் விதம் அல்லது இவ் விரண்டில் ஒன்று செயற்படும் விதம்.

2. பெண்ணியப் பார்வையில் அவரது பிரதிகள், நோக்க முடிந்த, நோக்க முடியாமல் போன பிரதிகள்.

வன்முறையில் தொடங்கி நேயத்தில் முடிகின்ற பிரதிகள், நேயத்தில் தொடங்கி வன்முறையில் முடிகின்ற பிரதிகள், வன்முறை அல்லது நேயம் இரண்டில் ஒன்று தொடர்ந்து நிலவு கின்ற பிரதிகள் என உதயனின் 15 பிரதிகளை திறந்து பாரக்க லாம்தான். ஆனால் விரிவஞ்சி பின்வரும் நான்கு கதைகளை மட்டும் எடுத்துக்காட்டுக்காக எடுத்துக் கொள்கிறேன்.

1. **குண்டு சேர்**

2. **காணாமல் போனவன்**

3. **ஸ்கொலர்சிப் சோதினை**

4. **காத்திருப்பு**

**குண்டு சேர்** கதை வன்முறையில் தொடங்கி நேயத்தில் முடிக்கிறது. **ஸ்கொலர்சிப் சோதினையோ** வன்முறையில் தொடங்கி, தொடரும் வன்முறையில் முடிகிறது. **காத்திருப்பு** தாய்ப்பாசம் என்ற நேயத்தில் தொடங்கி, சொல்லி கொள்ளாமல் தன்னை சுற்றி என்ன நடக்கிறது என்ற அவலத்திற்கு ஆளாக்கி அந்த தாயை நடுத்தெருவில் விடுவதோடு முடிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காணாமல் போனவன்** கதையோ காணாமல் போன கணவன் மீது காதல் கொண்ட மனைவி, இறுதியில் அவன் மனப் பிறழ்வுக்கு ஆளானவன் என்று அறிகின்ற பொழுது அவனை அடையாளப்படுத்தாமலே திரும்புகின்றதுடன் முடிகிறது.

இப்படியாக உதயனின் கதைகளில் வன்முறை நேயம் என்பன மேலிருந்து கீழாகவோ கீழிருந்து மேலாகவோ இடப்பெயர்ச்சி செய்கின்றன.

ஆனால், ஒரு வாசகன் என்ற வகையில், கதைகளில் வரும் ஒட்டுமொத்த வன்முறையை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. உதயன் அவர்களாலும் இந்த வன்முறையை ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்பதற்காகத்தான் அவர்களை முக்கியப் பாத்திரங்களாக படைத்திருப்பது அவர்கள் செலுத்தும் வன்முறையை அடையாளம் காட்டத் தான் என்பதையும் நாம் புரிந்து கொள்ளத்தான் செய்கிறோம்.

அதேவேளை, அத்தகைய பாத்திர வார்ப்பின் மூலமும், அவர் தம் நடத்தைகளின் மூலமும், அவர்கள் கையாளும் வன் முறைகளுக்கு நியாயம் கற்பிக்கவோ, அதனை எதிர்க்கவோ செய்து இருக்கிறரா என்பதை இந்த நான்கு பிரதிகள் ஊடாக பார்க்கின்ற போது, **குண்டு சேர்** என்ற கதையில், அடிக்கிற கைதான் அணைக்கும், அவர் அடிப்பது அவனது நலத்திற்குத் தான் என்ற கருத்துப்பட அந்த மாணவனுக்கு குண்டு சேர் செய்யும் சேவையுடன் முடிக்கிறார். அதேமாதிரி **ஸ்கொலர்சிப் சோதினை**யில் வரும் தாய் என்ற பாத்திரம் தனது சமூக அந்தஸ்துக்காக மட்டும் அல்லாமல் தனது பிள்ளை நல்ல படிப்பாளி என்ற பெயரை வாங்க வேண்டும் என்பதற்காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளை அறியாமலே செலுத்திய வன்முறையின் (குண்டு சேர் தெரிந்தே செலுத்திய வன்முறையிலிருந்து இது வேறுபடுகிறது) விளைவாக அவன் மனப்பிறழ்வுக்காரானக மாறினாலும், அவனை சமூகத்திற்கு காட்டி கொடுக்காது, தலையில் சாதாரண அடி பட்டதனால் பிள்ளையால் படிக்க முடிய வில்லை என்பது கூட ஒரு வகையான நேயம்தான். ஆக, இந்த கதையிலும் குண்டு சேர், தாய் ஆகிய இருவரும் தெரிந்தோ, தெரியாமலோ செலுத்திய வன்முறையிலோ சுயநலம் (மேலேழுந்தவாரியாக பார்க்குமிடத்து **ஸ்கொலர்சிப் சோதினை**யில் தாயின் நடத்தையில் ஒரு சுயநலம் இருந்தாலும், குண்டு சேரின் நடத்தையில் கொஞ்சமும் சுயநலம் இல்லை என்பது வேறு விடயம்) இல்லை.

ஆனால், **காணாமல் போனவன்**, **காத்திருப்பு** ஆகிய இரு கதைகளில் வரும் முறையே மனைவி, மகன் இருவரது நடத்தையில் முழுக்க முழுக்க சுயநலம் வெளிப்படுகிறது.

இவ்விடத்தில்தான் கதை சொல்லியின் பாத்திரங்களை சரியாக வார்த்தல் அல்லது தொடர்ந்து பிரக்ஞைபூர்வமாக கண்காணித்தல் அல்லது பராமரித்தல் பற்றி பேச வேண்டி இருக்கிறது.

**குண்டு சேர், ஸ்கொலர்சிப் சோதினை** ஆகிய கதைகளில் குண்டு சேர், தாய் (இவரது பாத்திர வார்ப்பில் இருக்கும் **Sharpness காணாமல் போனவன், காத்திருப்பு** ஆகிய கதை களின் பாத்திரங்களான சுந்தரி, சூசை ஆகிய பாத்திரங்களில் இல்லை) அவ்விருவரது பாத்திர வார்ப்பின் முன் பகுதிகள் அவர் தம் இறுதி நடத்தைகளிலிருந்து, அவர்களுக்குள் கதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லி ஏலவே கட்டமைத்த குணாம்சங்களுக்கு முற்றும் முழுதுமான நிலையில் முரண்பட்டு விடுகின்றன. இது கதை சொல்லி தன் பாத்திர வார்ப்பின் மீதான பிரக்ஞையை சற்று குறைத்து கொள்ளும் இடமாக இருக்கிறது.

அவ்வாறான ஒரு பாத்திர வார்ப்பின் முரண்பாடு பற்றி உதாரணமாக பேசலாம். **ஆசை மரிப்பு** எனும் கதையின் மையப் பாத்திரமான மாமனார் அக்கதையின் ஓர் இடத்தில் தன் மகனை பற்றியும், மருமகளை பற்றியும் மிக உயர்வாய் சொல்லும் அவர், சிறிது நேரத்தில் மருமகளைப் பற்றி சொல்லும் பொழுது, அவள் அவரை மகா மோசமாக நடத்துவதாக கூறுகிறார். இது எதைக் காட்டுகிறது என்றால், கதை சொல்லி தன் பாத்திர வார்ப்பில் கவன குவிப்பை சற்றுக் குறைத்து கொண்டமையைத்தான்.

அடுத்து, உதயனின் இக்கதைப் பிரதிகள் எந்த அளவுக்கு பெண்ணியப் பிரதிகளாகுகின்றன? ஆகாமல் விடுகின்றன என்ற தேடலும் எனது ஆர்வத்திற்குரியதாக இருக்கிறது.

அதற்காக இத்தொகுப்பில் அமைத்துள்ள

1. **அபத்தம்**

2. **யசோதா**

3. **காணாமல் போனவன்**

4. **கடற்குளிப்பு**

ஆகிய பிரதிகளை தேர்தெடுத்து இருக்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த ஆர்வத்தின் நோக்கில் பார்க்குமிடத்து **காணாமல் போனவன், அபத்தம்** போன்ற கதைப் பிரதிகள் அதன் பாத்திர வார்ப்பில் முன்-பின் முரண்பாடுகள், அக்கதைப் பிரதிகளின் திடீர் முடிவுகள் போன்றவற்றின் காரணமாக அவை பெண்ணியப் பிரதிகளாக மாறுகின்ற சந்தர்ப்பத்தை இழந்து விடுகின்ற பொழுதும், இன்றைய சமூக கட்டமைப்பில், பெண்ணின் நிர்ப்பந்தம், நிலை போன்றவைகளை சித்திரிக்கும் பிரதிகள் என்ற வகையில் கவனத்திற்குரியவையாக இருக் கின்றன.

அடுத்து பௌத்த சமய கருத்துருவத்தின் ஒரு பாத்திர மான யசோதா பற்றி பேசுகின்ற, அப்பாத்திரத்தை மறு வாசிப் பின் நோக்கில் நிலைநிறுத்த முனைகிற **யசோதா** எனும் கதைப் பிரதி பெண்ணிய வாசிப்பில் வாசிக்க கூடிய பிரதியாக வெளிப்படுகிறது. யசோதா எந்த நோக்கத்துடன் புத்தரை நோக்கி வருகிறாளோ அதில் ஒரு தடுமாற்றம் அப்பிரதியாக்கத் தில் வெளிப்பட்டாலும், **"இரவோடு இரவாக விட்டுப் பிரிந்த உங்களிடம் பகல் பொழுதில் சொல்லிவிட்டுப் பிரிவதற் காகவே நான் வந்தேன்..."** என்று சொல்லுகின்ற ஒரு வகை யான கலகத் தன்மையுடனான சொல்லாடலுடன் முடிகின்ற பொழுது அப்பிரதி பெண்ணியப் பிரதியாகத் தன்னை தக்க வைத்துக்கொள்கிறது.

அதேவேளை **கடற்குளிப்பு** எனும் கதைப் பிரதி கதை சொல்லி அறியாமலே அதுவொரு முழுமையான பெண்ணியப் பிரதியாக வெளிப்பட்டு நிற்கிறது. அக்கதையின் நாயகியான ஆனந்தி தன்னைப் பற்றிய கணவனின் அலட்சியம், கவனிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காமை என்பதன் விளைவான அவளது உணர்வு அப்பிரதியின் ஆரம்பம் தொடக்கம் இறுதி வரை தக்கவைக்கப்பட்டு இருப்பது மூலம், அதுவும் யசோதாவில் **"இரவோடிரவாக விட்டுப் பிரிந்த உங்களிடம் பகல் பொழுதில் சொல்லி விட்டுப் பிரிவதற்காகவே நான் வந்தேன்..."** என்ற நீண்ட சொல்லாடலில் வெளிப்படும் கலகத் தன்மையில் இருக்கும் வன்மத்தை விட, **கடற்குளிப்பு** பிரதி முடியும் '**சீ**' என்ற ஒற்றை சொல்லில் வெளிப்படும் வன்மம், அதிக அளவான கலகத் தன்மை மிக்கதாக வெளிப்படுவதன் மூலம் அப்பிரதியினை ஒரு சிறந்த பெண்ணியப் பிரதியாக மாற்றி விடுகிறது.

இறுதியாக இத்தொகுப்பில் இணைக்கப்பட்டுள்ள '**மாற்ற மயக்கம்**' எனும் கதைப் பிரதியைப் பற்றித் தனியாக சொல்ல வேண்டும்.

போருக்குப் பின்னான வடபுலத்து இருப்புச் சூழலில் ஏற்பட்டிருக்கும் ஒரு மாற்றத்தைப் பற்றி அப்பிரதி பேசுகிறது.

ஆனால், ஏற்கனவே உலக மயமாக்கல், திறந்த பொருளாதாரம் போன்றவைகளின் நுழைவுகள் இந்த மண்ணில் பரப்பி விட்ட சமூக ரீதியான வைரஸ் பற்றி பேசுவதுதான் '**மாற்ற மயக்கம்**' எனும் இக்கதை பிரதி. போர்க் காலத்தில் அத்தகைய வாழ்வு நிலை வைரஸை பரப்ப அந்த சக்திகளுக்கு கிடைத்திராத சந்தர்ப்பம் – வெளிப் போருக்கு பின்னான நிலையில் கிடைத்து இருக்கிறது என தெரிகிறது.

எனக்கு இப்பிரதி எழுப்பிய கேள்வி. அந்த சக்திகளுக்கு அத்தகைய சந்தர்ப்பம் – வெளிப் போர் காலத்திலோ அல்லது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கு முன்னான காலத்திலோ கிடைக்காமல் போனதற்கு காரணம், பாதுகாப்புயின்மை மட்டும்தான் காரணமாக அமைந்ததா? அல்லது அதற்கு மேலான வேறு சில காரணங்கள் இருந்தனவா? என்ற கேள்வியினையும் இப்பிரதி எழுப்பி விடுகிறது.

இவ்வாறாக இத்தொகுப்பில் அமைந்துள்ள, நாம் எடுத்துக் கொண்ட பிரதிகளை மட்டுமல்லாமல், மீதமுள்ள எல்லா பிரதிகளையும் இத்தகைய பல வாசிப்புகளிலும் வாசிக்கலாம். பன்முக வாசிப்புக்கு ஆட்படும் வகையில் திறந்த நிலையில் இப்பிரதிகளை தந்திருப்பது உதயன் என்ற படைப்பாளியின் ஆளுமையையே எடுத்துக் காட்டி நிற்ப தோடு, இத்தொகுப்பு பேசப்பட வேண்டிய ஒரு தொகுப்பாகவும் மாற்றியும் இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலரின் பார்வையில்.......

உதயனின் சிந்தனைகளும் எழுத்துக்களும் அநீதிகளுக்கெதிராக எறியப்படும் குறி தவறாத வேல்கள் என நாக்கு பிறழாமல் கூற முடியும் – **(எஸ்.டேவிட் எழுத்தாளர்.கட்டுரையாளர் – லோமியா நாவல் அணிந்துரையில் .............)**

எழுத்தை ஆளும் சக்தி கொண்டவர் எஸ்.ஏ.உதயன் – **(வாசாப்பு நாவல் அணிந்துரையில் தெளிவத்தை ஜோசப்)**

மனித வாழ்க்கையையும் அது தோற்றுவிக்கும் சமுதாய முரண்பாடுகளையும் உள் நின்று நோக்கி தாம் சொல்ல வந்த கருத்தை அழகியல் அடிப்படையில் ஆக்கும் சக்தி கொண்டவராகவே நாவல் ஆசிரியர் முன் தெரிகின்றார் – **(சொடுதா நாவல் அணிந்துரையில் லெனின் மதிவாணம்.)**

வாசாப்பு நாவலாசிரியர் எஸ்.ஏ.உதயனின் எழுத்தின் ஆண்மையே அவரை நேசிக்க வைக்கும் – **(சட்டத்தரணி சோ.தேவராசா பொதுச்செயலாளர் – கலை இலக்கியப் பேரவை தினக்குரல் 03 – ஜனவரி – 2011)**

ஈழத்தமிழர் வரலாற்றின் மங்கிய வாழ்வை கூறும் மங்காத ஒளிர் ஆவணம் தெம்மாடுகள் நாவல் சமூக யதார்த்தத்தை குத்திக் காட்டும் குலையாத வரி வடிப்புகள் ஆழம் மிக்கதான கருப்பொருள் – **(எஸ்.செல்வா விமர்சகர் தினக்குரல் 03 ஜனவரி 2010)**

முதிர்ந்த பழுத்த அனுபவங்களையும் நீரோட்டம் போன்ற மொழி வாண்மையையும் கூர்மையான சமூகப் பார்வையையும் புவியியல் வரலாற்றுப் புரிதல்களையும் எஸ்.ஏ.உதயனின் படைப்புக்களில் அவதானித்தேன் – **(கே.ஆர்.டேவிட் எழுத்தாளர் விமர்சகர்)**

உதயனின் பாத்திரப் படைப்புக்கள் யதார்த்தத்துடனும் உயிர்ப்புடனும் இருப்பதுடன் வாசித்த பின்னரும் எம்முடன் கூடவே வரும் – **(ஞாயிறு தினக்குரல்18 ஜனவரி 2009 கார்த்திகேயினி சுபாஷ் எழுத்தாளர் விமர்சகர்)**

உதயனின் நூலை வாங்கிவிட்டு அதை வாசிக்காமல் வைத்து விட முடியாது – **(வீரகேசரி ஜனவரி 01 – 2011)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ion.



# குண்டு சேர்

## எஸ். ஏ. உதயன்

எழுத்தை ஆளும் சக்தி கொண்டவர் எஸ். ஏ. உதயன்.

-தெளிவத்தை ஜோசப்-

முதிர்ந்த பழுத்த அனுபவங்களையும் நீரோட்டம் போன்ற மொழிவாண்மையையும் கூர்மையான சமூகப் பார்வையையும் புவியியல் வரலாற்றுப் புரிதல்களையும் எஸ். ஏ. உதயனின் படைப்புக்களில் அவதானித்தேன்.

-கே. ஆர். டேவிட்-

வாசாப்பு நாவலாசிரியர் எஸ். ஏ. உதயனின் எழுத்தின் ஆண்மையே அவரை நேசிக்க வைக்கும்

-சட்டத்தரணி சோ. தேவராசா-

மனித வாழ்க்கையையும் அது தோற்றுவிக்கும் சமுதாய முரண்பாடுகளையும் உள்நின்று நோக்கி தாம் சொல்ல வந்த கருத்தை அழகியல் அடிப்படையில் ஆக்கும் சக்தி கொண்டவராகவே நாவல் ஆசிரியர் முன் தெரிகின்றார்

-லெனின் மதிவாணம்-

உதயனின் பாத்திரப் படைப்புக்கள் யதார்த்தத்துடனும் உயிர்ப்புடனும் இருப்பதுடன் வாசித்த பின்னரும் எம்முடன் கூடவே வரும்.

-கார்த்திகேயினி சுபாஷ்-

உதயனின் நூலை வாங்கிவிட்டு அதை வாசிக்காமல் வைத்துவிட முடியாது.

-வீரகேசரி-

350/-

ISBN 978-955-30-3790-9

எஸ். கொடகே சகோதரர்கள் பிரைவட் லிமிடட்
661, 665, 675, மருதானை வீதி, கொழும்பு 10.
தொலைபேசி: (011) 2685369, 2686925, 4-614904
godageem@slt.lk www.godage.com

9789553037909

அட்டைப்படம் மேமன்கவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org